20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 24

★ உதயன்

சுடர் 27
கதிர் 51

வள்ளுவர் ஆண்டு 2043 | தை 02 திங்கட்கிழமை (16/01/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily




# தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இலங்கை அரசு தயாரில்லை

## தமிழ் மக்களின் அச்சம் இது என்கிறது கூட்டமைப்பு
## ஆணைக்குழு அறிக்கைக்குப் பதிலும் வெளியானது

கொழும்பு, ஜனவரி 16

அரச தலைவரான மஹிந்த ராஜபக்ஷ இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பில் தற்போது வெளியிட்டுவரும் கருத்துகள், அரசியல் தீர்வு ஒன்றைக் காண இலங்கை அரசு தயாரில்லை என்று வலுவான அச்சத்தை தமிழ் மக்களிடம் ஏற்படுத்தி உள்ளது என்று தெரிவித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு விடுத்த அறிக்கைக்கு விரிவான பதில் அறிக்கை ஒன்றைக் கூட்டமைப்பு நேற்று விடுத்தது. 105 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கை ஒவ்வொரு விடயத்தையும் மிக நுணுக்கமாக ஆராய்ந்துள்ளது.

ஒரே ஒரு விடயத்தில் மட்டுமே நல்லிணக்க ஆணைக்குழு ஆணித்தரமான ஆலோசனையை முன்வைத்துள்ளது என்று குறிப்பிட்டுள்ள கூட்டமைப்பு, 29 விடயங்களில் - ஆணைக்குழுவின் தவறுகள் குறித்து - தனது கருத்துகளைத் தெரிவித்துள்ளது.

ஆணைக்குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ள, உடனடித் தேவைக்கு அப்பாற்பட்ட பரிந்துரைகள் சிலவற்றை அரசு எப்படி நடைமுறைப்படுத்துகின்றது என்பதைக் கூட்டமைப்புத் தொடர்ந்து கண்காணிக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

(அறிக்கையின் முழுவிவரம் 21, 22ஆம் பக்கங்களில்)

### தமிழ் பொலிஸுக்கு அணிவகுப்புப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன.16

வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பொலிஸாரில் 55 பேருக்குக் காங்கேசன்துறைப் பொலிஸ் தலைமையகத்தில் வைத்து அணிவகுப்புப் பயிற்சி வழங்கப்படுகிறது.

அடுத்த மாதம் பெப்ரவரி 4 ஆம் திகதி தென்னிலங்கையில் நடைபெறவுள்ள சுதந்திர தின விழாவில் அணிவகுப்புக்குத் தயார்ப்படுத்துவதற்கே இந்தப் பயிற்சி வழங்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில் இருந்தும் இதற்கென 55 ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அணிவகுப்புக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

### கட்டார் தலைவர் இலங்கை வருகை

கட்டார் நாட்டுத் தலைவர் ஷேய்க் ஹமட் பின் கலிபா அல்தானி இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று இலங்கை வந்துள்ளார். ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் கட்டார் நாட்டுத் தலைவருடன் அந்நாட்டு வர்த்தக, கலாசார உயர்மட்ட அதிகாரிகள் பலரும் இலங்கை வந்துள்ளனர். கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கட்டார் நாட்டுத் தலைவரை இலங்கை ஜனாதிபதி வரவேற்றார். இதன்போது கட்டார் நாட்டுத் தலைவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் 21 மரியாதை வேட்டுக்களும் வானை நோக்கி தீர்க்கப்பட்டன. நேற்று மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கட்டார் நாட்டுத் தலைவருடன் இரு நாட்டு உறவுகள் குறித்து பேச்சு நடத்தியிருந்தார். (ஒ-10)

### அமைச்சர் மேர்வின் பொலிஸில் முறைப்பாடு

பொதுசன உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வா பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடொன்றை சமர்ப்பித்துள்ளார். அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கும் களனி பிரதேச சபையின் உறுப்பினர்கள் சிலருக்கும் இடையில் தோன்றியுள்ள கருத்து முரண்பாடுகள் தொடர்பிலான விடயங்கள் முறைப்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார். அமைச்சர் மேர்வின் சில்வாவுடன் கருத்து முரண்பாடுகளைக் கொண்டுள்ள களனி பிரதேச சபையின் உறுப்பினர்கள் சிலராலும் அண்மையில் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### கடந்த வருடம் பண நிரம்பல் அதிகரிப்பு

கடந்த வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட அளவையும் விட பண நிரம்பல் அதிகரித்துள்ளது என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. நவம்பர் மாதத்தில் அந்த அளவில் 20.6 வீத அதிகரிப்பு காணப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் தனியார் துறையினரால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் அளவில் பெரும் உயர்வு ஏற்பட்டமையே இதற்கு காரணம் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. நவம்பர் மாதம் வரையில் தனியார் துறையினர் பெற்றுக்கொண்டிருந்த கடன் அளவில் 33.5 உயர்வு ஏற்பட்டது. எவ்வாறாயினும் கடந்த வருடத்தின் இறுதி சில மாதங்களுக்குள் வர்த்தக சந்தையில் வட்டியின் அளவில் உயர்வு ஏற்பட்டதாக இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

## மஹிந்தவுக்கு 'விடுதலை'?

வோஷிங்டன், ஜன.16

அமெரிக்காவின் கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட போர்க்குற்ற வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இராஜதந்திர சிறப்புரிமை உள்ளதாக அமெரிக்க அரசு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

காசிப்பிள்ளை மனோகரன் மற்றும் இருவரால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட போர்க்குற்ற வழக்கிலேயே இலங்கை ஜனாதிபதிக்கு இராஜதந்திர சிறப்புரிமை உள்ளதென ஒபாமா நிர்வாகம் கூறியுள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் நீதித் திணைக்கள சட்ட ஆலோ

» 23


## யாழ்.நகரில் நேற்று தீ விபத்து 'அழகு மாடம்' எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், ஜன.16


யாழ்.நகர் பெரிய கடை வீதியில் உள்ள அலங்காரப் பொருள்கள் விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று முற்பகல் ஏற்பட்ட தீ விபத்தினால் சுமார் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் எரிந்து நாசமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

தீ ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறி

» 23



## பறக்குது பார் பட்டம்...!



தைப்பொங்கல் தினமான நேற்று வல்லைப் பகுதியில் பொங்கல் வாழ்த்துடன் கூடிய மிகப் பெரிய பட்டம் ஏற்றப்பட்டது. இமையாணன் மேற்கு உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் இந்தப் பட்டத்தை கட்டி வெற்றிகரமாக

» 23

## மோ.சைக்கிளில் சந்தைக்குச் சென்ற குடும்பஸ்தர் கரணவாயில் சாவு

### மரக்கறி ஏற்றிச் சென்றவேளை விபரீதம்

யாழ்ப்பாணம், ஜன.16

வடமராட்சி, கரணவாய்ப் பகுதியில் மூத்த விநாயகர் கோயிலுக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் தலையில் பலமாக அடிபட்டுக் கரணவாய் மேற்கு, வல்லியாவத்தையைச் சேர்ந்த செல்லன் கேதீஸ்வரன் (வயது-37) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவர் ஆவார்.

மரக்கறிகளை மோட்டார் சைக்கிளில் ஏற்றி விற்பனை செய்வதற்காக நெல்லியடி சந்தைக்குக்

» 23

### அமைதியான பொங்கல்

கொழும்புத்துறை ஜன.16

தமிழர் திருநாளான தைப் பொங்கல் நிகழ்வுகள் நேற்று வடக்கில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் அமைதியாகவும் சிறப்பாகவும் ஆலய வழிபாடுகளுடன் நடைபெற்றன.

» 23

சேந்தாங்குளம் தாக்குதல் சம்பவத்தை அடுத்து

## இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் கடற்படை அதிகாரி 'சண்டித்தனம்'

யாழ்ப்பாணம், ஜன.16

கீரிமலை, சேந்தாங்குளத்தில் நேற்றுமுன்தினம் கடற்படையினர் பொதுமக்களைக் கடுமையாகத் தாக்கிய சம்பவத்தை அடுத்து-

நேற்று இளவாலைப் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்திருந்த கடற்படை அதிகாரி ஒருவரை மற்றொரு கடற்படை அதிகாரி பலவந்தமாகக் கூட்டிச் சென்ற சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

» 23


யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்னும் 4 நாட்களில்
JITF 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாறாது அமைச்சரவை ஜனாதிபதி கூறிவிட்டாரே

## அமைச்சர் டியூ கூறுகிறார்

கொழும்பு, ஜன.16

அமைச்சரவை உட்பட முக்கிய பதவிகளில் மாற்றம் கொண்டு வரப்போவதில்லை என ஜனாதிபதியே கூறிவிட்டார் எனத் தெரிவித்த சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர, சபாநாயகர் பதவியை வகிக்குமாறு எவரும் என்னிடம் இன்னும் கோரவில்லை என்றும் கூறினார்.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, அவர் வகிக்கும் பதவியிலிருந்து விலகியதும் அந்த இடத்திற்கு அமைச்சர் டியூ குணசேகர நியமிக்கப்படுவார் எனத் தகவல்கள் வெளியாகின.

அமைச்சரவை பதவி உட்பட முக்கிய பதவிகளில் மாற்றம் ஏற்படாது என்று ஜனாதிபதியே கூறிவிட்டார். எனவே, மாற்றம் நிகழாது என்றுதான் நான் கருதுகிறேன் - என்றார் டியூ. (ஒ-சி)

# மரண அறிவித்தல்கள்



### சோமசுந்தரம் பரமேஸ்வரி (லக்கி அம்மா)

நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட சோமசுந்தரம் பரமேஸ்வரி நேற்று (15.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - அன்னலட்சுமி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் மனைவியும், காந்திநாயகம், தடாதகைப் பிராட்டியார், தணிகாசலம், ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் சுலக்ஷனிதேவியின் (லக்கி) அன்புத் தாயும் சண்முகராஜாவின் (சீனியர்) மாமியும், அனோஜன் (பிரான்ஸ்), அமிர்தவர்ஷனி ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

122, சிவன்கோயில் றோட்,
திருநெல்வேலி , யாழ்ப்பாணம்.

தகவல்:
ச.சுலக்ஷனிதேவி
(மகள்):

### திருமதி M.J. அருணோதயம் விக்ரோறியா



இல.81, சப்பல் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி M.J.அருணோதயம் விக்ரோறியா நேற்று (15.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியன் விக்ரோறியா (வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும் சறோஜா, யசிந்தா, காலஞ்சென்ற தனசீலன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.01.2012) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.81, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

(13116)

தகவல்:
சறோஜா, யசிந்தா
(பிள்ளைகள்).

### திருமதி பூமணி செல்வரெட்ணம்



கரம்பன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் 97, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பூமணி செல்வரெட்ணம் 13.01.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் செல்வ ரெட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகராசா, பொன்னுத்துரை, முத்துலிங்கம் இராசமணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான இரத்தினாம்பாள், மகேஸ்வரி மற்றும் குணமணி (பிரான்ஸ்), அமரர் திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரன், ஞானேஸ்வரன் மற்றும் நாகேஸ்வரன் (ஜேர்மனி), நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் சிறிய தாயும் சுதாமதி, தர்மினி, காலஞ்சென்ற லிங்கப்பிள்ளை ஆகியோரின் அன்பு மாமியும் கிருபாகரன்-சுஜிதா, நித்தியானந்தன் - சுதர்சினி, சசிக்குமார்- சுமித்திரா, அருணன், அஜந்தன், சிவசங்கர் (பிரான்ஸ்), தமயந்தி (மாணவி, யாழ்/ வேம் படி மகளிர் பாடசாலை), கஜீபன், சிவதர்சன் (யாழ்/ மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கஜினி, லக்ஷன், கார்த்தீபன், மகிஷன், கார்த்திகா, யஷ்னுஜா, வந்தனா, கிருஷன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2012) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.97, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
மகன்மார் - நாகேஸ்வரன் ஜேர்மனி),
நகுலேஸ்வரன் (நகுலன்)

# தண்ணீர்த் தாங்கியைத் திறக்க மறுக்கும் ஆளுநர் தாகத்தில் தவிக்கின்றனர் அராலி மக்கள்



தண்ணீர் தாங்கி கட்டி முடிக்கப்பட்டு 15 மாதங்கள் ஆகியும் அதனைப் பொது மக்களது பாவனைக்கு விடாமல் இழுத்தடிக்கின்றார் ஆளுநர்.

அராலி வடக்கு நாகேந்திரமடம் பிரதேசத்தில் பொது மக்களின் கோரிக்கையினை ஏற்று 'வேள்ட் விசன்' நிறுவனம் பெரிய நீர்த்தாங்கி ஒன்றினை அமைத்துக் கொடுத்துள்ளது.

இது 'வேள்ட் விசன்' நிறுவனம் 22 லட்சம் ரூபாவிலும் ஆளுநரின் நிதியில் இருந்து 5 லட்சம் ரூபாவிலும் அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பாவனையில் இருந்த நீர்த்தாங்கி பழுதடைந்த நிலையில் மாற்று நீர்த்தாங்கி புதிதாக அமைக்கப்பட்டது.

நிர்மாணப் பணிகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்ட பின் 2010ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் உத்தியோக பூர்வமாக 'வேள்ட் விசன்' நிறுவனம் இந்த நீர்த்தாங்கியை வலி.மேற்கு பிரதேச சபையிடம் ஒப்படைத்துள்ளது.

அவ்வேளையில் வலி.மேற்கு பிரதேச சபை செயலாளரின் நேரடி பரிபாலனத்தின் கீழ் இயங்கியது.

அதே வேளை உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் சூடுபிடித்திருந்ததால் இந்த நீர்த்தாங்கியைத் திறப்பது நீயா? நானா? என்ற திரிசங்கு நிலை ஏற்பட்டது.

தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டியதால் இந்த நெருக்கடி மேலும் அதிகரித்தது.

எனினும் வலி.மேற்கு பிரதேச சபை, ஆளுநரை அழைத்து நீர்த்தாங்கியைத் திறப்பது என ஏகமனதாகத் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளது.இந்தச் தீர்மானத்திற்கு அமைய வலி.மேற்கு பிரதேச சபை ஆளுநருக்கு உத்தியோக பூர்வ அழைப்பை விடுத்துள்ளது.

ஆளுநர் இரண்டு முறை தனக்கு வசதியான திகதியை அறிவித்தும் கடைசி நேரத்தில் நிகழ்வை இரத்துச் செய்துள்ளார்.

கூட்டமைப்பு அழைத்து நான் செல்வதா என்ற மமதையில் தான் ஆளுநர் இப்படி இழுத்தடிக்கிறாரா? எனப் பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

பொது மக்களது நலன்விரும்பி சர்வதேச பொது நிறுவனம் அமைத்துக் கொடுத்த நீர்த்தாங்கியை அரசியல் சித்து விளையாட்டுக்காக பயன்படுத்தக் கூடாது. சம்பந்தப்பட்டவர்கள் இந்த நீர்த் தாங்கியை மேலும் காலம் கடத்தாமல் பொதுமக்களின் பாவனைக்கு கையளித்தால் பல ஆயிரம் மக்கள் நன்மை அடைவர். (ங)

## முதலமைச்சர், அமைச்சர்மார் அதிருப்தி

மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் பெற்றோலுக்கான கொடுப்பனவு அளவு குறைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளரின் கையொப்பத்துடன் டிசெம்பர் 28ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் அமைச்சர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

## பல்கலை ஆசிரியர் சங்கத்தினர் நாளை அடையாள வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தினர் நாளை செவ்வாய்க்கிழமை ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் கூட்டமொன்று யாழ்.பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் இன்று முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த வருடம் உறுதியளிக்கப்பட்ட கோரிக்கைகள் இதுவரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நிறைவேற்றப்படவில்லை. அதனை வலியுறுத்தியே இந்த ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாக அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

தமது சம்பளத்தை மூன்று கட்டங்களில் அதிகரித்துத் தருவதாகக் கடந்த வருடம் தெரிவிக்கப்பட்டது. இதுவரை அதிகரிக்கப்படவில்லை. தவிர தனியார் பல்கலைக் கழகத்துடன் சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்கள் பற்றி அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துடன் கலந்துரையாடியே உருவாக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டது.

ஆனால் அதனையும் அவர்கள் புறக்கணித்துள்ளனர். கண்டித்துள்ளனர். பரீட்சைக்கான கொடுப்பனவை ஐந்து மடங்காக உயர்த்தித் தருவதாக நிதி அமைச்சின் செயலாளர் முன்னர் தெரிவித்தார். அதுவும் கூட இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

2012ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கல்விக்கென 6 வீதம் ஒதுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் அது 1.9 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இவற்றைக் கண்டித்தும் இந்த ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-4)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



விவசாய போதனாசிரியராக சேவையாற்றும் திரு.கா.சிறீரஞ்சன் முல்லை மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வெளிக்கள அலுவலராக கடமைபுரியும் திருமதி யோகாம்பாள் சீறிரஞ்சன் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வன் 2011ஆம் ஆண்டில் இடம்பெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மருத்துவபீடத்துக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாவதாக தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.

மனித உயிர்களை காக்கும் இவரது எதிர்கால இலக்கு மருத்துவ உலகில் சிறந்தோங்க இவரை பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

சி.க.கூ. சங்கங்களின் அங்கத்தவர்கள்/நிர்வாகிகள்
சி.க.கூ. சமாசப் பணியாளர்கள், சி.க.கூ. சமாசப் பணிப்பாளர் சபை,
முல்.மாவட்ட சி.க.கூ. சமாசம், வித்தியாபுரம், ஒட்டுசுட்டான்.


## விற்பனைப் பிரதிநிதி தேவை

பிரபல தேயிலை விற்பனை நிறுவனத்துக்கு விற்பனை பிரதிநிதி தேவை. முன் அனுபவம் உள்ளோர் விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமான சம்பளம் + கவர்ச்சிகரமான கொமிசன் வழங்கப்படும். தகுதியுடையோர் தொலைபேசி இலக்கத்துடன் கூடிய சுயவிவரக் கோவையை பின்வரும் முகவரிக்கு (20.01.2012) இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல: 4213 மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### கந்தையா தாமோதரம்பிள்ளை



யாழ்ப்பாணம், தையிட்டிப்புலத்தை (வித் தகபுரம்) பிறப்பிடமாகவும் நகுலேஸ்வரா வீதி, அளவெட்டி வடக்கு, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா - தாமோதரம்பிள்ளை நேற்று (15.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் லில்லி மகாதேவி, பாஸ்கரலிங்கம், வசந்தாதேவி (S.P.H.M KAYTS), ஜெயராச சிங்கம் (Holand), பரராஜசிங்கம் (துரை - லங்கா சிமெந்து கூட்டுத் தாபனம்), நகுலாம்பிகை ஆகியோரின் அன்புத் தந் தையும் இராசதுரை, விஜயகுமாரி, கமலேஸ்வரி (Holand) ஆகியோரின் பாசமிகு மாமனும் கோகுலன், செந்தூரன் (ஜன சக்தி), ராகுலன் (அரவிந்தன் போன் சொப், மானிப்பாய்), மகிஷா, கார்த்தீபன் (P.H.I, சுன்னாகம்), டுக்ஷன் (Hemas Cmalt National Company), சகானா (Holand), விபூலா (Holand) ஆகியோரின் பேரனும் மதுமிதாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2012) திங் கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனத்திற்காக வித்தகபுரம் கொப்புளாவடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நகுலேஸ்வரா வீதி, அளவெட்டி
வடக்கு, அளவெட்டி.

தகவல்:
தா.பரராஜசிங்கம் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வேகமாகப் பரவும் காய்ச்சல் விழிப்புணர்வும் ஒத்துழைப்பும் தேவை

நோய்கள் மக்களின் எதிரிகள். அவை பல சந்தர்ப்பங்களில் மனிதர்களின் உயிர்க்கொல்லிகளாக மாறி விடுகின்றன. முன்னர் எல்லாம் உயிர்க்கொல்லி நோய்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. இப்போது அவ்வாறல்ல. தொற்று நோய்களில் பெரும் எண்ணிக்கையானவை மனிதரின் உயிர்களைக் காவு கொண்டு விடுகின்றன. சாதாரண காய்ச்சலாக முதலில் அறிமுகமாகும் நோய்கள் சிறிது காலத்திலேயே உயிர்குடிப்பனவாக இனங் காணப்படுகின்றன.

ஒரு வகை நுளம்பினால் பரப்பப்படும் டெங்கு நோயின் தாக்கம் ஆரம்பத்தில் குறைந்து காணப்பட்ட போதிலும், குடாநாட்டில் அதனால் கடந்த வருடம் 237 பேர் பாதிக்கப்பட்டு மரண பயத்துக்கு ஆளாக வேண்டிய இடர் உண்டானது.

இவ்வருடம் பிறந்த கையோடு, "தைபஸ்" என்ற தொற்றுக் காய்ச்சல் குறித்த அபாய அறிவிப்பு வைத்திய சேவை வட்டாரங்களில் இருந்து எழுந்துள்ளது. அந்தக் காய்ச்சலினால் இதுவரை 57 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது. அது மிக வேகமாகப் பரவி வருகிறது.

இந்நோய், குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த கிருமிகளால் (Bacteria) உண்டாவதாகவும் தொற்றுவதாகவும் அறிவிக்கப் படுகிறது.

காய்ச்சல், தலையிடி, வாந்தி, உடலில் கறுப்புநிற அடையாளங்கள் என்பன இந்தப் புதிய தொற்று நோய்க்கான அறிகுறிகள் என்று தெரிவிக்கப்படுகின்றது. உடற்பேன்கள், தெள்ளு, உண்ணிகள், பாலுண்ணிகளால் இந்நோய் தொற்றுகிறது.

"தைபஸ்" தொற்றுக் காய்ச்சலால் பாதிப்புறுவோர் தாமதியாமல் வைத்திய பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தொற்று நோய்த் தாக்கம், மக்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ள பகுதிகளில் பரவும் அபாயம் உண்டு. போர் நடைபெற்ற பிரதேசங்களிலும் வறுமை அதிகமாக உள்ள பகுதிகளிலும் வாழும் மக்கள் இந்தத் தொற்று நோயினால் பீடிக்கப் படும், பாதிப்புறும் சாத்தியம் அதிகம் உண்டென வைத்திய வட்டாரங்கள் தொட்டுக் காட்டுகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடைபெற்றுச் கொண்டிருந்த போர் ஓய்ந்து பதினைந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. அதனைக் கருத்தில் எடுத்து, "தைபஸ்" காய்ச்சல் வேகமாக பரவமாட்டாது என்று தப்புக்கணக்குப் போடக்கூடாது. போர் ஓய்ந்து, முடிவுற்ற இக்காலப் பகுதியிலும் சுக வாழ்வுக்குப் பாதிப்பு உண்டாகும் சாத்தியம் உண்டு. முன்னர் உள்ளதைவிட, இப்போது பல பிரதேசங்களிலும் வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதேவேளை, வறுமை, இடநெருக்கடியினால் நெருக்கமாக வாழுதல் போன்ற பாதகமான புறக்காரணிகள் நிறையவே உண்டு என்பதனையும் மறக்கலாகாது.

இவற்றை மனதில் கொண்டு, "தைபஸ்" காய்ச்சல் குறித்துக் குடாநாட்டு மக்கள் அசட்டையாக இருக்கக் கூடாது. சுகாதார சேவைப் பகுதியினர் வெளிப்படுத்தியிருக்கும் நோய் தொற்றுவதற்கான சூழல்களிலும், நீண்ட காலமாக மக்கள் வசிக்காது காடு மண்டிக் கிடக்கும் இடங்களிலும் தங்குவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

குடாநாட்டில் கொடிய 'டெங்கு' நோய் தீவிரமாகப் பரவியதற்கும் அதனால் நூற்றுக் கணக்கானோர் பெரிதும் பாதிக்கப்பட்டமைக்கும், மக்களின் அக்கறை இன்மையும் பிரதான காரணிகளில் ஒன்று. அதனைக் கருத்தில் எடுத்து புதிய "தைபஸ்" தொற்றுக் காய்ச்சல் விடயத்தில் மக்கள் விழிப்புணர்வுடனும் பொறுப்புடனும் செயற்படவேண்டும்.

அதேவேளை, வைத்திய, சுகாதாரப் பகுதிகளும் காலம் கடத்தாமல், புதிய தொற்று நோயிலிருந்து மக்களைக் காத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை அவர்கள் தெளிவாகவும், விளக்கமாகவும் அறிந்துகொள்ள வகை செய்யவேண்டும். இது விடயம் காலம் தாழ்த்தக் கூடிய ஒன்றல்ல.

உலகளாவிய மட்டத்தில் சூழலியலில் ஏற்பட்டுவரும் மாற்றங்களினாலும், விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளால் ஏற்படக் கூடிய பாதிப்புகளினாலும் புதுவகை நோய்கள் மக்களைத் தாக்குகின்றன. வைத்தியத்துறை சார்ந்த புதிய கண்டு பிடிப்புகள், மனிதனின் சுகநலத்தை உயர்த்தும் நிலைக்கு, வளர்ந்து வந்தாலும், இலங்கை போன்ற தேசங்கள் வளர்ச்சி அடைந்த நாடுகளின் நிலையை உடனுக்குடன் எய்தமுடிவதில்லை. வைத்தியத் துறையில் புதியன புகுத்தப்பட்டாலும் நோய்களும் பாதிப்புக்களும் அதிகரிக்கவே செய்கின்றன.

இலங்கை போன்ற அரசியல் பிணக்குகளும் உரிமை மறுப்புகளும் மலிந்த நாடுகளினால், ஏனைய நாடுகள் போன்று மக்களுக்குரிய மருத்துவத்துறை சார்ந்த பிந்திய கண்டுபிடிப்புகளின் பெறுபேற்று நலன்களை, உடனுக்குடன் வழங்கமுடியாதவாறு நடைமுறைக்கஷ்டங்கள் உண்டு.

இப்போது இங்கு தலைகாட்டியுள்ள "தைபஸ்" காய்ச்சல், இந்தியா போன்ற ஆசிய நாடுகளால் ஏற்கனவே எதிர்கொள்ளப்பட்ட நோய் வகையினதாகவோ, அல்லது அதனை ஒத்ததாகவோ இருக்கக் கூடும். அதனால், அந்தந்த நாடுகளில் அது (Epidemic)உயிர்க்கொல்லி நோய்களாக அன்றி, பிந்திய மருத்துவ சிகிச்சை வதிகளால் சாதாரண நோய் என்று கருதப்படும் நிலையை அடைந்திருக்கலாம்.

எதற்கும் குடாநாட்டில் புதிதாக பரவிவரும் "தைபஸ்" காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்துவதில் சுகாதார சேவை சார்ந்த நிறுவனங்களும் வைத்தியசாலைகளும் உடனடியாகத் தீவிர கவனம் செலுத்த வேண்டும். மக்களுக்கும் நோய் குறித்த கூடுதல் விழிப்புணர்வுடன் ஒத்துழைக்கும் பக்குவமும் தேவை. இல்லையேல் வீண் உயிரிழப்புகள் ஏற்படும் ஆபத்து உண்டு.

## ஜனாதிபதியின் பணிப்புரையை நடைமுறைப்படுத்தியது தவறா?

### வலி.தெற்குப் பிரதேச சபைத் தலைவர் கண்டனம்

வலி.வடக்கு, ஜன.16

ஜனாதிபதியின் பணிப்புரையை மேற்கொள்ள முயன்ற வலி.வடக்கு சேந்தான்குளம் பகுதி மக்களும் வலி வடக்குப் பிரதேச சபையின் தலைவர் மற்றும் உறுப்பினரும் தாக்கப்பட்ட சம்பவம் மிகவும் கவலைக்குரியதும், கண்டிக்கப்பட வேண்டியதும் ஆகும்.

- இவ்வாறு வலி.தெற்குப் பிரதேச சபையின் தலைவர் பிரகாஷ் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

கடந்த பல வருட கால இடைவெளியின் பின்னர் பொது மக்களின் பிரதிநிதிகள் உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிக்கும் பொறுப்பை மக்களின் வாக்குப் பலத்தின் மூலம் பெற்று நிர்வகிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை தீர்க்க முற்பட்ட வேளையில் பொது மக்களும் தவிசாளரும் உறுப்பினரும் டெங்கு ஒழிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் மனிதாபிமானமற்ற முறையில் கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இத்தகைய செயற்பாடுகளை மக்கள் முன்னெடுக்கக் கூடாது என்பதையே இந்தத் தாக்குதல் சம்பவம் வலியுறுத்தி நிற்கின்றது. இதனை நாம் திட்டமிட்டதொரு செயலாகவே நோக்க வேண்டும். வலி.தெற்குப் பிரதேச சபை கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் அரசின் பணிப்புரையின்படி டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை மேற்கொண்ட வேளையில் அரச சார்பான கட்சியொன்றின் ஆதரவுடன் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு முயற்சி எடுக்கப்பட்டமையும் இந்த இடத்தில் சுட்டிக்காட்டக் கூடியதாகும்.

இது போன்றே டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை தேசிய மட்டத்தில் முன்னெடுக்குமாறு அரசு அறிவித்துள்ள நிலையில், கடற்படையினர் பொதுமக்களையும் பிரதேச சபை உறுப்பினர்களையும் தாக்கி குழப்பத்தை உண்டாக்கியதன் மூலம் இத்தகைய செயல்களை மேற்கொள்ளவிடாது இடையூறு செய்துள்ளார்கள்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக இயங்க படைத்தரப்பினர் தடையாக இருக்கின்றார்கள் என்பதையும், அதேவேளை இத்தகையவர்களுக்கு பாதுகாப்பு இல்லையென்பதையுமே இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது. இதனையிட்டு அரசும் சரி ஏனைய மனிதாபிமான அமைப்புகளும் சரி சிந்திக்க வேண்டிய தேவையும் அவசியமும் எற்பட்டுள்ளது - என்றுள்ளது.

(ங-86)

### பட்டிகள் பாவமன்றோ

நேற்று நீர் பொங்கல் பொங்கி
நிகரிலா இன்பம் கொண்டீர்
பட்டாசுகள் பல கொளுத்தி
பகிர்ந்து பொங்கல் உண்டீர்!
பகலவன் தன்னைப் போற்றி
பழவகை பல படைத்துவிட்டு
கரும்பையும் நாட்டிப் பின்னே
கதிரவனுக்கு நன்றி சொன்னீர்!
ஆனால்..
அரிசியை உண்டுவிட்டு நீவீர்
அகற்றிய தவிட்டை உண்டு
நெல்தனை நீர் கொய்து செல்ல
நீக்கிய வைக்கோல் உண்டு
அரிசியை வடித்து சாதம் ஆக்கிட
எஞ்சிய கஞ்சிதன்னை எருதுக்குத் தந்து
கட்டியே வைத்து வாட்டும்
கயமையை ஏன் செய்கின்றீர்?

மாட்டிற்கு புல் இடாது
மந்தையாய் அடைத்து வைத்து
கன்றுக்கு ஊறும் பாலை
கபடமாய் அபகரித் தீரன்றோ?
எருதினை வண்டியில் பூண்டி
ஏளனமாய் விரட்டி ஓட்டி
சுமைதனை சுமக்க வைக்கும்
சூழ்ச்சியும் நீதி யாமோ?

மூக்கினில் ஓட்டை போட்டு
முழுதுமாய் "இலாடன்" கட்டி
குறியதும் சுட்டு வைக்கும்
கொடுமையை என்ன சொல்வேன்?
பசுவில் பால் வற்றிப்போக
பல் எலாம் விழுந்துபோக
நடைதனை இழந்து மெல்ல
நடந்திட முடியாது நலியும்
பசுவினை இறைச்சிக்காக
பலியிடல் நீதியாமோ?

இத்தனை கொடுமை செய்தநீவீர்!
இன்று இந்த நாளிலேனும்
எமக்கரும் பெரும் உதவிநல்கும்
எருதுக்கள் பசுக்கள் தன்னை
நன்றியுடன் நீருமாட்டி
பாங்கான உணவு நல்கி
அன்புடன் அரவணைத்து நின்று
ஆதரவினை நல்குவீரே!

விகடகவி

## தேசிய நுளம்பு கட்டுப்பாடு வாரத்தில் வடக்கில் தீவிர சோதனை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.16

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தின் ஆரம்ப நாளான இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர் வரும் 22 ஆம் திகதி வரைசுகாதாரத்துறையினர் பொலிஸாருடன் இணைந்து சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவுள்ளனர். வடமாகாணத்திலும் சுகாதார துறையினர் தீவிர சோதனை நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்போது நுளம்பு பெருகும் சூழலை கொண்டிருக்கும் உரிமையாளருக்கு எதிரான உடனேயே வழக்குப்பதிவு செய்யப்படவுள்ளது சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் . குடும்ப நல உத்தியோகத்தர்கள் ஆகியோரை உள்ளடக்கிய பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியின் தலைமையினான குழுவினரே இந்தச் சோதனையை மேற்கொள்ள உள்ளனர். நுளம்பு பெருகுவதற்கான சூழலை கொண்டிருக்கும் அரச, அரசசார்பற்ற மற்றும் தனியார் காணிகளிலும் இந்தச் சோதனை இடம் பெற உள்ளது.

இதற்காக சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் பல வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. நுளம்பு பெருக்கத்துக்கான சூழல் காணப்படும் இடங்களில் அதன் உரிமையாளர் அல்லது பராமரிப்பாளர் மீது உடனடியாக வழக்குப் பதிவு செய்யப்பட உள்ளது இந்தச் சோதனையின் போது சூழலை துப்புரவு செய்வதற்கான கால அவகாசம் வழங்கப்பட மாட்டாது. சம்பவ இடத்தில்வைத்தே உடனடியாக வழக்கு பதிவு செய்யப் படஉள்ளதாகத் தெரியவருகின்றது.

பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி, மாவட்ட காச நோய் வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் பிரிவு ரீதியாக எழுமாறாகச் சென்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட உள்ளனர்

இவ்வாறான நடவடிக்கை எதிர் வரும் 22 ம் திகதி வரை இடம்பெற உள்ளது எனவே நுளம்பு பெருகும் இடங்களை சுத்தம் செய்து நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்துக்கு ஒத்துழைக்குமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ங-14)

## நிகழ்வுகள் இன்று

### பட்டிப்பொங்கல் விழா

வரலாற்றுச் சிறப்பு மிக்க பட்டிப் பொங்கல் விழா, கோமாதா திருவிழா ஆகியன முற்பகல் 10 மணிக்கு யாழ்.நகர் ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளன. பசுக்கள் இடபங்களைப் பாதுகாக்கும் சகல சமய நிறுவனங்களின் இணையத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயர், பேராசிரியர் மா.வேதநாதன், சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம், சைவப்புலவர் இரா சையா ஸ்ரீதரன் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தவுள்ளனர். (ம-313)

### பொங்கல் விழா

சங்கானை ஹற்றன் நஷனல் வங்கி, நெஸ்லே லங்கா நிறு வனம் மற்றும் விவசாயப் பெரு மக்கள் இணைந்து நடத்தும் பொங்கல் விழா முற்பகல் 10மணிக்கு அராலி மேற்கு சன சமூக நிலையத் தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ம-313)

* * *

தேசிய கல்வியியற் கல்லூரியின் பொங்கல் விழா பிற்பகல் 2மணிக்கு கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோக நாதன் தலைமையில் நடைபெறும். (ம-313)

### நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் நவோதய பாடசாலை நிறுவுநர் தினமும் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் பாடசாலைக் கட்டடத் திறப்பு விழாவும் காலை 9.30 மணிக்கு ஏ.எஸ் நடராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் கே.கனகராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயத் திறப்பு விழாவும் இடம் பெறும். (ம-313)

### கலந்துரையாடல்

நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல் இன்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

### செயலமர்வு

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம்6 முதல் தரம்11 வரை விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரவட்டச் செயலமர்வு காலை 8.30 மணிக்கு துணுக்காய் கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

### திறப்பு விழா

கலட்டி மெ.மி.த.க. பாடசாலையின் கணினி அறைத் திறப்பு விழா காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.வி. மகேந்திரன் கலந்துகொள்வார். (ம-313)

* * *

வலி, வடக்கு , ஜன.16

தாவடி காளியம்பாள் மகளிர் விவகாரக் குழுவின் ஏற்பாட்டில் ஸ்ரீ காளியம்பாள் தையலகம் திறப்பு விழா சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் இன்று காளியம்மாள் சன சமூக நிலைய மண்டபத்தில் மகளிர் விவகாரக் குழுத் தலைவி திருமதி லிங்கராசா சாரதா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தியும் சிறப்பு விருந்தினர்களாக தாவடி தெற்கு கிராம அலுவலர் வே.நாகேந்திராசா உடுவில் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி அலுவலர் செல்வி. ஜெயா மார்க்கண்டு ஸ்ரீ காளி யம்மாள் சனசமூக நிலையத் தலைவர் ப.கஜரூபன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

பல்கலைக்கழக நெடுந்தீவு மாணவர் ஒன்றியத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நிகழ்வு நெடுந்தீவு புனித பற்றிமாமாதா தேவாலயத்தில் 15.01.2012 அன்று இடம்பெற்றது. சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு-

1. முதலாம் பரிசு -(றோஜலா)1857
2. இரண்டாம் பரிசு -(தோ.கிழூறி) 1326
3. மூன்றாம் பரிசு -(அன்பரசன்) 1094

ஆறுதல் பரிசுகள்.

1. 1016- எஸ்.விமல்
2. 2330 -லக்சினிசோசை
3. 1037 -ஆர்.கவோன்
4. 2344 - எஸ்.வித்தியா
5. 1079 -எஸ்.ஜெகன்யதரை
6. 2456
7. 2054
8. 1527 -கருணிகர்
9. 2644 -பூகா
10. 1581- துவாஹகரணி

பரிசுகள் 22.01.2012 அன்று நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தொ.பே- 0776621251



## கண்ணீர் அஞ்சலி

**கனகசபை கவீந்திரராசா (ஐயர்)**

எமது அலுவலகத்தில் கடமையாற்றும் சக ஊழியரான **கனகசபை கவீந்திரராசா** அவர்களின் திடீர் மறைவை இட்டு அதிர்ச்சியும், கவலையும் அடைவதுடன் அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்,
வலி.கிழக்குப் பிரதேசசபை, புத்தூர்.

## தென்மராட்சியில் நெற்பயிர் சிகிச்சை முகாம் இன்று

யாழ்ப்பாணம், ஜன.16

தென்மராட்சி, கரம்பகம் கிராமத்தில் ''நெற்பயிர் சிகிச்சை முகாம்'' நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர் இ.சிறிபாலசுந்தரம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சதீஸ் தலைமையில் தென்பகுதியைச் சேர்ந்த 15பேர் அடங்கிய விவசாய உயர் அதிகாரிகள் குழு இதில் கலந்து கொள்ளவுள்ளது.

இந்தப் பயிற்சி முகாமில் நெல்லினங்கள், நெற்பயிர்களுக்கு ஏற்படும் பல்வேறு பீடைகள், பீடைகளை கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகள் தொடர்பில் விளக்கமளிக்கவுள்ளது. இந்தப் பயிற்சி முகாமில் விவசாயிகள் கலந்துகொண்டு தமது சந்தேகங்கள், எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக விளக்கத்தைப் பெறமுடியும்.

(ஒ-10-11)

## ஐ.தே.க. நேற்று கூடியது

கொழும்பு, ஜன. 16

புதிய உறுப்பினர்களை நியமித்ததன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்றுக் கூடியது.

இதன்போது அரசுக்கு எதிராக எதிர் காலத்தில் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் குறித்தும் எதிர்க்கட்சியைப் பலப்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது.


### சற்குணா கொன்றைக்ரேஸ்

Specialistin all painting works hand, sprey varnish
பொலிசிங் வேலைகளையும் கட்டடத்திற்கான சட்றிங், மேசன் வேலைகள், தச்சு வேலைகள், வயறிங்வேலைகள், அலுமினிய பிற்றிங், வெல்டிங் சகல வேலைகளையும் குறித்த தவணையில் செய்துகொள்ள.

தொடர்பு:- N.SATKUNARAJAH. Reg. NO.VSW/FIN/BR/02/2010
விளாத்தியடி லேன், சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
0774733510, 021 225 5737


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 18 02 1944



ஆண்டவன் அடியில் 18 01 2009

**அமரர். தில்லையம்பலம் செல்வராசா**
(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், தபாற்கந்தோர், சுன்னாகம்)

எம் அன்பு அப்பாவே
ஆண்டு மூன்று கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
எங்கள் உயிரின் உயிரானவரே
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு அகலா

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
மனைவி; பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியர் சிவபாதம் சிவரூபன் அவர்களின் அன்பு சகோதரன்

**சிவபாதம் சிவரஞ்சன்**

அவர்கள் 13.01.2012 அன்று காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடுத்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும், பணியாளர்களும்,
டயல் லக் போன் சொப், இல.22, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த அசோக்குமார் பிரதீபன் என்பவருடைய தே.அ.அட்டை (922991014V) தட்டாதெருச் சந்தியில் இருந்து பெருமாள் வீதி வழியாக பஸ்தரிப்பு நிலையத்துக்கு செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். தொடர்பு: 0750499233


### வீடு விற்பனைக்கு

கருவேப்பிலம் வீதி, கொக்குவில் கிழக்கில் நல்லூர் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்துக்கு அண்மையில் இரண்டு பரப்புக் காணியில் நான்குபக்க சுற்றுமதில், குளியல் அறை மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு- 0775427158


## மரண அறிவித்தல்



### இளையப்பு முத்துவேலு

நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையப்பு முத்துவேலு நேற்று (15.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையப்பு - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், மட்டுவில் சிவன்கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி அன்னம்மா தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் வரதராஜன், சிவசக்தி, குகதாஸ் (சுவிஸ்), மதிமோகன், மதியழகன் (சுவிஸ்), சத்தியசீலன் ஆகியோரின் பாசமிகு தகப்பனும் ஜேந்தினி, ஸ்ரீகானந்தன், பகீரதி (சுவிஸ்), நிரோஜினி, இதய ராஜனி (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் கிருத்திகன், திவாரகன், கிருசிகா, யதுர்சனன், நிதுர்சன், மதுரா, கபிதா, பவ்சிகன், அபிலாசன், அர்சயன், அபிஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2012) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக நீர்வேலி சிவியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



மந்திரிமலை, புத்தூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் வல்லியாவத்தை, கரணவாய் மேற்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

**செல்லன் கேதீஸ்வரன்**

அவர்கள் நேற்று (15.01.2012) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார். அன்னாரின் பிரிவால் துயர் அடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செல்லமாக மயூரன், வரதன் என்று எத்தனை பெயர் கொண்டு அழைத்தோம். ஏன் எம்மை விட்டுப் பிரிந்தாய் உன் பிரிவு எம்மை வாட்டுதடா.

பானுரேகன்,
விவசாய மாளிகை.
கே.கே.எஸ். வீதி,
மருதனார்மடம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டெங்கு விழிப்புணர்வு ஏழாலையில் மும்முரம்

**ஐந்து பிரிவுகளைக் கொண்ட குழுவினர் ஏழாலைப் பிர தேசத்தில் வீடு வீடாகச் சென்று பரிசோதனை நட வடிக்கைளை மேற்கொள் வதுடன் விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் நடத்தவுள்ளனர்.**

யாழ்ப்பாணம், ஜன.16

ஏழாலைப் பகுதியில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால் அந்தப் பகுதியில் விழிப் புணர்வுச் செயற்பாடுகள், பரிசோதனை நடவடிக்கை கள் என்பன இன்று திங்கட் கிழமை முதல் தீவிரப்படுத் தப்படவுள்ளன.

உடுவில் பொதுச் சுகாதாரப் பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோத கர்கள் மேற்கொண்ட பரி சோதனை நடவடிக்கையின் போது கடந்த வாரம் மட்டும் 21 வீடுகளில் டெங்கு நோய் பரவும் சூழல் காணப்பட்ட துடன் தொற்றுநோய்கள் பர வக் கூடிய சுகாதாரச் சீர்கே டான சூழலையும் கொண் டிருந்தமை கண்டுபிடிக்கப் பட்டது.

இந்த நிலையில் ஏழா லைப் பிரதேசத்தில் டெங்கு நோயின் தாக்கம் ஏற்படு வதற்கான சூழல் அதிகரித் துள்ளது.

இதனைக் கட்டுப்படுத் தும் நோக்குடன் ஐந்து பிரிவுகளைக் கொண்ட குழுவினர் ஏழாலைப் பிர தேசத்தில் வீடு வீடாகச் சென்று பரிசோதனை நட வடிக்கைளை மேற்கொள் வதுடன் விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் நடத்த வுள்ளனர்.

இந்தச் செயற்பாட்டில் பொதுச் சுகாதாரப் பரிசோத கர்கள், மருத்துவ மாதுக்கள் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பொலிஸ் உத்தி யோகத்தர்கள், பாட சாலைச் சுகாதாரக் குழுவினர் இணைந்து செயற்படவுள்ளனர்.

கடந்த வாரம் இனங் காணப்பட்ட டெங்கு பரவும் சூழலை வைத்திருந்த 21 வீட்டு உரிமையாளர்களுக்கும் எதிராக வழங்குத் தாக்கல் செய்யப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ம-313-86)

# அனுமதிக்கப்பட்ட வங்கிகளில் ஆதனவரி செலுத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.16

ஆதன வரிகளை அனு மதிக்கப்பட்ட வங்கிகளில் செலுத்துவதற்கான நடை முறைகள் ஆரம்பிக்கப்பட வுள்ளன.

யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதி களில் ஆயிரம் பேர் ஆதன வரியை வங்கி மூலம் செலுத் துவதற்கு முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இவர்களின் சேவையை இலகுபடுத்தும் நோக்குடன் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட 6 இலங்கை வங்கிக் கிளைகளில் சோலை வரிப்பணத்தைச் செலுத்து வதற்கு ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை வங்கியின் யாழ்.ஆஸ்பத்திரி வீதி பிரதான கிளை, ஸ்ரான்லி வீதியிலுள்ள இலங்கை வங்கியின் இரண்டாவது கிளை, திருநெல்வேலிக் கிளை, யாழ்.பேருந்து நிலை யத்திலுள்ள விரிவாக்கல் கிளை, பிரதான வீதியி லுள்ள இலங்கை வங்கியின் விரிவாக்கல் அலுவலகம், யாழ்.கச்சேரியில் அமைந் துள்ள இலங்கை வங்கிக் கிளை ஆகியன ஆதன வரி செலுத்துவதற்கான வங்கிகளா கத் தெரிவு செய்யப்பட்டுள் ளன. இந்தத் திட்டத்துக்கான தொழில் நுட்ப வசதிகளை ஆசியமன்ற நிறுவனம் வழங்கியுள்ளமை குறிப் பிடத்தக்கது.

இந்தத் திட்டத்தின் மூலம் ஆதனவரிகளைச் செலுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கான ஆவணங்களை நேரடியாக வழங்கி யாழ்.மாநகர சபைக் குரிய வரியை வங்கிகளில் செலுத்துவதற்கு நடவ டிக்கைகள் மேற்கொள் ளப்படவுள்ளன. (ம-313)

## தரம் ஒன்று மாணவருக்கு 'சிசு உதான' சேமிப்பு

சாவகச்சேரி மக்கள் வங்கியினர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் இன்று நடைபெறும் தரம்ஒன்றில் இணையும் மாண வர்களுக்கான கால்கோள் நிகழ்வின்போது மக்கள் வங்கி யின் 'சிசுஉதான' சேமிப்புக் கணக்குத்திட்டத்தில்இணைய வுள்ள மாணவர்களுக்கு விசேடபரிசில்களுடன்வைப் பிலிடும் தொகைக்கு சம மான தொகையும் கணக்கில் வைப்பிலிடவுள்ளனர்.

கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை களுக்கு வரும் மக்கள் வங்கி உத்தியோகத்தர்களிடமோ, அல்லது சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையிலோ 500 ரூபாவுக்கு மேற்படாமல் தரம் ஒன்றில் இணையும் மாண வர் பெயரில் வைப்பிலிடும் தொகைக்கு சமமான தொகை மக்கள் வங்கியினால் வைப் பிலிடப்படுமெனஅறிவிக்கப் பட்டுள்ளது. (எ-207)

# ஏழாலையில் டெங்கு நோயாளி


வலி வடக்கு, ஜன. 15

ஏழாலைப் பகுதியில் டெங்கு நோயின் தாக்கத் துக்கு உள்ளாகிய மேலும் ஒருவர் வைத்தியசாலை யில் இனம் காணப்பட்டுள் ளார். ஏழாலை மேற்கைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் ஜெகசோதி என்பவரே டெங்கு நோயின் தாக்கத்துக்கு உள்ளாகிய நிலையில் அடை யாளம் காணப்பட்டவரா வார்.

ஏற்கனவே இந்தப் பகுதி யில் டெங்கு நோயின் தாக்கத்துக்கு உள்ளாகியவர் களின் எண்ணிக்கை பதி னொன்றாக இருக்கும் நிலையில் தற்போது மேலும் ஒருவர் இனம் காணப்பட் டுள்ளார்.

உடுவில் பிரதேச சுகா தார வைத்தியதிகாரி தலைமை யிலான குழுவினர் வைத்திய திகாரி அ.ஜெயக்குமார் தலைமையில் முழு மூச்சாக டெங்கு ஒழிப்பு செயற் பாட்டில் முழு நேரமும் கவனம் எடுத்து வருகின்ற போதிலும் இப் பகுதியில் டெங்கு நோயின் தாக்கத் துக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

குறிப்பாக மக்கள் இடப் பெயர்வுகள் மற்றும் பாது காப்பு வலய அருகாமை போன்ற காரணங்களால் பல காணிகள் மக்கள் குடிய மராமல் காணப்படுவதுடன் பற்றைகள் நிறைந்தும் துப்புரவு செய்யப்படாத நிலையிலும் காணப்படு கிறது.இதனாலேயே டெங் கின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகச் சுகாதாரத் திணைக் களத்தால் தெரிவிக் கப்படுகின்றது. (ம-86)



யாழ்.திருமறைக் கலாமன்றத்தால் வருடாந்தம் முன்னெடுக்கப்படும் பொங்கல் விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன் போது தமிழர் பண்பாட்டு முறைப்படி அருட்தந்தை ஸ்ரிபன் அடிகள் திருப்பலி ஒப்புக் கொடுத்தார். (ம-23)

# 22 வருடங்களின் பின்னர் பொங்கல்

யாழ்ப்பாணம், ஜன.16

22 வருடங்களின் பின் மண்டை தீவு உதய சூரியன் சனசமூக நிலையம் நேற்று பொங்கல் விழாவைக் கொண்டாடியுள்ளது. யுத்த காலங்களுக்கு முன் முத்தமிழ் விழாக்களையும் வாணி விழாக் களையும் நடத்தி சமூக ஒற்றுமையின் நல்லுறவுப் பாலமாக இந்தச் சனசமூக நிலையம் விளங்கியிருந்தது.

1990 இல் நடந்த யுத்த சூழலுக்குப் பின் இந்தக் கிராமமே முற்று முழுதாக இடம்பெயர்ந்து வாழ வேண்டிய சூழ்நிலை உருவானது. அதன்பின் மெல்ல மெல்ல மீள் எழுகைக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் இந்தக் கிராமத்தில் உதயசூரியன் சனசமூக நிலையமும் பொங்கல் விழாவைக் கொண்டாடியுள்ளது. (ம-ரி)

# நெடுந்தீவு பிரதேச சபையின் அபிவிருத்தி நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன 16

நெடுந்தீவு பிரதேசசபை 12 அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

இவற்றில் விளாத்திக் குளம் கொறுவாண்டு வீதி 44 லட்சம் ரூபா , பெருக்கடி பிள்ளையார் கோவில் ஆலடிவீதி 60 லட்சம் ரூபா, கோணாந் தோட்டம் கண்ணங் குளம் 44 லட்சம் ரூபா, சாரப்பட்டித்துறை வீதி 7 லட்சம் ரூபா, கிளிஞ்ச வேம்படி கடற்கரை சவக் காலை வீதி 30 லட்சம் ரூபா, சிகிரியான் பள்ளம் வீதி 30 லட்சம் ரூபா, முள்ளி வீதி 6 லட்சம் ரூபா, தோமையார் கிழக்கு, மணியங்குண்டு வீதி 7 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

ஐயநோடை வீதி கழிவு வாய்க்கால் அமைத் தலுக்கு 30 லட்சம் ரூபா, அம்மாவோ டைக் கழிவு வாய்க்கால் புனரமைக்க 10 லட்சம் ரூபா, நெடுந்தீவு மத்தி பொது நூலக புனரமைப்புக்கு 10 லட்சம் ரூபா, நெடுந்தீவு மேற்கு பொது நூலகப்புனர மைப்புக்கு 10 லட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. (ம-7)

## காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.16

வரணி, தாவளை, இயற் றாலையைச் சேர்ந்த ராசன் சந்திரமோகன் (வயது-18) என்ற இளைஞன் கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை யிலிருந்து காணாமல் போயுள் ளார் என்று அவரது தந்தை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவல கத்தில் முறைப்பாடு செய் துள்ளார். வரணி மகாவித்தி யாலயத்தில் உயர் தரத்தில் பயிலும் மாணவனே இவ் வாறு காணாமல் போயுள் ளார்.

கடந்த 9 ஆம் திகதி காலை 8 மணியளவில் வீட்டிலிருந்து வெளியே சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் இது பற்றி கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது என்றும் உறவினர் கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸா ரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அதுபற்றித் தாம் கூறமுடியாது எனக் கூறித் தொடர்பைத்துண்டித்து விட்டனர். (ம-4)

# நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் 7 வலயங்களில் இன்று திங் கட்கிழமை முதல் எதிர் வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை தேசிய நுளம்புக் கட்டுப் பாட்டு வாரமாக அனுஷ் டிக்கப்படவுள்ளது.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை நகர் I, II ஆகிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளிலும், நாளை செவ்வாய்க்கிழமை நாவாந்துறை பொதுச் சுகாதாரப் பிரிவிலும், நாளை மறுதினம் புதன்கிழமை கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பிரிவிலும்,

எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை குருநகர் I, II ஆகிய பொதுச் சுகாதாரப் பிரிவுகளிலும், எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக் கிழமை அரி யாலை பொதுச் சுகாதாரப் பிரிவிலும் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை வண்ணார்பண்ணை பொதுச்சுகா தாரப் பிரி விலும் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நல்லூர் பொதுச் சுகா தரப் பிரிவிலும் பரி சோதனை நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

குறிப்பிட்ட 7 வலயங் களிலும் வீடுகள், திணைக் களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், மதத் தலங் கள், பாடசாலைகள், வர்த் தக நிலையங்கள் தொழிற் சாலைகள் ஆகியவற்றில் பரிசோதனை நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

இந்தப் பரிசோதனைச் செயற்பாட்டில் மாநகரசபை யில் சுகாதாரப் பகுதி வெளிக் கள உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பொறியி யல் பிரிவு, பொலிஸார், இராணுவத்தினர், பிரதேச செயலக வெளிக்கள பணி யாளர்கள், தொண்டர்கள், பொது அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படவுள்ளன. (ம-313)

# நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜன.16

சுழிபுரம் திருவடி நிலையில் புதிய சுடலை மடம் அமைப்பதற்கென 50 ஆயிரம் ரூபா நிதியுதவியை நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வழங்கியுள்ளார்.

இந்தப் பகுதி மக்கள் தகனக் கிரியைகளை மேற்கொள்வதில் பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்து வருவதாகத் தெரிவித்ததையடுத்து சுழிபுரம் திருவடி நிலையில் புதிய சுடலை மடத்தை அமைப்பதற்கான நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்துக்கான பணி களை வலி.மேற்குப் பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகம் மேற் கொண்டு வரும் நிலையில் இந்த மாத இறுதியில் பொதுமக்கள் பாவனைக்கு விடப்படவுள்ளது. (ம-28)

## கற்றல் அபிவிருத்தி செயற்பாடுக்கு மண்டபம்

யாழ்ப்பாணம், ஜன.16

ஊர்காவற்றுறை காம்பன் கிழக்கு பகுதியில் கற்றல் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான மண்டபம் [illegible] 50 லட்சம் செலவில் பிரதேச சபையால் அமைக்கப்பட்டு வருகின்றது. (வ-7)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு ரூ.22 லட்சத்து 17 ஆயிரம்

## விவசாய நடவடிக்கைக்கு வழங்கப்பட்டது

ஊர்காவற்றுறையில் 'திவிநெகும' வாழ் வாதாரத் திட்டத்தின் கீழ் சமுர்த்தி பயனாளிகளில் 98 பயனாளிகளுக்கு விவசாய நடவடிக்கை களுக்காக 22 லட்சத்து 17 ஆயித்து 404 ரூபாவும் 63 பயனாளிகளுக்கு மீன்பிடி தொழிலுக்கென 9 லட்சத்து 23 ஆயிரத்து 500 ரூபாவும் கைத்தொழில் துறைக்கு 13 பயனாளிகளுக்கு 2 லட்சத்து 37 ஆயிரத்து 794 ரூபாவும் கால்நடை வளர்ப்புக்கென 8 பயனாளிகளுக்கு 25 ஆயிரத்து 600 ரூபாவும் இதுவரை வழங்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை சமுர்த்தி முகாமையாளர் தெரிவித்தார்.

வீட்டுத் திட்டத்துக்காகத் தலா ஒரு லட்சம் வீதம் மூன்று பயனாளிகளுக்கு 3 லட்சமும் உட்கட்டமைப்பு வேலைக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் கடந்த ஆண்டில் வழங்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப் பட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் கனவுகளும் பலித்துவிடுமா...?

ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் கனவுகள் உள்ளன. வாழ்வில் ஆயிரம் கனவுகளுடன் வாழ்பவள்தான் பெண். இந்தக் கனவுகள் சிதறிக்கப்படும் போது ஏன் எதற்கு இப்படி எல்லாம் நடக்கிறது என்று கூடச் சிந்தித்து உணரமுடியாகவர்களாக உடைந்து போகின்றார் பெண்கள்.

அது கல்வியாக இருந்தாலும் சரி, காதலாக இருந்தாலும் சரி ,வாழ்வாக இருந்தாலும் சரி. உறவுகளின் அரவணைப்பும் அன்பும் ஒரு பெண்ணுக்கு மிகமிக அவசியமாகின்றன. தன்னுள் ஏற்பட்ட ஏமாற்றங்களை வெளியே சொல்ல முடியாமலும்



உள்ளே விழுங்க முடியாமலும் பெண்களின் நிலைமை மாறிவிடுகின்றது.

வாழ்வில் ஆயிரம் கனவுகள், எதிர்பார்ப்புக்கள் இருந்தாலும் அவை யாவுமே நிறைவேறும் என்று எவராலுமே எண்ணிப் பார்க்க முடியாது.

கடவுளின் விதிப்படி கடவுள் விட்ட தீர்ப்பின் பிரகாரமே எமது வாழ்வு திசை திருப்பப்படுகிறது. இதை உணர்ந்து கொள்ள முன்வர வேண்டும்.

அதற்காக ஏனோதானோ என்று கால் போன போக்கில் எமது பயணத்தை நாம் மாற்றிவிடக் கூடாது.

தமக்கென்ற ஒரு வரையறையுடன் எமது கலாசார விழுமியங்கள் தழுவியதாக ஒரு பெண்ணின் செயற்பாடுகள் தொடருமானால் எவரும் கைநீட்டிக் கேள்வி கேட்டுவிட முடியாது. நான் சரி, நான் பயணிக்கும் பாதை சரி என்று ஒரு தீர்மானத்துடனான பயணமாகப் பெண்களின் வாழ்க்கைப் பயணம் தொடர வேண்டும்.

மூன்றாவது நபர் எமது மூக்கைத் தொட்டுவிட்டுப் போகுமளவுக்கு விடுவோமேயானால் கேள்விக் குறியான வாழ்க்கை நிலையை எதிர்கொள்ள வேண்டிவரும் என்பது தெட்டத் தெளிவு.


பெண் என்று பிறந்துவிட்டால் செல்லும் வழி எங்கும் ஆயிரம் நெளிவு சுழிவுகள் வரத்தான் செய்யும். அதற்காகத் தளர்ந்து போவது என்பது எந்தவகையில் நியாயம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அன்பும் அரவணைப்பும் ஒரு பெண்ணிடமிருந்தே முழுமையாகக் கிடைக்கின்றன.

அது தாயாக இருந்தாலும் சரி, தாரமாக இருந்தாலும் சரி, காதலியாக இருந்தாலும் சரி. ஆனால் இங்கு உண்மை, புரிந்துணர்வு, எதிர்பார்ப்புக்கள் மிகவும் அவசியமானவை ஆகின்றன. இவை பூரணமடையும்போதுதான் நமது எதிர்பார்ப்பும் நிறைவடையும். இதை உணரத் தவறியவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அவள் பெண்தானே! கேட்டால் என்ன, தந்தால் என்ன, என்ற எண்ணமும், இவர்கள் எமது உறவுகள்தானே கேட்பார்கள்தானே என்று ஒரு பெண் எண்ணுவதும் உறவுகளிடையே விரிசலைத் தூண்டிவிடக்கூடும். என்னதான் எதிர்பார்ப்புக்கள், ஆசைகள், தேவைகள் இருப்பினும் வார்த்தைகள் மூலமே அவை பூரணம் அடையும் என்பதை ஒவ்வொருவரும் உணர்தல் நன்றே. மனம்விட்டுப் பேசுவதும் பிரச்சினைகளைத் தெளிவுபடுத் துவதும் அன்புக்கும் உறவை வலுப் படுத்தவும் வழிகோலும். பெண்களே! சிந்திப்போம் ஒரு கணம்.

■ நிஷாந்தன், சங்கானை

# உரிமைக் குரல்



பெண்ணே!
கவிக்கோவின்
கருத்துப்படி
படைத்தவளுக்குரியவள்
நீதான்
எம்மை எழுதத்தூண்டும் நீ
எழுதினால் இன்னும் நன்மையே
நயமும் நவரசமும்
உன் குழந்தைகளே
அச்சமும் வெட்கமும்
உன் கைகளை
அழுத்துகின்றனவா?

அந்தக் கட்டுப்பாடுகளை
எரியூட்டு
பிரச்சினைகளாலே
பொதிசெய்யப்பட்டவளே
அபத்தம் என்று நினைத்தா
எழுத்தாணியை
ஒளித்து வைத்திருக்கிறாய்?
எடு! போராடு
ஆணுக்கு சமமாக நில்.
உனக்கொரு படை திரட்டு
உயிர்த்தமிழ் வாழட்டும்

■ க.யோகேஸ்வரன், நெடுந்தீவு,

# இதற்கு உன் பதில் என்ன?



பெண்ணை மறுத்தாலும்
பெண்ணினத்தை
வெறுத்தாலும்
உன்னைப் பெற்றவள்
உன்னைச் சீராட்டியவள்
கட்டியணைப்பவள்
கண்கலங்கி நிற்பவள்
எல்லாமே ஒரு
பெண்தான்
இதற்கு உன்
பதில் என்ன
மௌனம்தானா....?

நிஷாவதி
நல்லூர்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
''திலகம்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# இது கதையல்ல 7

■ யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

கௌரியின் கதைக்காக விஜிதா காத்திருக்க, அண்மைக்காலப் பத்திரிகைச் செய்திகளை என் மனம் இரைமீட்டுக் கொண்டிருந்தது. பச்சிளம் பிஞ்சுகள் கைவிடப்படுவதும் கொல்லப்பவிட்டதே என்ற ஏக்கம். விஜிதாவை முதல் முதலாக நான் கண்ட கணமும் என் நினைவில் மேலெழுகிறது.

மருத்துவமாது தூக்கிக் காட்டிய சின்னஞ்சிறு செல்வம் ரோஜா மலர்க் கைகளையும் கால்களையும் அசைத்துக் கொண்டு என் மனம் முழுவதும் மகிழ்ச்சி முட்டிப் பிரவகிக்கச் செய்த அந்தக் கணம் என்னால் என்றுமே மறக்க முடியாத ஒன்று. அள்ளி அணைத்துக்கொள்ள வேண்டுமென்ற பேராவலும் தொட்டால் நசுங்கிவிடுமோ என்ற அசமும் கரங்களுக்குள் பரபரத்த அந்த வேளை. அந்த மகிழ்வைத் தாய்மார் இழந்து விடுவது கொடுமைதான்.

அதுமட்டுமா? திருமணமாகி இரண்டு மாதங்களாகும் முன்பே "ஒரு விசேஷமுமில்லையா?" என்று கேட்பவர்களே ஒரு குழந்தைக்காக ஏங்க வைத்து விடுவார்கள். வயிற்றில் கரு உருவாயிருக்கிறது என்று மருத்துவர் உறுதிப்படுத்தியதும் தாய் மட்டும் மகிழ்வதில்லையே. வீடே குதூகலிக்குமே. அந்தத் தாய் மகாராணியாக அந்த வீட்டில் கொண்டாடப்படுவாள். ஆனால் இப்படித் தவறான உறவில் கருத்தரித்தவர்கள் வீட்டில் வேண்டத் தகாதவர்களாகி விடுகின்றனர். அன்று கௌரியின் வீட்டுக்குப் போனபோது கௌரியும் ஒரு மூலையில் சோகமயமாகத்தானே இருந்தாள். சிறுபிள்ளைத்தனம் மாறாதவளாய் குதூகலத்துடன் வீட்டினுள் எந்த நேரமும் பறந்து திரிந்தவளை இப்படியாக்கிவிட்டானே.

''என்னம்மா கௌரியைப் பற்றிக் கேட்டால் ஏதோ யோசித்துக் கொண்டிருக்கிறீங்கள்.''

''கௌரி என்ற உடனே ஏதேதோ நினைவுகள் வந்திட்டுது. போனமுறை போனபோது கௌரி சாப்பிடாமல் ரியூசனுக்கு வெளிக்கிடுகிறாளென்று தாய் சாப்பாடு தீத்திவிட்டவா. இந்த முறை போனால், வயிற்றிலை குழந்தையென்று தாயும் மகளும் அழுகினம்.''

"ஐயோ, ஆரோ ஏமாத்தீட்டினமோ?"

"ஆரோ என்ன , அவன் சுரேனோ நரேனோ எண்டொருதன் திரிவான். அவன்தானாம்."

"அவன் லவ் எண்டுதானே சுத்தித் திரிஞ்சவன். கலியாணத்தைச் செய்து வைக்கலாமே. அன்றிக்கும் அங்கிளுக்கும் அவனைப் பிடிக்கேல்லையோ?



"இப்ப அவனுக்குத்தான் கௌரியைப் பிடிக்கேல்லை."

விஜிதாவால் நான் கூறியதை நம்ப முடியவில்லை என்பதை அவளுடைய முகமே காட்டியது.

"என்னம்மா கௌரிக்குப் பின்னாலை அப்படித் திரிஞ்சவன் இப்படி ஏமாத்திட்டானோ?"

''பிள்ளைகள் தங்களுடைய வயசை யோசிக்கவேணும். இந்த வயதிலை படிக்கவேணும். நல்ல எதிர்காலத்துக்கு வேண்டிய அத்திவாரம் போட வேணும். அதைவிட வாழ்க்கையில் அந்த அந்த வயதுக் காலத்தை நல்லாய்ப் பயன்படுத்தி அதை அனுபவிக்கவேணும். குழந்தைப் பருவம், மாணவர்களாய்ச் சிறகடிக்கிற பருவம் எல்லாம், படிப்பு, விளையாட்டு, கலை நிகழ்ச்சி என்று பொழுது கழியும். எவ்வளவு இனிமையான காலம். அதை விட்டிட்டு ஒழுங்காய்ச் சாப்பிடத் தெரியாத பிள்ளையள் காதலிக்கிறம் என்று திரிஞ்சு சீரழிகினம். பொம்பிளைப் பிள்ளை மட்டுமில்லை ஆம்பிளைப் பிள்ளையளும் இப்படித் திரியிறதாலை முன்னேற முடியாமல் எப்படிக் கெட்டுப்போகினம். சரி கலியாணம் கட்டினாலும் ஒழுங்காய் வாழ்க்கை நடத்திவினமோ?".

"ஏனம்மா அவை வாழ்க்கை நடத்த முடியாது?".

அவளுக்கு இலகுவாக எப்படி விளக்கமளிக்கலாம் என நான் சிந்தித்துப் பதில் கூறத் தயாரானேன்.

*எனது சிந்தனை நீண்டது...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தரமான சமூகத்தை உருவாக்கும் முன்பள்ளிகள்

**சிறார்களுக்கு சர்வதேச தரம்வாய்ந்த ஆங்கிலக் கல்வியை ஊட்டி, வருங்கால சமூகமொன்றைத் தயார்ப்படுத்தும் ஆரம்ப களமாக முன்பள்ளிகள் செயற்படுகின்றன என்கிறார் ஹரீஸ் எம்.பி.**

பாலமுனை, ஜன.16

சர்வதேச தர நியமனங்களுக்கேற்ப வருங்கால சமூகமொன்றை உருவாக்கும் ஆரம்ப களமாக முன்பள்ளிகள் செயற்படுகின்றன என்று அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை 'விஸ்டம்' ஆங்கிலப் பாலர் பாடசாலையின் பரிசளிப்பு விழா அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல்கல்லூரி ஆராதனை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு காலத்தில் கட்டடங்களைக் கட்டுவதும், ஆசிரியர்களை நியமிப்பதுமே கல்வித்துறை அபிவிருத்தியாகவும், சாதனையாகவும் கருதப்பட்டன. இன்று அந்த நிலைமை மாறி சர்வதேச தொழிற்சந்தையுடன் போட்டியிடக்கூடிய வகையில் ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கக்கூடிய துறைநிபுண ஆசிரியர்களையும், பௌதீக வளங்களையும் அபிவிருத்தி செய்யக்கூடிய பொறிமுறை ஒன்று ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நாட்டில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கின்ற அனைவருக்கும் பல்கலைக்கழக வசதியைப் பெற்றுக்கொடுக்க முடியாதுள்ளது. இன்று ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கின்றனர். எனினும், இவர்களில் 20 ஆயிரம் மாணவர்களே பல்கலைக்கழக வசதியைப் பெறுகின்றனர். இன்றைய காலகட்டத்தில் இந்தத் தொகை போதுமானதல்ல. மேலும் சர்வதேச தொழிற்சந்தை மற்றும் வேலைவாய்ப்பு பொறிமுறைக்கேற்ப பல்கலைக்கழக கல்வி முறைமையை விரிவுபடுத்துவது அவசியமாகும். இதனடிப்படையிலேயே சர்வதேச தரம்வாய்ந்த தனியார் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்குவதற்கும் அரசு தயாராகி வருகின்றது.

பாலர் கல்வியைப் பொறுத்தவரை ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் எமது பிரதேசத்தில் ஒரு சமமின்மை நிலவிவந்தது. அதாவது, எமது பிரதேசத்தில் பாலர் கல்விச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே அமைந்திருந்தன.

இன்று இந்தநிலை மாறி சிறார்களுக்கு சர்வதேச தரம்வாய்ந்த ஆங்கிலக் கல்வியை ஊட்டி, வருங்கால சமூகமொன்றைத் தயார்படுத்தும் ஆரம்ப களமாக பல முன்பள்ளிகள் எமது பிரதேசத்தில் செயற்படுவது மகிழ்ச்சிதரும் விடயமாகும்- என்றார். (ச)

# கொத்மலை ஓயா குறித்து அவதானமாக இருக்கவும்



கொத்மலை,ஜன.16

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் கீழ்ப்பகுதியான கொத்மலை ஓயாவைப் பயன்படுத்துகின்றவர்கள் அவதானத்துடன் இருக்குமாறு இடர்முகாமைத்துவ நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு இரண்டாம் கட்ட நீர் நிரப்பும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதால் கொத்மலை ஓயாவின் நீர் மட்டம் அடிக்கடி மாற்றமடையலாம் என்று முகாமைத்துவ நிலையத்தின் நுவரெலியா மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எரந்தன் மேவர்த்தன தெரிவித்தார்.

கிளெயார் நீர்வீழ்ச்சிக்கு அண்மையில் கடந்த வெள்ளிக்கிழமை குழந்தையொன்று அனர்த்தத்துக்கு இலக்கானதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனால் ஆற்றில் நீர் இல்லை என்ற எண்ணத்தில் கொத்மலை ஓயாவைப் பயன்படுத்துவதில் அவதானத்துடன் செயற்படுமாறு பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது (ச)

# கொள்ளை முயற்சி: சிக்கினர் 6பேர்

**மறைந்திருந்த பொலிஸார் கொள்ளைக் கோஷ்டியை சுற்றிவளைத்து பிடித்தனர்.**

இரத்தினபுரி, ஜன.16

இரத்தினபுரி - குருவிட்ட பகுதியில் உள்ள இரத்தினக் கல் வியாபாரி ஒருவரின் வீட்டில் கொள்ளையடிப்பதற்காக ஆயுதங்களுடன் வந்த 6 சந்தேகநபர்கள் பொலிஸாரின் பிடியில் வசமாக மாட்டிக் கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்ததாவது:

இந்த சந்தேகநபர்கள் கதன்கொட பகுதியில் உள்ள பிரபல இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் கொள்ளையடிப்பதற்கு திட்டமிட்டனர்.

எனினும், கொள்ளைக் கோஷ்டியின் இந்தத்திட்டத்தை குருவிட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் அறிந்து கொண்டுள்ளனர்.

இதனையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை இரத்தினக்கல் வர்த்தகரின் வீட்டைச் சுற்றி இரகசியமாக பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது. அன்றையதினம் 6 பேர் அடங்கிய கொள்ளைக் கோஷ்டி காரில் வந்துள்ளது. உடனடியாக அங்கு மறைந்திருந்த பொலிஸார் கொள்ளைக் கோஷ்டியை சுற்றி வளைத்து பிடித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து துப்பாக்கி, கத்தி உள்ளிட்ட ஆயுதங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தச் சந்தேகநபர்களிடம் குருவிட்ட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச)



கல்முனை பொலிஸாரின் வருடாந்த அணிவகுப்பு மரியாதை நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அம்பாறை பிராந்திய பொலிஸ் அதிகாரி பிரேமலால் ரணகல கலந்துகொண்டு பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொள்கின்றார்.

# 18% வேண்டாம் 33% தாருங்கள்

## வடிகாலமைப்பு தொழிற்சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜன.16

தமக்கு வழங்கப்பட்டுள்ள 18% சம்பள உயர்வை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் சம்பள உயர்கோரி தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி எதிர்வரும் 18ம் திகதி புதன்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஒன்றிணைந்த தொழிற்சங்க முன்னணியின் இணை இணைப்பாளர் உபாலி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கும் அரசு செவிசாய்க்காவிட்டால் எமது சக்தி என்னவென்பதை அரசுக்கு உணர்த்துவோம். எதிர்காலத்தில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம். எமது தொழிற்சங்க நடவடிக்கைகளின் தீவிரத்தால் அரசு தனது நிலையில் இருந்து கீழிறங்குவது நிச்சயம்- என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

உண்மையில் 18% வீதம் என்பது நியாயமற்ற சம்பள உயர்வு என்பத அரசுக்கு நன்கு தெரியும். எனவே குறைந்த பட்சம் 33% சம்பள உயர்வையாவது வழங்கவேண்டும் என்று தாம் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ங)

# கல்வி நிர்வாக சேவைக்கு உள்வாங்க நடவடிக்கை

மஸ்கெலியா, ஜன.16

மத்திய மாகாணத்தில் பதில் கடமைபுரியும் 194 கல்விப் பணிப்பாளர்களை கல்வி நிர்வாகசேவைக்குள் உள்வாங்குவது சம்பந்தமான கலந்துரையாடல் அண்மையில் அலரிமாளிகையில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் அநுர திசாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் நாட்டிலுள்ள 738 பதில் கடமைபுரியும் கல்விப் பணிப்பாளர்களை கல்வி நிர்வாக சேவைக்குள் உள்வாங்குவது தொடர்பாகஆராயப்பட்டது. (ச)

# வெலிஓயா தொழிலாளர் வேலைநிறுத்தம் முடிவு

வெலிஓயா, ஜன.16

வெலிஓயா, என்பீல்ட் தோட்டத்தின் பத்துப்பிரிவுகளையும் சேர்ந்த தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டதையடுத்து அவர்கள் தமது வேலை நிறுத்தத்தைக் கைவிட்டதுடன் டிசெம்பர் மாதத்துக்கான சம்பளப் பணத்தையும் பெற்றுக்கொண்டுள்ளனர் என்று மலையக தொழிலாளர் முன்னணி தெரிவித்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஹற்றன் உதவித் தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற பேச்சின்போது, தோட்ட நிர்வாகங்கள் கூட்டு ஒப்பந்தத்தை மீறக்கூடாது என்று சிரேஷ்ட உதவி தொழில் ஆணையாளர் தெரிவித்ததையடுத்தே இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டது.

இது தொடர்பான அடுத்த கட்டப் பேச்சு நாளைமறுதினம் புதன்கிழமை நடைபெறும் என்று மலையக தொழிலாளர் முன்னணி தெரிவித்தது. (ச)

# பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு அவகாசம் கோருகிறது தொழிலமைச்சு

நுவரெலியா, ஜன.16

தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு -நாரஹேன்பிட்டி தொழிலமைச்சில் இடம்பெற்ற பேச்சு இணக்கப்பாடுகள் எதுவுமின்றி நிறைவுக்கு வந்துள்ளது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண தொழிலமைச்சினால் 5 நாள் அவகாசம் கோரப்பட்டதாக மத்திய மாகாணசபை உறுப்பினர் [illegible]நாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தாங்கள் எடுத்துக் கூறியதாகவும், அதற்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க தனக்கு 5 நாள்கள் கால அவகாசம் தருமாறு தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

கொட்டியாகல, பொகவந்தலாவை, செப்வல்டன் ஆகிய தோட்டப்பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 1,200 தொழிலாளர்கள் கடந்த சில நாள்களாக வேலைநிறுத்தத்தை மேற்கொண்டு வருகின்றனர். கூட்டு ஒப்பந்தத்தின்படி நாளொன்றுக்கு 16 கிலோ தேயிலைக் கொழுந்தினை பறிக்க வேண்டும். மேலதிகமாகப் பறிக்கும் ஒவ்வொரு கிலோவுக்கும் 17 ரூபா வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், தோட்ட நிர்வாகம் ஒரு நாள் சம்பளத்துக்காக 20 கிலோ தேயிலைக் கொழுந்தினைப் பறிக்குமாறு தெரிவித்ததையடுத்தே தொழிலாளர்கள் பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் இன்றைய கால்கோள் விழாக்கள்

யாழ்ப்பாணம், ஜன.16

22 வருடங்களின் பின்னர் மீள தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ள குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலயத்தில் தரம்-1 இல் அனுமதி பெற்ற மாணவர்களுக்கான கால் கோள் விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் இ.தேவராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எ.இராஜேந்திரன் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தால் பாடசாலையில் புனரமைக்கப்பட்ட மண்டபத் திறப்பு விழாவும், நலிவுற்றோர் நலனோம்பு நிலையத்தால் வழங்கப்பட்ட பாடசாலை வாகன சேவை ஆரம்பிப்பும் மகளிர் அபிவிருத்தி நிலையம், சன்மார்க்க சபை, வளர் மதி சனசமூக நிலையம் ஆகியன பாடசாலைக்கு அன்பளிப்பு வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (ம-313)

* * *

இருபாலை சி.சி.த.க.பாடசாலையில் தரம்-1 மாணவர்களுக்கான கால்கோள்விழாவும் தைப்பொங்கல் விழாவும் இன்று முற்பகல் 11 மணிக்குப் பாடசாலை அதிபர் திருமதி க. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி க.சோதிநாதன் கலந்து கொள்வார். (ம-313)

* * *

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் கால்கோள் விழா இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய மாணவர் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் கலந்துகொள்வார்.(ம-313)

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் கால்கோள் விழா இன்று காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் எம்.எஸ். ஏ.எம். முபாறக் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ் வில் பிரதம விருந்தினராக யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி வ.சிவபாலன் கலந்து கொள்வார். (ம-313)

* * *

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் கால்கோள் விழா இன்று காலை 9.30 மணிக்கு செல்வி த.லேகா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் சங்கானைக் கிளை உதவி முகாமையாளர் செ.சரத்சந்தர் கலந்துகொள்வார். (ம-313)

* * *

நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலயத்தின் கால்கோள் விழா இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக நெடுந்தீவு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.பி.அருளப்பு கலந்து கொள்வார். (ம-313)

* * *

தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தின் கால்கோள் விழா காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் நீ.நடராசா தலைமையில் நடைபெறும். (ம-313)

* * *

நீர்வேலி அத்தியாயர் இந்துக் கல்லூரியின் கால்கோள் விழா இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரி அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் ஓய்வு பெற்ற பிரதி அதிபர் ஐ.சிவராஜா கலந்து கொள்வார். (ம-313)

* * *

புத்தூர் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் கால்கோள் விழா இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற ஆரம்பக்கல்வி ஆசிரியை பகவதியம்மா தம்பித்துரை கலந்து கொள்வார். (ம-313-38)

* * *

புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தின் கால்கோள் விழா இன்று காலை 9.30 மணிக்கு ஆசிரியர் திருமதி ச.கருணாமூர்த்தி தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக புத்தூர் மக்கள் வங்கி உபகிளையின் உதவி முகாமையாளர் பொ.தங்கராசா கலந்து கொள்வார். (ம-313)

* * *

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத் தின் கால்கோள் விழா இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் செ.சண்முகநாதன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்விவலய ஆசிரிய ஆலோசகர் எஸ்.இராசவரோதயன் கலந்துகொள்வார். (ம-313)

* * *

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையின் கால்கோள் விழா இன்று முற்பகல் 10 மணிக்கு பாடசாலை அதிபர் வை.விஜயகுமார் தலைமையில் நடை பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் திருமதி.ப.இராஜரத்தினம் கலந்து கொள்வார். (ம-313)

* * *

மானிப்பாய் மெமோறியல் பாடசாலையின் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா பாடசாலை மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-100-ரி)

* * *

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் கால்கோள் விழா இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்குப் பாடசாலை அதிபர் அ.சா.அரியகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரோகினி கருணேஸ்வரன் கலந்துகொள்வார்.

(ம-236)

* * *

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலய கால்கோள் விழா இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

(ம)

## மரண அறிவித்தல்கள்

### கருணாமூர்த்தி நந்தினி

(தும்பி)



பூந்தோட்டம் தெல்லிப்பழை யைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட (தும்பி) கருணாமூர்த்தி நந்தினி நேற்று (15.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலாமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்ற கிருஷ்ண பிள்ளை மற்றும் சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் கருணாமூர்த்தியின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், சுஜீபன், துர்காயினி ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ் சென்ற சிறிதரன், தேவதாசன் மற்றும் குகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கவிதா, சாந்தி, சுதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2012) திங்கட்கிழமை பி.ப ஒரு மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுத் தோட்டம்,
தெல்லிப்பழை. (13113)

தகவல்:
கருணாமூர்த்தி (கணவர்)

### வேலு இராமு



விக்னேஸ்வரா வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலு இராமு **14.01.2012** இயற்கையெய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலு- தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் பூமணியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான நாகமுத்து-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான நாகர், பிள்ளையினார், குட்டி, கதிர்காமர் மற்றும் பெரியதம்பி ஆகியோ ரின் சகோதரரும் காலஞ்சென்ற நடராசா மற்றும் இராசதுரை, பொன்னுதுரை, காசிநாதன் (விசுவமடு), மகாலிங்கம், தங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், தர்மகுலசிங்கம் (சுவிஸ்), ஜெயகுலசிங்கம் (சுவிஸ்), கனகேஸ்வரி, மாலினி (கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை-யாழ்ப்பாணம்), தயாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும் தியாகராஜா (இயக்குநர்- கேம்பிரிஜ் கல்வி நிலையம் சங்கானை), சதீஸ்குமார் (விளையாட்டு அதிகாரி-கிளிநொச்சி), சாரங்கன் (ஆசிரியர், மு/நட்டாங்கண்டல் அ.த.க பாடசாலை), மனோரஞ்சிதம் (சுவிஸ்), கவிதா (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், தரங்கினி (யாழ்.பல்கலைக்கழக விவசாயப் பீடம்), தாரகா (லண்டன்), தயாணிகா (தேசிய கல்வியியற்கல்லூரி-யாழ்ப்பாணம்), பிறேம்நாத் (ஆசிரியர், யா/வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாலயம்,அராலி), சுகர்ணன் (லண்டன்), தயனிஜா (சுவிஸ்), தவீனா (சுவிஸ்), தமிதா (சுவிஸ்), ஹரிஸ்(சுவிஸ்), ஹரணி(சுவிஸ்), ஹசீனா (சுவிஸ்), பிரவீன், டினோஜ், அட்சயன், பபிலா ஆகியோரது அன்பு பேரனும், சனோவின் (லண்டன்) அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2012) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விக்னேஸ்வரா வீதி,
சங்கானை. (13103) (6-10)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### செல்லப்பா கைலாயபிள்ளை

அல்லிப்பளை, பளையைப் பிறப்பிடமாகவும் இத்தாலி மாந்தோவாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கைலாயபிள்ளை 13.01.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் 18.01.2012 புதன்கிழமை இத்தாலி மாந்தோவாவில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு-
சபேசன் (மருமகன்-இத்தாலி)
00393496169219,
யோகநாதன்(சகோதரன்-இத்தாலி)
00393293346784.
கண்ணன் (மகன்- இத்தாலி)
00390376779929
அசோகன் (மருமகன்-இலங்கை)
தகவல்: மருமகன் சபேசன்
குடும்பம் -இத்தாலி.

## மண்கல் அறுப்பதற்கான ஆள்கள் தேவை

மாங்குளம் ஊடாக முல்லைத்தீவுக்கு செல்லும் பிரதான வீதியில் கூழாமுறிப்பில் அமைந்துள்ள ஓட்டுத் தொழிற்சாலைக்கு மண்கற்கள் அறுக்கக் கூடியவர்கள் தேவை. அலுவலக நேரத்தில் நேரடியாகவோ தொலைபேசியூடாகவோ தொடர்பு கொள்ளலாம். தொ.பே.இல.024-3248603 தங்குமிட வசதிகள் இலவசம். உணவு, சிற்றுண்டி, தேநீர் நியாய விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

தலைவர்,
மு.மா.சி.க.கூ.ச.சமாசம்,
முல்லை மாவட்டம்.

(13112)

## காணவில்லை

சாவகச்சேரி நகர்ப் பாதுகாப்பு நிலையத்தில் விடப்பட்ட **NPWF 2009** இலக்க மோட்டார் சைக்கிள் கடந்த வெள்ளிக்கிழமை மாறி எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. இதனை மாறி எடுத்தவர்கள் அல்லது காண்பவர்கள் தேவதாஸ் விஜிநந்தன் சங்கத்தானை, சாவகச்சேரி அல்லது **0779361416** இலக்க தொலைபேசியில் தெரிவிக்கவும்.

## 31ஆம் நாள் இதய அஞ்சலி



அமரர்

### சுப்பையா தம்பையா

''பார்க்குமிடம் எல்லாம் உன்
தோற்றம் பசுமைமிகு உன்
வார்த்தைப் பிரயோகம்.''

துயருறும் நண்பர் குழாம்,
வினோபா பாலர் பகல்
பராமரிப்பு இல்லம்,
வினோபா நகர், கச்சாய்.

(11559)

## 32ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மனிதனாக
30 - 05 - 1960



தெய்வமாக
16 - 12 - 2011

### கணபதிப்பிள்ளை குகானந்தன் (குகா)

(தலைவர்- கிராம அபிவிருத்திச்சங்கம்,
செயலாளர்- மறவன்புலோ விவசாய சம்மேளனம்,
உப தலைவர்- மறவன்புலோ சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்)

அன்பு காட்டி எமை அரவணைத்து
மாண்புடன் வாழ வழி சமைத்த எங்கள்
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற
வள்ளக்குளப் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

இன்று (16.01.2012) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

(இந்த அழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

மறவன்புலோ,
சாவகச்சேரி. (13104)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 மணித்தியாலம் லட்சம் ரசிகர்கள்




வாஷிங்டன், ஜன.16

அமெரிக்க அதிபர் பரங்க் ஒபாமாவின் மனைவி மிச்செலும் டுவிட்டரில் இணைந்துள்ளார்.

உலகப் பிரபலங்களில் பெரும்பாலானோர் சமூக வலைத் தளங்களான பேஸ்புக், டுவிட்டரில் உள்ளனர். இந்த நிலையில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் மனைவி மிச்செலும் டுவிட்டரில் இணைந்தார். இதில் ஆச்சரியம் என்னவென்றால் அவர் டுவிட்டரில் இணைந்த ஒரு மணித்தியாலத்திலேயே சுமார் 1 லட்சம் ரசிகர்கள் அவரது கணக்கில் சேர்ந்துவிட்டனர்.

மிச்செல் டுவிட்டரில் இணைந்த பின், " என்னை டுவிட்டருக்கு வரவேற்றவர்களுக்கு மிக்க நன்றி. எம்.ஓ." என்று குறிப்பை வரைந்துள்ளார். அதாவது மிச்செல் எம்.ஓ. என்பது மிச்செல் ஒபாமாவின் முதல் எழுத்துக்கள். அமெரிக்க அதிபர் ஒபாமாவும் டுவிட்டரில் "பி.ஓ." என்று தான் குறிப்பிடுவார். அதாவது அவை பராக் ஒபாமாவின் முதல் எழுத்துக்கள்.

மிச்செல் தனது டுவிட்டர் கணக்கு மூலம் அதிபர் தேர்தலுக்கு பரப்புரை செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிபர் ஒபாமாவுக்கு டுவிட்டரில் 11 மில்லியனுக்கும் அதிகமான ரசிகர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ங)

# ஒழிந்தது போலியோ! இந்தியாவில் சாதனை

இந்தியாவில் 1985-ம் ஆண்டுதான் போலியோ ஒழிப்பு திட்டம் தொடங்கப்பட்டது. 3.5 லட்சம் பேர் போலியோ பாதிப்புக்கு உள்ளானது அப்போது கண்டறியப்பட்டது.



புதுடெல்லி, ஜன.16

போலியோ அற்ற உலகை உருவாக்கி இந்தியா சாதனை படைத்துள்ளது என்று உலக சுகாதார அமைப்பு பாராட்டியுள்ளது. கடந்த ஒருவருடமாக போலியோ பாதிப்பு இல்லாத நிலை இந்தியாவில் ஏற்பட்டுள்ளது. இது மகத்தான சாதனை என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

போலியோவுக்கு எதிரான சர்வதேச அளவிலான போராட்டத்தில் குறிப்பிடத்தக்க இலக்கை இந்தியா எட்டியுள்ளது என்று மிலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை தலைவர் பில் கேட்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் இந்த நடவடிக்கை மூலம் இந்தியாவில் உள்ள குழந்தைகள், வாழ்க்கையை முடமாக்கும் நோயிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளனர் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங், மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆஸாத், மாநில முதல்வர்கள் குறிப்பாக உத்தரப் பிரதேசம், பீகார், மேற்கு வங்க மாநில முதல்வர்களின் சீரிய நடவடிக்கையால் இது சாத்தியமாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் போலியோ நோய் பாதிப்பு உள்ள நாடுகளின் எண்ணிக்கை தற்போது மூன்றாகக் குறைந்துள்ளது. இப்போது பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நைஜீரியா ஆகிய நாடுகளில் தான் போலியோ நோய் தாக்கம் உள்ளது.

இந்தியாவில் போலியோ ஒழிப்பில் மிக முக்கிய பங்காற்றியது றோட்டரி சங்கம்தான் என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் 1985-ம் ஆண்டுதான் போலியோ ஒழிப்புத் திட்டம் தொடங்கப்பட்டது. 3.5 லட்சம் பேர் போலியோ பாதிப்புக்கு உள்ளாகியிருந்தனர் என்று அப்போது கண்டறியப்பட்டது. ஆனால் இது படிப்படியாகக் குறைந்து கடந்த ஆண்டு மேற்கு வங்கத்தில் ஒரு வயதுக் குழந்தை போலியோவால் தாக்கப்பட்டது பதிவானது. கடந்த ஆண்டு ஜனவரி 13ஆம் திகதியிலிருந்து இதுவரை ஒருவர் கூட போலியோ நோய் பாதிப்புக்குள்ளாகவில்லை.

உலகம் முழுவதும் போலியோ நோய் தாக்குதலுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 1,352 ஆக உள்ளது. இதில் இந்தியாவில் உள்ளவர்களின் எண்ணிக்கை 42 ஆக உள்ளது. (ங)

# கிலானி குத்துக்கரணம்



இஸ்லாமாபாத், ஜன. 16

பாகிஸ்தானில் நிலவும் அசாதாரண சூழ்நிலைக்கு முற்றுப் புள்ளி வைக்க, ராணுவத் தலைமையுடன் சமரசமாகச் செல்வதற்கு பிரதமர் கிலானி முயற்சி மேற்கொண்டுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இராணுவத் தலைமைத் தளபதி கயானி மற்றும் முக்கிய அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

இதில் பேசிய பிரதமர் கிலானி, "பாகிஸ்தானைதாங்கி நிற்கும் தூணாக இராணுவம் விளங்குகிறது" என்று புகழாரம் சூட்டினார்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்த அரசியல் சாசன அமைப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதும், பிரதமர் கிலானி ராணுவத்தைப் பாராட்டிப் பேசினார்.

இதுவரை ராணுவத்தை விமர்சித்து வந்த பிரதமர், திடீரென பாராட்டி பேசியிருப்பது அவர் சமரசமாக செல்ல விரும்புவதை உணர்த்துவதாக அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், ராணுவத் தளபதி கயானி தனது நிலையில் இருந்து இறங்கி வரவில்லை என்று கூறப்படுகிறது.

''மெமோகேட்' விவகாரத்தில் ராணுவத் தளபதி, ஐ.எஸ்.ஐ. தலைவர் ஆகியோர் குறித்து பிரதமர் தெரிவித்த கருத்துக்கு அவர் மன்னிப்பு கோர வேண்டும் என்று ராணுவத் தரப்பில் வலியுறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. (ங)

# சண்டைக்கு வருகிறது ஈரான்

## புலம்புகிறது அமெரிக்கா

ஈரான் மீது ராணுவ ரீதியான நடவடிக்கைகளை எடுக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது அமெரிக்கா.

வாஷிங்டன், ஜன.16

ஈரான் தன்னுடைய கடற்படைப் படகுகள் மூலம் எங்களைச் சீண்டிப் பார்க்கிறது என்று அமெரிக்க ராணுவத் தலைமையகமான பென்டகன் குற்றஞ்சாட்டியிருக்கிறது. இதே நிலைமை நீடித்தால் அதன் விளைவை ஈரான் அனுபவிக்க நேரும் என்றும் அது எச்சரித்துள்ளது.

"அணு ஆயுதங்களைத் தயாரித்து அதை ஈரான் தன்னுடைய நட்பு நாடுகளுக்கு வழங்கவுள்ளது. அமெரிக்கக் கடற்படைக் கப்பல்களுக்கு அருகில் தன்னுடைய கடற்படைப் படகுகளை அதிவேகத்தில் இயக்கி, அச்சுறுத்துவதைப் போல நடந்துகொள்கிறது என்று இரண்டு குற்றச்சாட்டுகளை ஈரான் மீது அமெரிக்கா சுமத்தியுள்ளது.


ஈரான் மீது இராணுவ ரீதியான நடவடிக்கைகளை எடுக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது அமெரிக்கா. எனவே அதனுடைய குற்றச்சாட்டுகளைச் சாதாரணமாகக் கருதிவிட முடியாது.

ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்குப் பிறகு அமெரிக்கா கால் வைக்க நினைக்கும் இடம் ஈரானாக இருக்கலாம் என்று சர்வதேச அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

ஈரானும் கடந்த வாரம் ஹோர்முஸ் நீரிணையில் தன்னுடைய மிகப்பெரிய கடற்படைக் கப்பலைக் கொண்டுபோய் நிறுத்தியது. அந்தப் பகுதியில் கச்சா பெற்றோலிய எண்ணெயை வாங்கவரும் சர்வதேசக் கப்பல்களுக்குப் பாதுகாப்பாக நிற்பதாக அதற்குக் காரணம் கூறுகிறது ஈரான். ஆனால் அமெரிக்கக் கடற்படை அந்தப் பகுதியில் ஆதிக்கம் செலுத்தக்கூடாது என்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஹோர்முஸ் நீரிணையில் சென்ற அமெரிக்கப் போர்க் கப்பலான யு.எஸ்.எஸ். நியூ ஆர்லியான்ஸ் கப்பலுக்கு அருகில் 2 ஈரானியப் போர்ப்படகுகள் வந்ததாகவும் அதில் இருந்தவர்கள் ஏ.கே. 47 ரகத் துப்பாக்கியை வெளியில் தெரியும்படி வைத்திருந்ததாகவும் அவர்களில் ஒருவர் அந்தத் துப்பாக்கியையும் அமெரிக்கப் போர்க்கப்பலை நோக்கியே வைத்திருந்ததாகவும்பென்டகன் கூறியுள்ளது. (ங)

# வானிலை செயற்கைக் கோள்



பீஜிங், ஜன. 16

வானிலையை ஆய்வு செய்து தகவல்களைத் தரும் செயற்கைக்கோளை சீனா வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.

பெங்கியூன்-2 என்ற இந்த செயற்கைக்கோள், வானிலை, நீர் வளம் குறித்தத் தகவல்களை வழங்கும் என்று அந்த நாட்டின் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தச் செயற்கைக் கோளை ஷாங்காய் விண்கலத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் தயாரித்துள்ளது. லாங் மார்ச் 3ஏ என்ற ஏவுகணை மூலம் ஜிசாங் ஏவுகணைத் தளத்திலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை இது விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்த செயற்கைக் கோள் மூலம் வானிலை பற்றிய எதிர்வு கூறல்களை தெளிவாகப் பெறலாம் என்றும், 157-வது முறையாக இந்த ரக ஏவுகணை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளதாகவும் சீன அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. (ங)

# அடுத்த 'டைட்டானிக்'




இத்தாலிக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் பவளப் பாறையில் மோதி கடலுக்குள் சரிந்த கப்பலில் எஞ்சியிருந்த பயணிகளும் மீட்கப்பட்டுள்ளனர். 4ஆயிரத்துக்கும் அதிகமான பயணிகள் இந்தக் கப்பலில் இருந்தனர். இவர்களில் மீட்கப்பட்டவர்களைத் தவிர 50 பேரை காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் அவர்களும் நேற்றுமாலை மீட்கப்பட்டதாக இத்தாலி அரசு தெரிவித்துள்ளது. இந்த விபத்தில் [illegible] பேர் உயிரிழந்துள்ளனர். முன்னர் டைட்டானிக் கப்பல் மூழ்கியதைப் போல இதுவும் மூழ்கியுள்ளதால் இந்த விபத்தை "அடுத்த டைட்டானிக்" என்று மேற்கு ஊடகங்கள் வர்ணித்துள்ளன. (ங)

# மீண்டும் தெரிவு



தைபே, ஜன.16

தாய்வான் நாட்டின் அதிபராக மாயிங் ஜோ (வயது-61) மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற வாக்கு எண்ணிக்கை முடிவில் தேசியவாத கட்சியைச் சேர்ந்த இப்போதைய அதிபர் மா யிங் ஜோ 51.6 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனநாயக முன்னணி கட்சி வேட்பாளர் சாய் இங் வென்னுக்கு 45.6 சதவீத வாக்குகள் கிடைத்தன.

சீனாவுக்கு நெருக்கமான மா யிங் ஜோ மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மேற்கத்திய நாடுகளுக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது. (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்

**50** ஆண்டுகள் மக்களிற்கு மகத்தான சேவையினை மேற்கொண்டுள்ள அரச காப்புறுதி நிறுவனமான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் **கிளிநொச்சிக் கிளைக்குப்** பின்வரும் பதவிகளிற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

## Marketing Executive சந்தைப்படுத்தல் அதிகாரி

**தகைமை**

- காப்புறுதித் துறையில் 1 வருட முன் அனுபவம் அவசியம்.
- சிறந்த தலைமைத்துவ ஆற்றல்.
- வயது 25–40

**நன்மைகள்**

- அடிப்படைக் சம்பளம், வாகனப்படி உள்ளடங்கலாக மாதம் 35,000/=
- இலவசக் காப்புறுதி, மருத்துவச் செலவுக் கொடுப்பனவுகள்
- E.P.F, E.T.F
- மற்றும் பல

## Bank Assutance Officer வங்கியின் காப்புறுதி உத்தியோகஸ்தர்

**தகைமை**

- காப்புறுதித் துறையில் 1 வருட முன் அனுபவம் அவசியம்.
- கல்வித் தகைமை G.C.E. A/L
- வயது 20 – 25

**நன்மைகள்**

- அடிப்படைச் சம்பளம்
- போனஸ் கொடுப்பனவு
- மோட்டார் சைக்கிள்
- மருத்துவச் செலவு



## Team Leader குழுத் தலைவர்

**தகைமை**

- காப்புறுதித் துறையில் 2 வருட முன் அனுபவம்
- G.C.E. A/L
- வயது 21 – 40



இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

## Advisor ஆலோசகர்

**தகைமை**

- 18 வயது பூர்த்தி.
- G.C.E. O/L கணிதம், தமிழ் உள்ளடங்கலாக 6 பாடம் சித்தி.
- பகுதி நேரமாக வேலை செய்ய விரும்புகின்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
- அரச மற்றும் தனியார் துறைகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.



தகுதியானவர்கள் தொலைபேசி இலக்கம் உள்ளடங்கிய சுயவிபரக் கோவையினை நீங்கள் விண்ணப்பிக்கும் பதவி நிலையைக் குறிப்பிட்டு எதிர்வரும் 30.01.2012ற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர்,
ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ்,
இல. 31, A 9 வீதி, கிளிநொச்சி.

இவ்வாண்டும்...

# TECHNO WORLD Studies (Pvt) Ltd

## கணினி பயிற்சி நிறுவனம்

நாடளாவியரீதியில் கணினி உயர்கல்விக்காக வழங்கும்

## இலவச புலமைப்பரிசில்

# FREE

COMPUTER SCHOLARSHIP - 2012

பரீட்சை நாள் JANUARY 22 ஞாயிற்றுக்கிழமை

கணினிப் பாடநெறிகள் அனைத்திற்கும்.... 75% வரை கட்டணக்கழிவு பெறும் வாய்ப்பு



- ஒரு மணிநேரம் கொண்ட பல்தேர்வு வினாக்கள்
- பொதுஅறிவு பொது உளச்சார்பினைக் கொண்டது
- 15 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பங்குபெற்றலாம்.
- இப்பரீட்சைக்கு கட்டணம் எதுவும் இல்லை
- கணினி பாடநெறிகள் அனைத்திற்கும் 75% வரை கட்டணக் கழிவு பெறும் வாய்ப்பு

இலவச அனுமதிகளை எமது பயிற்சி மையங்களிலும் [illegible] நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

14 ஆவது ஆண்டில்

யாழ்குடா நாட்டில்...

| | |
|---|---|
| 344, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம் 021 4921124 | 64, பலாலி வீதி, திருநெல்வேலி 021 4922401 |
| 397, 4ம்கட்டை யாழ் வீதி, ஆனைக்கோட்டை-மானிப்பாய் 021 4922400 | A9 வீதி (வைத்தியசாலைக்கு அருகாமை) சாவகச்சேரி 021 4925114 |

4, கண்பொல்லை ஒழுங்கை, கொடிகாமம் வீதி (Science Centre அருகாமையில்) நெல்லியடி-கரவெட்டி 021 4925145

கணினி உலகில் என்றும் உங்கள் நண்பன்

2011 - (O/L) மாணவர்களுக்கு விசேட கழிவுடன் தினமும் கணினி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன


# மரண அறிவித்தல்

# கனகசபை நடராசா



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் தற்பொழுது நல்லூரில் வசித்தவருமான கனகசபை நடராசா 12-01-2012 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-நாகமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான கந்தையா-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சறோஜினிதேவி, பேரின்பநாதன், சந்திராதேவி, வேல்அழகன், பாஸ்கரன் (சுவிஸ்), ஐங்கரன் (கனடா), ராகினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நவரட்ணராஜா, நாகேஸ்வரி (அன்னலட்சுமி-வேலணை), சற்குணலிங்கம் (கனடா), தனேஸ்வரி (சரவணை), ஜெயகௌரி (சுவிஸ்), கீதாஞ்சலி (கனடா), யோகேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், மங்கையர்க்கரசி (லண்டன்), லட்சுமி (கனடா), காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், சிவசுப்பிரமணியம், லட்சுமி, நவமணி, பொன்மலர், தேவராசா மற்றும் இராசமணி, பரமேஸ்வரி (லண்டன்), மகேஸ்வரி (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தயாநிதி சிவகரன்(லண்டன்), தயாரூபன் சசீனா (லண்டன்), யசிமீரா பிரபாகரன்(சுவிஸ்), உதயரூபன்(லண்டன்), றீகன், தர்சினி, பார்த்தீபன்(கனடா), சர்மிளா குலநாதன்(லண்டன்), ஆதீஷன் (பிரான்ஸ்), பர்மிளா, சதீஷன், சாலினி, சாருஜன், சாரங்கன், சுபிட்ஷன், அங்கயன்(சுவிஸ்), ஹரிஸ்(கனடா), நிலேஷனி, பிரித்தா(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், கரணி(லண்டன்), அனோஜன் (சுவிஸ்), அசானா(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-01-2012) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் 14, அரச வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் செம்மணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14, அரச வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாபா ராம்தேவ் மீது கறுப்பு மை வீச்சு



டில்லி, ஜன.16


கறுப்புப் பணத்துக்கு எதிராக டில்லியில் நேற்று முன்தினம் பேட்டியளித்த பாபா ராம்தேவ் மீது தொண்டு நிறுவனத்தை நடத்துபவர் கறுப்பு மையை வீசினார். இதனால், பேட்டி இடை நடுவில் முடிவுற்றது.

யோகா குரு பாபா ராம் தேவ் டில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது, கறுப்புப் பணத்துக்கு எதிராகவும், அதை மீட்க வலியுறுத்தியும் 5 மாநில சட்டப் பேரவை தேர்தலில் பிரச்சாரம் செய்யப் போவதாகவும் அவர் தெரிவித்தார். இந்த பேட்டியின் போது, ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணியசாமி உடனிருந்தார்.

டில்லி பத்லா ஹவுஸ் என்கவுன்டர் விவகாரம் குறித்து ஒருவர் கேள்வி கேட்டார். ஆனால், அந்த கேள்விக்கு ராம்தேவ் பதிலளிக்கவில்லை. இதனால், ஆவேசம் அடைந்த அந்த நபர், ராம்தேவ் மீது கறுப்பு மையை வீசினார். ராம் தேவின் வலது கண் அருகே மை பட்டது. அதிர்ச்சி அடைந்த ராம்தேவ், நான் கறுப்புப் பணத்தை பற்றியும், ஊழலை தடுப்பது பற்றியும் பேசினேன். ஆனால், பதிலுக்கு பரிசாக என் மீது மையை வீசியுள்ளனர். இதுபோன்ற தாக்குதல்களைக் கண்டு அஞ்சமாட்டேன். மையை வீசுவ தால் எனக்கு உள்ள நற்பெயரைக் கெடுக்க முடியாது. ஊழல், கறுப்புப் பணத்துக்கு எதிரான போராட்டம் தொடரும் என்று அவர் ஆவேசமாகக் கூறினார். பின்னர் பேட்டியை இடைநடுவில் முடித்துக் கொண்டு புறப்பட்டு விட்டார். இதற்கிடையே, கறுப்பு மையை வீசியவரை ராம்தேவ் ஆதரவாளர்கள் மடக்கிப் பிடித்து தர்மஅடி கொடுத்தனர்.

இதில், அவரது உதடு கிழிந்து ரத்தம் கொட்டியது. சட்டை கிழிந்தது. தகவல் கிடைத்து வந்த பொலிஸார், அவரைக் கைது செய்தனர். அவரை வேனில் அழைத்துச் செல்ல முயன்றபோதும் ராம் தேவ் ஆதரவாளர்கள் தாக்கினர். (வ)

## ஹசாரே கண்டனம்



யோகா குரு பாபா ராம் தேவ் மீது கறுப்பு மை ஊற்றிய சம்பவத்தை சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே கண்டித்துள்ளார். இது போன்ற நடவடிக்கைகளால் மக்கள் எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தைக் கண்டித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்ததாவது:

ராம் தேவின் முகத்தைக் கறுப் பாக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. ஜனநாயகத்தை கறுப்பாக்க வேண்டும் என்பதுதான் இத்தகைய செயலில் ஈடுபட்டோரின் நோக்கமாகும். ஒருவரின் வாழ்க்கை கறுப்பு மையை ஊற்றுவதால் களங்கப்பட்டு விடாது.

இந்த மை இரண்டு நிமிடத்தில் அழிந்துவிடும். ஆனால் ஊழல் கறை படிந்தவர்கள் மீதான கறை எதை ஊற்றிக் கழுவினாலும் போகவே போகாது.

ராம் தேவ் எப்போதுமே மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படவும், சமூக மேம்பாட்டுக்காகவும் பாடுபடுபவர்.

**ஒருவரின் வாழ்க்கை கறுப்பு மையை ஊற்றுவதால் களங்கப்பட்டு விடாது.**

எங்களைப் போன்ற லட்சக்கணக்கானோரின் ஆதரவு அவருக்கு எப்போதும் உண்டு. என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## கலாம் பிரதமருக்கு கடிதம்

கூடங்குளம் அணு உலைத் திட்ட விவகாரங்களுக்கு விரைவில் தீர்வு காணுமாறு இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கூடங்குளம் அணு உலை திட்டம் தொடர்பான விவகாரங்களைத் தீர்ப்பதில் தாமதம் காட்டினால் அது அணு ஆற்றல் எதிர்ப்பு உணர்வுகளை அதிகரிக்கும். எனவே பிரதமர் இந்த விவகாரத் தில் தலையிட்டு உடன டியாகத் தீர்வு காணவேண்டும். -என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வேட்பாளரிடம் 90 கிலோ நாணயங்கள் பறிமுதல்

லக்னோ, ஜன.16

உத்தப் பிரதேச மாநில சட்டசபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரிடம் இருந்த 90 கிலோ நிறை கொண்ட நாணயங்களைப் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

மாநிலத்தில் தேர்தல் நடைபெற இருப்பதை முன்னிட்டு தீவிரவாதி களால் அசம்பாவிதம் நிகழாமல் தடுப்பதற்காக மாநிலம் முழுவதும் பொலிஸார் வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். சம்பவத்தன்று முசாபர் நகர் மாவட்டத்தில் உள்ள ஜன்சத்தா பகுதியில் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ராஷ்டிரிய லோக்தளம் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஷாநவாஸ் ரானா காரில் வந்து கொண்டிருந்தார். அவரது காரை பொலிஸார் சோதனை செய்ய முயன்றனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஷாநவாஸ் அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தார். எனினும் பொலிஸார் சோதனையை தொடர்ந்தனர். சோதனையில் பல்வேறு மதிப்புக் கொண்ட சுமார் 90 கிலோ எடை கொண்ட நாணயங்களைக் கைப்பற்றினர். அவர் மீது அதிகாரிகளிடம் முறைகேடாக நடந்து கொண்டதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

மேலும் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்வுஷாநவாஸ் மீது கற்பழிப்பு புகார் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய நாடாளுமன்றக் குழு பாகிஸ்தான் பயணம்

பாகிஸ்தானில் ராணுவத்துக்கும், அரசுக்கும் மோதல் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் இந்திய நாடாளுமன்றக் குழு இன்று நான்கு நாள் பயணமாக பாகிஸ்தானுக்குச் செல்கிறது.

நாடாளுமன்றக் குழுவில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 14 நடாளுமன்ற உறுப்பினர்கள் பாகிஸ்தானுக்குச் செல்கின்றனர்.

இந்தியா, பாகிஸ்தான் உறவு மற்றும் வர்த்தகம் குறித்து ஆலோசனை செய்வதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பயணத்தில் பாகிஸ்தான் சட்ட வல்லுனர்கள் மற்றும் அரசியல் கட்சி தலைவர்களை இந்தக் குழு சந்திக்க உள்ளது.

இந்தச் சந்திப்பு ஒரு மாதத்துக்கு முன்னரே திட்டமிடப்பட்டது என்றாலும், பாகிஸ்தானில் தற்போது நிலவி வரும் குழப்பமான சூழ்நிலையில் அங்கு செல்வது சரியாக இருக்குமா என்று கேள்விகள் எழுந்துள்ளன.

இதற்குப் பதிலளிக்குமாறு பாகிஸ்தான் அரசியலமைப்பு மேம்பாட்டு நிறுவனத்திடம் கேட்டபோது, இந்த சந்திப்பு குறித்து பாகிஸ்தான் நாட்டின் செனட் துணைத்தலைவர் ஜன் ஜமாலி மற்றும் சில செனட் உறுப்பினர்களிடம் ஆலோசனை நடத்தியுள்ளதாகவும் பாகிஸ்தானில் நிலவி வரும் பிரச்சினையை பொருள்படுத்தாமல் திட்டமிட்டபடி இந்திய குழு வர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. (வ)

## விஜய் நிவாரண உதவி



**கடலூர் மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விஜய் மக்கள் இயக்கம் சார்பில் இலவச அரிசியை வழங்கினார்.**

கடலூர், ஜன.16

அண்மையில் 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட கடலூரில் நடிகர் விஜய் நிவாரண உதவிகளை வழங்கினார்.

கடலூர் மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விஜய் மக்கள் இயக்கம் சார்பில் இலவச அரிசி வழங்கும் நிகழ்வு கம்பியம் பேட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது விஜய் மேடைக்கு வந்தார். அப்போது அங்கு கூடியிருந்த சுமார் 500 பெண்கள் உட்பட 2 ஆயிரம் பேர் விஜயிடம் இலவச அரிசி வாங்குவதற்காக முண்டியடித்துச் சென்றனர். பொலிஸார் கூட்டத்தை ஒழுங்கு படுத்த முயற்சித்தபோதும் பலனளிக்கவில்லை.

இதையடுத்து மேடையில் இருந்த 5 பேருக்கு அரிசி வழங்கிய விஜய் அங்கிருந்து புறப்பட்டார்.

இந்தநிலையில், நூற்றுக்கணக்கான ரசிகர்கள், பொதுமக்கள் அவரது காரைச் சூழ்ந்தனர். இதனால் அவர் வெளியேற முடியாத நிலை ஏற்பட்டது. பொலிஸார் தடியடி நடத்தி கூட்டத்தினரைக் கலைத்தனர்.

அப்போது திடீரென விஜயின் கார் கண்ணாடி மீது சிலர் கற்களை வீசினர். இதில் கண்ணாடி உடைந்தது. பின்னர் விஜயை ரசிகர்கள் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர். (வ)



பொங்கலையொட்டி இந்த ஆண்டிற்கான இலவசமாக வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதா ஆரம்பித்து வைத்து வைத்தார்.

## விரைவில் 6 வழிப் பாதை

இந்தியாவில் கர்நாடக மாநிலம் பெங்களூருக்கு இடையே ஆறு வீதிகளை அமைக்க ஜப்பானிய அரசு உதவி செய்யமுன்வந்துள்ளது.

இந்தியாவில் மத்திய வீதி போக்கு வரத்துத் துறை அமைச்சர் ஜோஷியுடன், ஜப்பான் போக்கு வரத்துத் துறை அமைச்சர் [illegible] பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த பேச்சுக்குப் பின்பு அதிகாரிகள் கூறியதாவது:

சென்னைக்கும், பெங்களூருக்கும் இடையே ஆறு வழிசாலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு நிதி உதவி அளிக்க ஜப்பான் அமைச்சர் முன் வந்துள்ளார். இந்த ஆறு வழிப்பாதைக்கான திட்ட அறிக்கையை ஜப்பானிய நிறுவனம் ஒன்று தயாரித்து வருகிறது.

இன்னும் இரண்டு மாதங்களில் திட்ட அறிக்கை தயாராகி விடும். அதற்கு பின்பு மத்திய அரசு எவ்வாறு திட்டத்தை செயற்படுத்துவது என்பது குறித்து முடிவு எடுக்கும்.

இந்த ஆறு வழிச்சாலை தமிழகத்தில் ராணிபேட்டை, சித்தூர், பலமநேர், கோலார் வழியாக பெங்களூரைச் சென்றடையும் என்று தெரிவித்துள்ளனர். (வ)

## நெரிசலில் சிக்கி 10 பேர் சாவு

ரட்லம், ஜன.16

மத்திய பிரதேச மாநிலம் ரட்லம் மாவட்டத்தில், ஜோவ்ரா நகருக்கு அருகிலுள்ள உசேன் தெக்ரியில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி, 10 பேர் உயிரிழந்தனர். இவர்களில் ஆறு பேர் பெண்கள்.

மத்திய பிரதேச மாநிலம், ரட்லம் மாவட்டம், ஜோவ்ரா நகரில் உள்ளது உசேன் தெக்ரி. இது முஸ்லிம்களின் புனித தலம். மொகரம் பண்டிகைக்குப் பின்னர் இங்கு நடக்கும் முக்கிய நிகழ்ச்சியில் அதிகமானோர் கூடுவர். அதேபோல், நேற்று முன்தினம் அதிகமானோர் உசேன் தெக்ரியின் முன் திரண்டிருந்தனர்.

அதிகாலையில் அனைவரும் ஒரே நேரத்தில், உள்ளே நுழைய முயன்ற போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி, மூச்சுத் திணறி, 10 பேர் உயிரிழந்தனர். கடுங்குளிரில் நீண்ட நேரம் காத்திருந்தவர்கள், குளிரில் இருந்து தப்பிப்பதற்காக, முண்டியடித்துக் கொண்டு உள்ளே நுழைந்த போது, நெரிசலில் சிக்கி இறந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தென்மராட்சி மண்ணில் உயர் கல்வியை நாடுவோரின் கலங்கரை விளக்கு"

# ஞானோதய அக்கடமி

கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

## மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

A/L 2011 ஆம் ஆண்டு எமது நிறுவனத்தில் கல்வி கற்று கலைப்பிரிவில் புதிய பாடத்திட்டத்தில் தோற்றி சாதனைப் பெறுபேறுகளை ஈட்டித்தந்த எமது மாணவச் செல்வங்களை மனதார வாழ்த்தி மேன்மேலும் சாதனைகளைச் செய்திட வாழ்த்துகின்றோம்.

| பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை | பெயர் | பெறுபேறு |
|---|---|---|---|---|
| | | | S. சுஜிந்தன் | A2 B |
| K. சஞ்சீவன் | 2A B | 2 | P. கௌசியா | 2B C |
| M. கோபிகா | 3A | 5 | T. ஆரணி | 2A C |
| K.கனேந்திரன் | 2A B | 18 | T. அஜிந்தாஜினி | A B C |
| K. மேனகா | 2A B | 29 | கபிலதீபன் | A B C |
| B. நிலாஜினி | A2 B | 30 | C. தர்ஷா | A 2 |
| P. கஜிதா | A2 B | 41 | C | |
| S. குகப்பிரியா | 2A B | 42 | S. தர்ஷிகா | 2B C |
| மிதுனா | 2A B | 49 | N. நந்தகோபன் | 2B C |
| P. நேசன் | 3 A | 64 | T. கீர்த்தனா | A B C |
| P. சிவதர்சி | A2 B | 73 | S. காருண்யா | 2B C |
| K. நிரூஜன் | A2 B | 81 | S. யர்சினி | 2B C |
| K. பிரியதர்சனா | A2 B | 93 | R. கன்னிகா | 2B C |
| P. தனுஷா | A2 B | 123 | R. உஷந்தினி | B2 C |
| T. கார்த்திகா | A B C | 141 | K. கஜீபன் | A C S |
| J. நிரோஜா | A2 B | 142 | R. பிரமிளா | A2 C |
| யசிதா | 3 B | 160 | A. சுவேதகி | A2 B |
| P. குகவரதர் | 3 B | 188 | C. தர்ஷிகா | A2 C |
| V. சரவணபவன் | A B C | 192 | பிரியங்கா | 2B C |
| M. அம்சா | A B C | 234 | மகிழ்தினி | 2A B |
| U. நாதா | A2 B | 241 | சாளினி | 2B C |
| S. பகிநிதி | A2 B | 255 | R. அஜிதா | 2B C |
| C. சலூசா | 3B | 258 | நிவாசன் | A C S |
| B. சந்தியா | A B C | 263 | குலசாந் | A B C |
| S. அமலினி | A B C | 271 | குகசாந் | 2B C |
| K. அஜிந்தா | A B C | 300 | ரமணன் | 2B C |

* மேலும் பழைய பாடத்தில் பரீட்சைக்கு தோற்றியவர்களுள் பதினைந்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கான அனுமதி வாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
* பரீட்சைக்குத் தோற்றிய 100 % மாணவர்களும் சித்திபெற்றுள்ளனர்.
* 2008, 2009,2010 ஆகிய ஆண்டுகளிலும் ஒவ்வொரு வருடத்திலும் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய யாழின் ஒரேயொரு நிறுவனம்.

எமது நிறுவனத்திற்கு சாதனைப் பெறுபேறுகளை பெற்றுத்தந்த மாணவச் செல்வங்களுக்கும், அதற்கு வழிகாட்டிய எமது நிறுவனத்தின் ஆசிரியர்களான திரு.சிவமுகுந்தன், திரு.விஜயரூபன் (விக்கி), திரு.செந்தூரன், திரு.பொன்.சந்துறு, திரு.ஜோதீஸ்வரன், திரு.M.C.சுதாகரன், திரு.றஜித்குமார் ஆகியோருக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் இச்சாதனைகளில் காத்திரமான பங்கை வழங்கிய பாடசாலைகள், பெற்றோர்களுக்கும் எமது இதயம் கனிந்த வாழத்துக்கள்.

குறிப்பு: *. A/L 2014, A/L Day Class என்பன ஆரம்பமாகி சிறப்பாக நடைபெறுகின்றது.
*. A/L வர்த்தகப்பிரிவு யாழ்.கொழும்பு பிரபல ஆசிரியர்களின் வழிகாட்டலில் புதிய உத்வேகத்துடன் நடைபெறுகின்றது. (13073) 6,7,10)

நிர்வாகம்

## சிறுநீரகம் தேவை

ஆண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு உடல் ஆரோக்கியமான ஒருவரின் B⁻ அல்லது O குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை. வழங்கி உதவுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். 077-1626876, 0775219961.

## கோழிக் குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா No.1 புறொயிலர், பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் (19-01-2012) விநியோகிக்கப்படும்.

தொடர்பு-

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ். 021-2226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 077-6225944.

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 077-8996085

## தவறிவிட்டது

தியத்தலாவவில் இருந்து யாழ்.நோக்கி வந்த தனியார் பஸ்ஸில் (14.01.2012) சனிக்கிழமை எனது தங்கச்சங்கிலியுடன் கூடிய தாலியும் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைத்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். தொடர்புகொள்ளவேண்டிய முகவரி-

**கஜமுகன் ஸ்ரோஸ், புத்தூர் சந்தி, மீசாலை,**
**077-3686873, 071-8475028, 077-6672062.**

## மூன்று தொடர் கடைகள் வாடகைக்கு

அச்சுவேலி பஸ் தரிப்பிடத்துக்கு முன்னால் 49 அடி நீளமும், 12 அடி அகலமும் மற்றும் சகல அடிப்படை வசதிகளையும் கொண்ட புதிதாக திறந்து வைக்கப்படவுள்ள மூன்று தொடர்கடைகள் முழுமையாகவோ, தனித்தனியாகவோ வாடகைக்கு விடப்படும். விவரங்கள் நேரில் பேசித் தீர்க்கப்படும். 18.01.2012 அன்று திறப்புவிழா நடைபெறும்.

**தொடர்பு- செல்லத்துரை தவமணி,**
**அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.**
**077 615 8066, 021 490 8566, 077 468 1475**

## லொறிச்சாரதி உடன் தேவை

கொழும்பு மற்றும் வவுனியாவுக்கான சேவையில் ஈடுபடும் லொறிக்கு சாரதி தேவை. சாரதி அனுமதிப்பத்திரத்துடன் நேரில் வரவும்.

**தொடர்பு: ஜமுனா ஸ்ரோஸ்,**
**39, பிரதான வீதி, நெல்லியடி.**
**தொ.பே. 021 226 3970,**
**0777 422 604.**

## தரம் 5 மாணவர்களே!

**இதோ உங்கள் வெற்றிக்கான அருத்தவார வழிகாட்டி எதிர்வரும் திங்கள் வெளிவருகின்றது.**



திங்கள் தோறும் வெளிவரும் முதல்தரக் கையேடு

# புலமைச்சுடர்

தரம் 3, 4, 5 மாணவர்களுக்கான ஒரு வாரகால ஆக்கங்களைத் தாங்கி வரும் சிறப்பு வழிகாட்டி

முற்றிலும் புதிய பாடத்திட்டத்தைத் தழுவியது 16

பக்கங்கள் : 16 16.01.2012 - 22.01.2012 முதலீடு : 15/=




இவ்வாரக் கையேட்டை அலங்கரிக்கும் புலமைச்சுடர் வளவாளர் குழாம்



சகல பத்திரிகை முகவர்களிடமும், புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : 071 6850005 , 071 4123035

# பாராட்டி வாழ்த்தி வரவேற்கின்றோம்



முரளிதரன்



எழிலரசி

தெல்லிப்பழை பிரதேச செயலராக கடந்த ஏழு வருடகாலமாக அரும்பணி ஆற்றி எமது J/223 வித்தகபுரம் கிராம அலுவலர் பிரிவிற்கு எம்முடன் தோளோடு தோள்நின்று, உதவித்திட்டங்களை வாரி வழங்கி எமது கிராம மக்கள் மனதில் இடம் பிடித்து மக்களின் நல்வாழ்வில் அக்கறையுடன் செயற்பட்ட எமது அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய சுப்பிரமணியம் முரளிதரன் அவர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலராக இடம் மாற்றம் பெற்றவேளையில் அவரது சேவையை மனமாரப் பாராட்டி வாழ்த்தி இவரது சேவையை தொடர்வதற்காக சண்டிலிப்பாய் பிரதேச செயலராக கடமையாற்றி எமது தெல்லிப்பழை பிரதேச செயலராகப் பொறுப்பேற்றிருக்கும் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் அவர்களை வருக! வருக! என வரவேற்று, இவரது சேவையைத் தொடர்ந்தும் எதிர்பார்க்கும்

**வித்தகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கமும்,**
**வித்தகபுரம் மக்களும்.**

(13088) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் உணர்ச்சி சுயநலமா? பொதுநலமா?

உணர்ச்சிகளிலேயே மிக மோசமான உணர்ச்சி, சுயநலத்தால் வருகின்ற உணர்ச்சிக் கொந்தளிப்பு தான். சுயநலம் என்பது ஒருவிதமான எதிர்மறையை வாழ்க்கையின் தன்னலம் கொண்ட போக்கைக் கொண்டுள்ளது.

'தான் உண்டு', 'தன் வேலையுண்டு' என்று எவராலும் இருக்க முடியாது. காரணம் மனிதன் கூட்டுணர்வுகளால் கட்டியமைக்கப்பட்டுள்ளான். நாம் போடுகிற ஒரு சட்டை குறைந்தது ஆயிரம் பேரின் உழைப்புக்குப் பிறகு எமக்குக் கிடைக்கிறது.



அப்படியானால் மனிதன் எப்படி சுயநலமுடன் வாழ முடியும். சார்ந்து வாழ்கின்ற ஒப்பற்ற உணர்வுகளைப் பெற்றுள்ளவன் மனிதன் மட்டும் தான். அதை அனைவரும் உணர வேண்டும்.

கீழ்க்காணும் வரிகளைக் கவனியுங்கள் '' நான் சுயநலமாக வாழலாம். எப்போது தெரியுமா? இந்த உலகத்தில் எப்போதும் நான் மட்டும் இருக்கிறேனோ அப்போது''

என்ன புரிந்ததா? அதாவது எப்போது இந்த உலகத்தில் எவருமே இல்லாமல் போகிறார்களோ அப்போதுதான் ஒரு சுயநல உணர்ச்சியுடன் வாழ முடியும்.

இதை வேறொரு விதத்தில் சொல்ல வேண்டுமென்றால், இன்னும் அழகாகச் சொல்ல வேண்டுமென்றால் நான் சுயநலமாக வாழவே முடியாது. ஏனென்றால் என்னோடு பலர் வாழ்ந்தால் மட்டுமே நான் மனிதனாக இருக்க முடியும்.

'மனிதர்கள் வாழாத உலகத்தில் மனிதர்கள் இருக்க முடியாது' என்பதுதான் எவ்வளவு தத்துவார்த்தமான வரிகள் பாருங்கள்...

எனவே எப்போதும், எங்கும் போற்றப்படுவதும், ஏற்கப்படுவதும் பிறர் நலமே, அந்த மகா உணர்ச்சியே உலகத்தை வாழ வைக்கிறது.

தமிழகத்தில் கலைஞர் கருணாநிதியின் ஒரு வாசகம் பேருந்தில் ஏறும் இடத்திலும் இறங்கும் இடத்திலும் இவ்வாசகம் இடம்பெற்றிருக்கும்.

அது,

''நான், நீ என்று சொன்னால் உதடுகள்கூட ஒட்டாது, 'நாம்' என்று சொன்னால்தான் உதடுகள் கூட ஒட்டும்'' என்பது. நாம் என்ற கூட்டுணர்வு உணர்ச்சி ஓர் ஒப்பற்ற மகா உணர்ச்சி.

சுயநலத்தால் வருகின்ற உணர்ச்சிக் கொந்தளிப்பைச் சுயநலத்தைக் குறைப்பதால் ஒழித்துக் கட்ட முடியும். அல்லது தன் ஆணவ அல்லது அகங்காரத்தனத்தை நினைத்து வருத்தப்படுவதாலோ, வருத்தம் தெரிவிப்பதாலோ முடிவுக்குக் கொண்டு வந்துவிடலாம். இல்லையென்றால், ஒரு மனிதனின் சுயநலம் இன்னொரு மனிதனின் சுயநலத்தைத் தாக்கி, அங்கங்கு சுயநலங்களே உலகில் தலைவிரித்து ஆடத் தொடங்கிவிடும்.

சுயநலம் என்பது ஒருவரில் மட்டும் வெளிப்படும் என்பதல்ல, அது பலரிலும் வெளிப்படும். ஒரு நாட்டில் இரண்டு கட்சிகள் இருப்பதாக நினைத்துக் கொள்வோம். அவை 1. ஜி.கே. 2. எ.ஜி.கே. என்று வைத்துக் கொள்வோம்.

அந்த நாட்டில் 10 கோடி மக்கள், இதில் 6 கோடி ஜி.கே. கட்சியினர். 4 கோடி மக்கள் எ.ஜி.கே. கட்சியினர். ஜி.கே. வின் தலைவருக்கும் எ.ஜி.கே. வின் தலைவருக்கும் கருத்து வேறுபாடுகள் வரும்போது 6 கோடி மக்களுக்கு 4 கோடி மக்களிடம் சண்டையோ அல்லது பகைமை அல்லது வாக்குவாதம் ஏற்பட்டு விடும் என்று சொன்னால் இதில் என்ன பிறர்நலம் இருக்கப் போகின்றது.

(தொடரும்) *[நன்றி: அரும்பு]*

# மாணவர்களின் எதிர்காலம் ஆரம்பக் கல்வியில் உள்ளது

## வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஜன.16

மாணவர்களின் எதிர்காலக் கல்வியின் வளர்ச்சி அவர்களின் ஆரம்பக் கல்வியில் தங்கியுள்ளது. இதனால் பெற்றோர்கள் அவதானத்துடன் முன்பள்ளிக் கல்வியை பிள்ளைகளுக்குச் சீராகக் கிடைக்கப் பெறச் செய்ய வேண்டும்.

ஏனெனில் முன்பள்ளிச் சிறுவர்கள் பெற்றோர்களின் அரவணைப்பில் அதிகம் இருப்பதால் அவர்கள் கூறும் அறிவுரைகளையே பிள்ளைகள் செவிமடுப்பார்கள் என வலி. கிழக்குப் பிரதேச சபையின் உறுப்பினர் ஆ.ஐங்கரன் தெரிவித்தார்.

உரும்பிராய் சென்.மைக்கல் முன்பள்ளியின் கலைவிழாவும் மாணவர்கள் கௌரவிப்பும் அண்மை யில் உரும்பிராய் றோ.க.த.பாட சாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**முன்பள்ளிகள் சீராகச் செயற்படுவதுடன் பிள்ளைகளின் ஆரோக்கியத்திலும் கவனம் எடுத்தல் வேண்டும்.**

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறார்களின் கல்வியை வளப்படுத்துவதற்கு ஆரம்பக் கல்வியே கைகொடுக்கிறது.

இதனை பெற்றோர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளின் எதிர் காலக் கல்வி தொடர்பாகத் திட்டமிடலுடன் செயற்பட வேண்டும்.

குறிப்பாக முன்பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்க்கும் போது அங்குள்ள பாடசாலையில் வளங்கள், ஆளணி வளங்கள், கற்றல் செயற்பாடுகள் என்பனவற்றை அவதானித்து பிள்ளைகளை முன்பள்ளியில் சேர்க்க வேண்டும்.

அத்துடன் முன்பள்ளிகளும் தமது செயற்பாடுகளைச் சீராக வழங்குவதுடன் பிள்ளைகளின் ஆரோக்கியம் தொடர்பாகவும் அக்கறை கொள்ள வேண்டும்.

அரசால் வழங்கப்படும் சத்துணவுத் திட்டம் முன்பள்ளிகளுக்குக் கட்டாயம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். - என்றார். (எ-313)



கைதடி தெற்கு மின்னொளி மழலைகள் முன்பள்ளியின் வருடாந்த கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் கைதடி தெற்கு சனசமூக நிலைய அரங்கில் முன்பள்ளி வளர்ச்சிக் குழுத் தலைவர் திருமதி தெய்வேந்திரம் வசந்தி தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த சி.பற்குலேந்திரன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (எ-288)

# கலைஞர்களின் விவரம் திரட்டல்

இலங்கை தமிழ் கலைஞர்களின் தொகுப்பு நூல் ஒன்றினை வெளியிடும் பொருட்டு, கலைஞர்களை இணைத்துக் கொள்ளவதற்காகக் குறித்த கலைஞர்கள் எந்தெந்த கலைத்துறைகளில் ஈடுபாடு கொண்டவர்கள் என்பதனையும், தொலைபேசி இலக்கத்தையும் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

இலக்கியம், நாடகம், நாட்டுக்கூத்து, நடனம், இசை, ஓவியம், சிற்பம் ஆகிய கலைத்துறைகளைச் சார்ந்த கலைஞர்கள், தொகுப்பு நூலில் உள்ளடக்கப்படுவர்.

மேலதிக விவரங்களைச் சண்டிலிப்பாய் பிரதேச கலாசாரப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். (எ)

# அங்குரார்ப்பண நிகழ்வு

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மகளிர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் இவ்வாண்டுக்கான புதிய பயிற்சி அணியின் அங்குரார்ப்பண நிகழ்வு வட்டு. கிழக்கில் அமைந்துள்ள மகளிர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் கடந்த 4ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது.

வலி.மேற்கு கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசத் தலைவர் சிவஞானபோதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிர தேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சிவகுமார் கலந்து கொண்டார்.

மேலும் வலி.மேற்கு பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.கோகுலன், கிராம அபிவிருத்திப் பிரிவின் நிகழ்சி திட்ட உதவியாளர் கி.நிலக்சன், தையல் போதானாசிரியர் திருமதி மொறாயஸ், சமாச உறுப்பினர்கள், மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# நிர்வாகிகள் தெரிவு

வரணி,ஜன.16

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வரணி வடக்குக் கிளையின் நிர்வாகக் குழுத் தெரிவு கடந்த ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியா சாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

நிர்வாக சபை உறுப்பினர்கள் விவரம் வருமாறு:

தலைவர் வீ.பாலசிங்கம், செயலாளர் சி.அருணாசலம், உறுப்பினர்களாக கா.காங்கேசு, க.பரமேஸ்வரன், க.தனுஸ்கோடி, சி.சுப்பிரமணியம், சி.செந்தில், க.ஆறுமுகம்.

* * *

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் கைதடியிலுள்ள தொழிற்பூங்காவில் இடம்பெற்றது.

புதிய நிர்வாகிகளின் விவரம் வருமாறு: தலைவராக வி.கனகசபையும் செயலாளராக கே.வரதராஜாவும் பொருளாளராக பி.கமிலசும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன் மேலும் ஆறு பேர் தெரிவு செய்யப்பட்டு மொத்தமாக ஒன்பது பேர் கொண்ட நிர்வாகிகள் தெரிவாகினர். (எ-288)

* * *

பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் வருடந்தப் பொதுக்கூட்டத்தில் புதிய செயற்குழு தெரிவு செய்யப்பட்டது. செயற்குழு விபரம் வருமாறு:

தலைவர்- கந்தசாமி இராசலிங்கம், உபதலைவர்- மலர்விழி ஸ்ரீகந்தராசா, செயலாளர்- செல்வரெட்ணம் ஜெயகாந்தன், உபசெயலாளர்- தருமலிங்கம் அருணகிரிநாதன், பொருளாளர்- சொர்க்கலிங்கம் சிவயோகலிங்கம் வாசிகசாலைப் பொறுப்பாளர்- வேலுப்பிள்ளை இராசரெத்தினம், நூல் நிலையப் பொறுப்பாளர்- திருமதி நித்தியலெட்சுமி கைலாசபதி, சமயப் பொறுப்பாளர்- பஞ்சாட்சரம் ஞானபண்டிதன், கலைகலாசாரப் பொறுப்பாளர்- திருமதி கயல்விழி பரமானந்தம், விளையாட்டுப் பொறுப்பாளர்- சுப்பிரமணியம் கேதீஸ்வரன், சுற்றாடல் சுகாதாரப் பொறுப்பாளர்- கணபதிப்பிள்ளை தவச்செல்வம் , பத்திராதிபர்களாக- சின் னத்துரை வரதலிங்கம், உறுப்பினர்களாக- பரராசசிங்கம் தேவநேசன், திருமதி இராஜேஸ்வரி தளையசிங்கம், திருமதி ஸ்ரீ[illegible] ஜெகதீஸ்வரி தேவநாதன் [illegible]பாளர்- பொன்னையா பேரின்பநாயகம், எண் பார்வையா[illegible] பழனிநாதன் ஆரூரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?


**மேடம்:** சொந்த பந்தங்களின் வாழ்த்துச் செய்திகளைக் கேட்கலாம். கடந்தகால அனுபவங்களைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரென தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். ஆசைகள் நிறைவேறும்.


**இடபம்:** குடும்ப உறுப்பினர்களின் கோரிக் கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற் கலாம். மற்றவர்கள் கேட்காமலேயே சில உதவிகளைச் செய்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். நீண்ட நாள்களாகச் சந்திக்க நினைத்த ஒருவரை இன்று திடீரெனச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டும்.


**மிதுனம்:** வியக்கத்தக்க செய்திகளைக் கேட்க லாம். உறவினர்கள், நண்பர்களுக்கு வாழ்த்துச் சொல்லி மகிழ்வீர்கள். குடும்ப உறுப்பினர் களுடன் சில விடயங்களை மனம் விட்டுப் பேசுவீர்கள். அயலாருக்கு இனிப்புகளைக் கொடுத்து இன்பம் அடைவீர்கள். திட்டமிட்ட வேலைகளை தங்கு, தடையின்றி செய்து முடிப்பீர்கள். பாசம், நேரம் அதிகரிக்கும்.


**கடகம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறி நிம்மதி அடையும் நாள். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரை தொடர்பு கொண்டு வாழ்த்துச் சொல்வீர்கள். உதிரி வருமானங்களைப் பெறலாம். இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும்.


**சிங்கம்:** அயலாருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். பொழுதுபோக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். உறவினர்கள் சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்பட்டு நடக்கலாம். சில பொருள்களை மறதியாக எங்காவது வைத்துத் தேடலாம். தெய்வ வழிபாடு திருப்தி தரும்.


**கன்னி:** பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிந்து மற்றவர்கள் மத்தியில் பளிச்செனத் தோற்றம் அளிப்பீர்கள். வீட்டில் வசதி வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். அதிக செலவில் முடிக்க நினைத்த வேலை ஒன்றை குறைந்த செலவில் முடிக்கும் வாய்ப்பு உருவாகும்.


**துலாம்:** கோபம், வேகத்தைக் குறைத்து எதிலும் பொறுமையாகச் செயற்படுவீர்கள். நீங்கள் எதிர்பாராத உறவினர் ஒருவர் உங்களுடன் பேசலாம். நீண்ட நாள்களாகத் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்த ஒருவரை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிட்டும். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்கு செல்ல நேரிடலாம். ஆலய வழிபாடு அமைதி தரும்.


**விருச்சிகம்:** அயலாருக்கு இனிப்புகளை வழங்கி வாழ்த்துச் சொல்வீர்கள். நாடி வந்த சிலருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். நண்பர்களுடன் கேளிக்கை, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும்.


**தனுசு:** குடும்ப உறுப்பினர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். ஆரம்பித்த சில வேலைகளை தங்கு தடையின்றி செய்து முடிப்பீர்கள். நலிந்தவர்கள் சிலருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். எதிர்பாராத வகையில் வரும் வருவாயால் பணத் தேவைகள் பூர்த்தியாகும். கடந்த கால தவறுகளை கைவிடுவது என்று, புதிய உறுதி மொழி எடுப்பீர்கள். அறிவாற்றல் பெருகும்.


**மகரம்:** குடும்பத்தினருடன் வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். தம்பதியர் இடையே பாசம் கூடும். நீண்ட நாள்களாக செல்ல நினைத்த கோயில்கள் சிலவற்றுக்குச் செல்லலாம். தொலைபேசி வழிச் செய்திகள் உங்களின் உற்சாகத்தை அதிகரிக்கலாம். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும் வகை யில் அமையும். சிலரை எதிர்பாராமல் சந்திக்க நேரிடலாம்.


**கும்பம்:** ஆசைப்பட்ட சில பொருள்களை அதிக விலைக்கு வாங்குவீர்கள். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். மற்றவர்களுக்காகச் செலவு செய்து பெருமை அடைவீர்கள். பிறரை நம்பி எந்தக் காரியத்தையும் செய்யாமல் நீங்களே தன்னிச்சையாகச் செயற்படுவீர்கள். சில்லரை கேலி பேசி மகிழ்வீர்கள். பயணங்களில் தொந்தரவு உண்டு.


**மீனம்:** வீட்டில் மகிழ்ச்சி, சந்தோஷம் குடிகொள்ளும். உறவினர்களின் பாச மழையில் நனைவீர்கள். உங்களின் மன எழுச்சியை, உற்சாகத்தை அதிகரிக்கும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். மற்றவர்கள் மத்தியில் பகட்டாகத் தோற்றம் அளிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். உங்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த சிலரைச் சந்திப்பீர்கள்.

**நாளை**

தை 03 செவ்வாய்க்கிழமை 17.01.2012
திதி: நவமி மு.இ. 11.39 வரை
நட்சத்திரம்: சுவாதி சித்தம் மு.இ. 10.09வரை
சுபநேரம்: 11.05 - 12.35 வரை,
ராகு காலம்: 03.35- 05.05 வரை

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | | 5 | | | 4 | | 6 |
| | | | | | 8 | | | |
| 5 | | 3 | | 6 | | 1 | 7 | 8 |
| 9 | | | | | | | 5 | |
| | 8 | | 9 | 5 | 2 | | 1 | |
| | 3 | | | | | | | 9 |
| 3 | 2 | 9 | | 8 | | 6 | | 1 |
| | | | 4 | | | | | |
| 6 | | 7 | | | 1 | | 8 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், புகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை பொன்னுச்சாமி



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பொன்னுச்சாமி 13-01-2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, செல்ல முத்து, தங்கம்மா, கனகம்மா மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் யோகம்மாவின் அன்புக் கணவரும் சற்குணலீலாவதி, மகேஸ் வரன் (ஓய்வுநிலை பிரதி அதிபர்- யாழ். இந்துக் கல்லூரி, ஆசிரியர்-சென்.ஜோன்ஸ் கல்லூரி), சறோஜினி தேவி, காலஞ்சென்ற இலட்சுமிதேவி மற்றும் சந்திர தேவி, சகுந்தலாதேவி, ஜெமீலா தேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் பரமேஸ்வரி, பாலகிருஸ்ணன், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரன், புண்ணியானந்தம் மற்றும் தர்மகுலசிங்கம், சுந்தரராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், தமிழ்ச்செல்வி, அன்பரசி (கனடா), தயாநிதி (பிரதேச செயலகம்-உடுவில்), இராஜசேகரன் (கனடா), திருக்கு மரன் (கனடா), சஞ்சயன் (Design Engineer-Australia), சஞ்சீவன் (Commercial Bank-Kilinochchi), சஞ்சுதன் (Seylan Bank-Kilinochchi), வசீகரன் (கனடா), வனிதா (U.K), கவிதா (U.K), வாகீசன், கஜாகரன் (Engineer-U.K), பிரதாபன் (Tchnical Officer), பிரதீபா, பிரகாசன், புவிதரன் (U.K), கங்காதரன், ரசிக்கா (கனடா), கஜன், தனுஜா (கனடா), அனுஜா (கனடா), விபூஷன், (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் கோபிகா, தார்மிகா, நவீன், விதுன், தீபிகன், ஜஸ்மினி, அபினன், வைஷ்ணன், விர்ஜினா, தனோஜன், நேசனா, வருண், அர்ஜின், நிஜானிகா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் இன்று (16-01-2012) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அன்னாரின் கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

தகவல்
பொ.மகேஸ்வரன் (மகன்)
(ஓய்வுநிலை பிரதி அதிபர்
-யாழ். இந்துக்கல்லூரி,
ஆசிரியர்-சென்.ஜோன்ஸ் கல்லூரி.)

நவரட்ணராஜா வீதி,
நெட்டிலிப்பாய்
பிள்ளையார் கோயிலடி,
கோண்டாவில்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டிக் கிரியையும்

நந்தவில்லா, Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

### தங்கரத்தினம் குமாரசாமி

### (முத்தம்மா)

மலர்வு 19/12/1933 உதிர்வு 17/12/2011



என்றும் எம்மை அன்பாலும்,
பண்பாலும் அரவணைத்து
இனிய வாழ்வு தந்த தெய்வமே
மாதம் ஒன்று சென்றதம்மா
உங்கள் மதிமுகம் மாறவில்லை
எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக
அமைந்த உங்கள் சிரித்தமுகம்
காண்பதற்கு ஏங்கித் தவிக்கின்றோம்
எம்முடன் சேர்ந்து வாழ்ந்த
ஒவ்வொரு
கணமும் எமக்குச் சொர்க்கமாய்
இனிக்குதம்மா உங்களை என்றும்
எங்கள் இதயக் கோயிலிலிருந்து
பூசிப்போம் அம்மா.

எங்கள் துயரில் நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் எமக்கு ஆறுதல் கூறிய அனைத்துள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துகொள்வதோடு, இன்று (16-01-2012) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நந்தவில்லா,
Dr.சுப்பிரமணியம் றோட்,
சுன்னாகம்.

(13077) (6,7,10)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளிகளுக்கு இராணுவத்தினர் எச்சரிக்கை

கொழும்பு,ஜன.16
விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் தவறான வழிகளில் ஈடுபடக் கூடாது என்று இராணுவத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் செயற்படும் குழுக்களுடன் இணைந்து செயற்பட்டால் மீளவும், முன்னாள் போராளிகளை கைது செய்யநேரிடும் என்று இராணுவத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, முன்னாள் போராளிகள் அரசியலில் ஈடுபடுவதற்கு எவ்வித தடையும் இல்லை என்று புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சந்தன ராஜகுரு தெரிவித்துள்ளார்.

சட்ட ரீதியான முறையில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் குறித்து இராணுவத்தினர் உன்னிப்பாக கண்காணித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

> முன்னாள் போராளிகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டிருந்தால், அவர்கள் தங்களது கருத்துக்களை வெளியிட அனுமதி அளிப்பதில் என்ன தவறு என்று உதுல் பிரேமரட்ண கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களுடன் முன்னாள் போராளிகள் இணைந்து செயற்படுவதாக அண்மையில் சகோதரத்துவத்தின் மக்கள் அரன் அமைப்பைச் சேர்ந்தவரான உதுல் பிரேமரட்ண வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, எந்த சட்டத்தின் கீழ் முன்னாள் போராளிகள் கைதுசெய்யப்படுவார்கள் என்று உதுல் பிரேமரட்ண கேள்வி எழுப்பியுள்ளார். அரச விரோத செயல் என்று அரசு எதனைக் கருதுகின்றது என்பதனை தெளிவுபடுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். விடுதலைப் புலிகளுடன் கடந்த காலங்களில் இணைந்து செயற்பட்ட காரணத்துக்காக அவர்களை ஒதுக்கி விட முடியாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டால் மீண்டும் ஒரு கிளர்ச்சி வெடிக்க வாய்ப்பு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

முன்னாள் போராளிகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டிருந்தால், அவர்கள் தங்களது கருத்துக்களை வெளியிட அனுமதி அளிப்பதில் என்ன தவறு என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## அனைத்துக் கட்சி குழு அமைக்கத் திட்டம்

கொழும்பு,ஜன.16
தேசிய ரீதியில் பொதுவான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதனை இலக்காகக் கொண்டு அரசு அனைத்துக் கட்சிக் குழுவொன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இந்தக் குழு நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சிகளுக்கு மேலதிகமாக சிவில் அமைப்புக்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன. கட்சி, இன மற்றும் மத பேதங்களின்றி நாட்டின் அபிவிருத்தியை மேற்கொள்ள இந்த அனைத்துக் கட்சிக்குழு நடவடிக்கை எடுக்கும் என்று அரசின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டால் பல்வேறு சவால்களை இலகுவில் வெண்றெடுக்க முடியும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ச)

## பகிடிவதை செய்தோரின் மாணவர் அந்தஸ்து பறிப்பு

கொழும்பு,ஜன.16
முதல் வருட மாணவி ஒருவரை பகிடிவதைக்கு உட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள றுகுணு பல்கலைக்கழகத்தின் 5 மாணவர்களின் மாணவர் அந்தஸ்து தற்காலிகமாகப் பறிக்கப்பட்டுள்ளது.

> மாணவி ஒருவரை பகிடிவதைக்கு உட்படுத்தியதாலேயே இந்த மாணவர்களின் மாணவர் அந்தஸ்து பறிக்கப்பட்டுள்ளது

இந்த ஐந்து மாணவர்கள் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெற்று வருவதாக றுகுணு பல்கலைக்கழகத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

கொழும்பு - வெள்ளவத்தை பகுதியைச் சேர்ந்த மாணவி ஒருவர் அண்மையில் றுகுணு பல்கலைக் கழக சிற்றுண்டிச்சாலையில் வைத்து பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், அவர் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## துமிந்த சில்வா மூன்று மாதத்தில் நாட்டுக்கு

கொழும்பு,ஜன.16
ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா இன்னும் மூன்று மாதங்களில் நாடு திரும்புவார் என்று நுகேகொடையில் அமைந்துள்ள துமிந்த சில்வாவின் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முல்லேரியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் காயமடைந்த துமிந்த சில்வா சிங்கப்பூரில் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார் என்று அவர் தெரிவித்தார்.

துமிந்த சில்வா நுகேகொடையில் உள்ள அலுவலகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)



கொழும்பு முதல்வர் ஏ.ஜே.எம்.முஸம்மிலுக்கும் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதர் சீமா இலாகி பலுச்சிக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு மாநகர சபையில் இடம் பெற்றது.

## காணிப் பிரச்சினையா? அழையுங்கள் 1933

கொழும்பு,ஜன.16
காணி தொடர்பில் பிரச்சினைகள் எதுவும் இருக்குமாயின் அது குறித்து நடவடிக்கை எடுக்க குற்றத் தடுப்புத் திணைக்களத்தில் தனியொரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

காணிப் பிரச்சினைகள் குறித்து முறையிட விசேட தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 24 மணித்தியாலங்களும் இயங்கும் வகையில் 1933 என்ற தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

காணி அதிகாரத்தை சூழ்ச்சி செய்து பெற்றுக்கொள்ளுதல், பலாத்காரமாக காணிகளை கையகப்படுத்தல் என்பவை குறித்து பொது மக்கள் முறைப்பாடு செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சங்கிலி திருடிய இராணுவ வீரர் கைதானார்

கொழும்பு,ஜன.16
வெல்லவீதி - கனசிங்கபுர பஸ் நிலையத்தில் இருந்து மினுவாங்கொட நோக்கி பயணித்த தனியார் பயணிகள் பஸ்ஸில் பெண் ஒருவரின் கழுத்தை நெரித்து இராணுவ வீரர் ஒருவர் தங்கச் சங்கி லியைத் திருடியுள்ளார்.

கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓட முயற்சித்த இந்த இராணுவ வீரரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்துள்ளனர்.

வெல்லவீதி பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்து திருடப்பட்ட இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் இலங்கை இராணுவ தலைமையகத்தில் முதலாவது ஆயுத புலனாய்வுப் படையில் கோப்ரல் பதவியில் இருந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வெல்லவீதி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## பல்கலைக் குழப்பத்தில் வெளிநாட்டுச் சக்திகள்

கொழும்பு,ஜன.16
பல்கலைக்கழகங்களில் நிலவிவரும் பிரச்சினைகளின் பின்னணியில் வெளிநாட்டு சக்திகள் இருப்பதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் சில பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு தூதரகங்களின் உதவியுடன் வெளிநாட்டு விரிவுரையாளர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

இவ்வாறு கடமையாற்றி வரும் வெளிநாட்டு விரிவுரையாளர்களின் நடவடிக்கைகள் குறித்து சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

> பல்கலைக் கழகங்களில் கடமையாற்றி வரும் வெளிநாட்டு விரிவுரையாளர்கள் தொடர்பில் கண்காணிக்கப் படுவதாக சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

பல்கலைக்கழகங்களில் கடமையாற்றிவரும் வெளிநாட்டு விரிவுரையாளர்கள் தொடர்பில் சிங்களப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகமான வெளிநாட்டு விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகங்களில் ஆங்கில பாடத்தைப் போதிக்கும் நோக்கில் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட விரிவுரையாளர்களுக்கு வெளிநாட்டு தூதரகங்கள் அனுசரணை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## போலி தங்க ஆபரணங்களை அடகுவைத்த சகோதரிகள் கைது

கொழும்பு,ஜன.16
போலியான தங்க ஆபரணங்களை அடகுவைத்து ஒரு மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் மோசடி செய்த சம்பவம் தொடர்பில் இரண்டு பெண்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் பரஹலரணசிங்க தலைமையில் இடம்பெற்றது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரிகளுக்கே இவ்வாறு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வங்கியில் அடகு வைக்கப்பட்ட வளையலொன்றை பரிசோதனை செய்யும் போதே அவை போலியான தங்கம் என்று கண்டறியப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் குறித்த வழக்கினை கொலன்னாவை அரச வங்கிக் கிளையொன்றின் முகாமையாளர் தாக்கல் செய்திருந்தார். இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## தீ வைத்து எரிப்பு

கொழும்பு,ஜன.16
புத்தளம் - மனத்தீவு கிராம சேவையாளர் அலுவலகத்தின் சொத்துக்கள் இனந்தெரியாத சிலரால் நேற்று முன்தினம் சனிக்கிழமை தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன என்று புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கிராம சேவையாளர் அலுவலகத்தின் கதவை உடைத்துக் கொண்டு உள்நுழைந்த இனந்தெரியாத குழு, அதனுள் இருந்த ஆவணங்களை தீ வைத்து எரித்துள்ளது.

கிராம அலுவலகருடன் ஏற்பட்ட மனக்கசப்பால் அவருக்கு எதிரானவர்கள் இவ்வாறு தீ வைத்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ச)

## தீயினால் அழிவு

நுவரெலியா,ஜன.16
கெந்தலை, இறம் பொடை கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட வெளன்டன் தோட்டத்துக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை தீ பரவியதில்10 ஏக்கர் நிலப்பரப்பு அழிவடைந்துள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எரந்தன ஹேமவர்தன தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேந்தாரைக் கொல்லி

கோபம்- இது ஒரு தற்காலிக பைத்தியகாரத்தனம். ஒரு வகை மனோவியாதி. ஆசையின் வளர்ப்பு மகன்.

கோபத்தை விட்டவர்கள், வென்றவர்கள்; பூமிக்குச் சொர்க்கத்தை இழுத்து வரும் புண்ணியவான்கள்.

எப்போதும் கோபம் ஆசையை அடுத்தே வரும். இராமனைத் தொடர்ந்த இலக்ஷ்மணனை இராமானுஜன் என்றாற் போல, காமத்தைத் தொடரும் கோபத்தைக் காமானுஜன் என்பர் வடமொழியார். ஆசைகள் தடைப்படும் போது - அல்லது உடைபடும் போது கோபம் பிறக்கும்.

சூதாடி வாழ்வை இழந்த தருமருடன் வனவாசத்தில் வாதாடிப் பார்த்தாள் பாஞ்சாலி. ''உமக்குக் கோபமே வராதா? 'கொல்லுங்கள்' என்று ஆணையிட்டால் துரியனைப் வீமர் பிசைந்து விடுவார். கர்ணனை அர்ஜுனர் காணாமல் போனவர்கள் பட்டியலில் சேர்ப்பார். ஐயா... கோபப்படமாட்டீர்களா?'' என்றாள். தருமர் அமைதி காத்தார். ஷாத்திரம் என்ற கோபம்தான் சத்திரிய தர்மம் என்றும் தருமரின் சாந்தம் சந்தனத்தின் குளிர்ச்சி அல்ல பிணத்தின் குளிர்ச்சி என்றும் ரோசம் ஊட்டினாள். பயன் இல்லை. வாக்குத் தவறி வனவாசம் முடியும் முன் போர் தொடுக்க அவர் மறுத்துவிட்டார். நூற்றுக்கணக்கான தருமங்களைவிட, ஆயிரக்கணக்கான யாகங்களைவிடப் பொறுமை மேலானது என்று அமைதி காத்தார். உண்மைதான். பொறுமை இல்லை என்றால் வாழ்க்கையில் எதையும் சாதிக்க முடியாது.

குட்டிக் குரங்கு ஒன்று தோட்டம் போட்டது. எதுவுமே விளையவில்லை. தன்னைப் பார்க்க வந்த முதிய குரங்கிடம் இந்த வேதனையைச் சொல்லி அழுதது. ''விதை போட்டால் போதுமா? தண்ணீர் ஊற்றி இருக்க மாட்டாய். அதனால்தான் முளைக்கவில்லை!'' என்று கடிந்தது பெரிய குரங்கு. குட்டிக் குரங்குக்கு வந்ததே கோபம்...

''ஒரு விதைக்குப் பத்து வாளி வீதம் தினம்தோறும் ஊற்றி இருக்கிறேன்'' என்று கத்தியது.

''அடடா பத்து வாளியா? போச்சு... போச்சு... இவ்வளவு தண்ணீர் ஊற்றினால் விதைகள் அழுகி இருக்குமே! விதைகள் அழுகியதால் முளைக்கவில்லை'' என்றது பெரிய குரங்கு.

''ஒரு விதை கூட அழுகவில்லை!'' என்று குட்டிக் குரங்கு பெருமையோடு கூறியது.

''அது எப்படி உனக்குத் தெரியும்?''

''நான்தான் தினம் தினம் மண்ணில் இருந்து விதையை எடுத்து எடுத்துப் பார்க்கிறேனே'' என்றது குட்டிக் குரங்கு. விதை விதைத்தால் விளைந்து வரும் காலம் வரை பொறுமை வேண்டும். வாழ்க்கையிலும் அப்படித்தான். உரிய காலம் வரை பொறுமை வேண்டும். அவசரம், ஆத்திரம் அதனால் வரும் கோபம் தவிர்க்கப்பட வேண்டியது.

சில கோபக்காரர்கள் ''கோபம் வந்துட்டா... நான் மனுஷனா இருக்க மாட்டேன்'' என்று சிலிப்பார்கள். எதுவாக மாறுவார் என்று அவருக்கே தெரியாதாம். இதிலிருந்தே தெரிகிறதே; கோபப்படுகிறவன் மனிதனே இல்லை என்று!

இருப்பினும் ஒரு சந்தேகம்!

வீட்டில் கொஞ்சம் கண்டிப்பும் கோபமும் இல்லை என்றால் பிள்ளைகள் பெற்றோருக்குப் பயப்படுவார்களா? மதிப்பார்களா? பிள்ளைகளிடம் கோபப்படவில்லை என்றால் அவர்கள் நண்பர்களிடம் பேசுகிறபோது ''எங்கப்பாவுக்கு ரோசம், மானம் எதுவும் கிடையாது... எருமை மாதிரி'' என்று பட்டம் கட்டி விடுவார்கள். அதேசமயம் ஓயாமல் கோபப்பட்டால் ''அது... அப்படித்தான்.. கத்தும். நாங்க யாரும் கண்டுகொள்வதே இல்லை'' என்பார்கள். அடிக்கடி கோபப்பட்டால் கோபத்துக்கு மரியாதை இல்லை. கோபமே இல்லை என்றால் நமக்கே மரியாதை இல்லை!

இந்தப் பிரச்சினைக்கு விடை கந்த புராணத்தில் உண்டு. பிரமனை முருகன் சிறையில் அடைத்ததும் விடுதலை வேண்டி நந்தி வந்தார். பிறகு சிவனே வந்தும் முருகன் மறுத்தார். ''சிவனை வணங்கிய பின்னும் அகந்தை விடாத பிரமனைச் சிறையிலிருந்து விட முடியாது'' என்றார். உடனே முருகனைச் சிவபெருமான் கோபித்துக் கொண்டாராம். ''மைந்த நின்செய்கை என்னே'' என்று உரக்க சப்தமிட்டு, ''கந்தனை வெகுள்வான்'' என்றார் கச்சியப்பர்.

சிவபெருமானா கோபப்பட்டார்! அதுதான் இல்லை. பாட்டை ஆழமாகப் பார்த்தால் ''கந்தனை வெகுள்வான் போலக் கழறினான்'' என்றார் கச்சியப்பர். போல என்ற வார்த்தையைக் போட்டு, அந்தக் கோபமே போலி என்று புரியவைத்தார் கச்சியப்பர். நாம் பிள்ளைகளிடம் கோபப்படக் கூடாது. ஆனால் கோபப்படுவது போல் நடிக்க வேண்டும் என்கிறது கந்தபுராணம்.

இராமகிருஷ்ணரும் இதே கருத்தை ஒரு கதை மூலம் விளக்கினார். ஒரு கிராமத்தில் பாம்பு ஒன்று எல்லோரையும் கடித்துத் துன்புறுத்தியது. எல்லோரும் அதைப் பார்த்துப் பயந்தார்கள். அப்போது அந்தப் பாம்பு செழிப்பாக - இளம் வயதில் பதவி பெற்ற அரசியல்வாதி போல - காட்சி அளித்தது. ஒரு முனிவரிடம் எல்லோரும் முறையிட, அவர் அந்தப் பாம்பை அழைத்தார். 'யாரையும் கடிப்பதில்லை' என்ற சத்தியத்தையும் பெற்றார். சில நாள் கழித்துத் துறவி அந்த வழியாக வந்த போது, கிழிந்த நாராகக் கிடந்தது அந்தப் பாம்பு. பதவி இழந்த அரசியல்வாதி மாதிரி இருந்தது. முனிவர் வருந்தி விசாரித்தார். ''உங்களால் வந்த வினை. நான் கடித்தபோது எல்லோரும் என்னிடம் பயந்தார்கள். இப்போது யாரும் என்னை மதிப்பதே இல்லை'' என்றது.

''பாம்பே... உன்னைக் கடிக்கக் கூடாது என்றுதான் சொன்னேன். சீறக்கூடாது என்று சொன்னேனா? கடிக்க வருவது போல் சீறினால் போதும், எல்லோரும் ஓடி விடுவார்களே'' என்றார் துறவி. இது உண்மை. தீங்குதரும் கோபம் கூடாது. கோபப்படுவது போல் நடித்தால் குற்றம் இல்லை.

இந்த அர்த்தத்தில்தான் 'ரௌத்திரம் பழகு' என்றார் பாரதியார், ''ரௌத்திரப்படு'' என்று அவர் சொல்லவில்லை.

அப்படியென்றால் சமூக அநீதிகளை, அநியாயங்களைக் கண்டு கோபப்பட வேண்டாமா? வைராக்கியத் தோடு - அறிவுத் தெளிவோடு எதிர்த் தாலே ஒழிய கோப உணர்ச்சியோடு எதிர்த்தலாகாது. அந்தக் கோபம் போராட்டத்துக்கான காரணத்தையே பாழாக்கி விடும். தொண்டர்களை உணர்ச்சி வசப்படுத்தும் வகையில் நடைபெறும் போராட்டங்கள் தேவையற்ற விளைவுகளையே ஏற்படுத்தும்.


வள்ளுவர் வழியில், ''சினம் சேர்ந்தாரைக் கொல்லி.''

எனவே, ''நான் பெரிய கோபக் காரன்'' என்று யாரும் மார்தட்ட வேண்டாம். கூனிக்குறுகி அவமானப் படவேண்டிய விசயம் இது!



சுகி. சிவம்

# யாழ்.நகரின் காவல் தெய்வம் கோட்டை முனியப்பர்



தமிழ் மக்கள் இறை நம்பிக்கையிலும் இறைவனுக்கு ஆலயங்கள் அமைத்து வழிபடுவதிலும் ஆதிகாலந் தொட்டு பயபக்திமிக்க ஆர்வமுடன் ஈடுபட்டுவரும் நடை முறையைக் கொண்டவர் கள். நற்காரியங்களை ஆரம்பிக்கும் போதும் பயணங்களின் போதும் தமது இஷ்ட தெய்வங்களை முன்னிறுத்தி ஆரம்பித்து மன நிறைவையும், சித்திகளையும் அடைந்து தமது வாழ்வை சிறப்புடன் முன்னெடுக்கும் இயல்புடையவர்கள். இவ்வாறு அருளாசிகளை அருளும் தெய்வங்களை நேர்முகமாகத் தரிசிப்பதற்காக ஆலயங்கள் அமைக்கப்பட்டன.

இவ்வாறாக சிறுநகரங்கள் பெருநகரங்கள் தோறும் மக்கள் அன்றாடம் கூடுமிடங்களிலும் பல வழிபாட்டிடங்கள் தொன்று தொட்டு தோற்றம் பெற்று வந்துள்ளன. யாழ். நகரப் பகுதியிலும் பல ஆலயங்கள் இன்று காட்சி தருகின்றன.

யாழ். நகரின் தெற்கு நுழைவாயிலில் யாழ் கோட்டை, பொதுசன நூலக சூழலில் பலசிறப்புமிகு வரலாறுகளைத் தன்னகத்தே சுமந்து கொண்டு அடியார்களுக்கு அருள்புரியும் முனீஸ்வரன் யாழ் கோட்டை முனியப்பர் தேவஸ்தானத்தில் உறைந்து யாழ் நகரை காவல் புரிந்து வருகின்றார்.

யாழ்ப்பாண வரலாற்றுடன் முக்கிய தொடர்புடைய ஒல்லாந்தர் கோட்டையுடன் முனியப்பரின் பெயரும் நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகிறது.யாழ்ப்பாணம் என்றதும் பலரது நினைவுக்கு வரும் அடையாளக் குறியீடுகளில் கோட்டை முனியப்பர் ஆலயமும் ஒன்றாகும்.

இந்த ஆலயத்தின் ஆரம்ப காலத்தை துல்லியமாகக் கூறமுடியாவிடினும் போர்த்துக்கேயரின் வருகைக்கு முற்பட்ட காலந் தொட்டு இருந்து வந்ததாக நம்ப இடமுண்டு. முற்காலத்தில் இந்தப் பகுதி கடற்கரையை அணிமித்து இருந்தமையாலும், தீவகம் பகுதியின் நுழைவாயிலாகக் காணப்படுவதாலும் கடல்வழிப் போக்குவரத்திலும் வாணிபத்திலும் இந்தப் பகுதியைப் பயன்படுத்தியிருக்கலாம்.

மேலும் வெளிநாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய, அரேபிய நாடுகளில் இருந்து வர்த்தக, வாணிப நோக்கில் இலங்கை வந்த வியாபாரிகள் இப்பகுதியில் தங்கி தமிழ் மக்களுடன் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்ததாகப் பல வரலாறுகளில் அறிய முடிகிறது. அப்போது இந்தப் பகுதிக்கு வந்து சென்ற தமிழ் வர்த்தகர்கள், மக்கள் தமது பாதுகாப்புக்காகவும் வழிபாட்டுக்காகவும் சிற்றாலயம் ஒன்றை அமைத்து வணங்கி வந்திருக்கலாம் என்று எண்ணலாம்.

ஏனெனில் இக்கோட்டை அமைந்துள்ள இடத்தில் ஒரு சிவன் கோயில் இருந்தது என்றும் அதுவே முனியப்பர் எனப் போர்த்துக்கேயரால் அழைக்கப்பட்டு அவர்களால் காவல் தெய்வமாக மதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் கோட்டைக்குள் இருக்கும் கிறிஸ்தவ ஆலயப் பகுதி சிவாலயம் இருந்த இடம் என்றும் ஊகிக்கப்படுகிறது.

இதற்கு ஆதாரமாகச் சில புதைபொருள் சின்னங்களும் கல்வெட்டுக்களும் அழிவுற்ற கட்டுமானங்களும் கோட்டைப் பகுதிகளில் இருப்பதாகக் கூறப்படுகின்ற போதிலும் இந்தச் சான்றுகள் வரலாற்று ரீதியாக நிரூபிக்கப்படவில்லை.

இந்த ஆலயம் தொடர்பாகவும் முனியப்பரின் அருளாற்றல் பற்றியும் பல்வேறு சுவையான சம்பவங்கள், கதைகள், ஐதீகங்களாக அறியப்பட்டு வந்துள்ளன. அந்நியராட்சிக் காலத்துக்கு முன்பிருந்தே முனிஸ்வரன் அருள்வல்லமை மிக்க தெய்வமாகப் போற்றப்பட்டு வந்துள்ளது. புலி வாகனம் மீதமர்ந்து யாழ் நகரின் காவலனாக ஆட்சி புரிந்து மக்களைக் காத்து வருகிறார்.

கி.பி 1621 ஆம் ஆண்டு தமிழ் மன்னர்களிடமிருந்து யர்ழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் தமது பாதுகாப்புக் கருதி யாழ்ப்பாணத்தில் ஒரு கோட்டையைக் கட்டினர். சைவசமயத்தையும் ஆலயங்களையும் அழிப்பதில் ஈடுபட்ட போர்த்துக்கேயர் ஆலயகற்களையும் காங்கேசன் துறைமுகத்திலிருந்து கைப்பரிமாற்றமாகக் கொண்டுவரப்பட்ட முருகைக் கற்களையும் கொண்டு கோட்டையைக் கட்டினர்.

1658இல் கோட்டையைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் இதனைப் புதுப்பித்து ஐங்கோண வடிவில் அழகுற அமைத்தனர். இது பாதுகாப்பு அரணாகவும் ஆட்சி நிர்வாக நடவடிக்கையின் மையமாகவும் இருந்தமையால் அந்தக் கால மக்கள் இதனை 'இராசவாசல்' என்று அழைத்தனர்.

> யாழ்ப்பாண வரலாற்றுடன் முக்கிய தொடர்பு டைய ஒல்லாந்தர் கோட்டையுடன் முனியப்பரின் பெயரும் நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகிறது. யாழ்ப்பாணம் என்றதும் பலரது நினைவுக்கு வரும் அடையாளக் குறியீடுகளில் கோட்டை முனியப்பர் ஆலயமும் ஒன்றாகும்.

இந்த இராசவாசலுக்குள் இருந்து அகற் றப்பட்ட ஆலயத்தின் விக்கிரகம் மற்றும் பண்டங்கள் அகழி ஓரமாக கோட்டைக்கு வெளியே உள்ள நிலப்பகுதியில் வைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. அந்தப் பகுதிக்குச் சென்றுவரும் மக்கள் அவற்றை நேர்த்தியாக வைத்து வழிபடத் தொடங்கினர். முனியப்பர் என்னும் நாமத்துடன் சிறுகுடில் அமைத்து பொங்கல் படையல் பூசை வழிபாடு களுடன் பராமரித்து வரலாயினர்.

அரசநிலத்தில் ஆலயம் அமைந்திருந்தமையால் எவரும் உரிமை பாராட்டாது பொதுப் பரராமரிப்பில் ஆலயம் வளர்ச்சி பெற் றது. முனியப்பரின் திருநாமமும் வேண்டு தல் சித்திகளும் எங்கும் பரவலாயிற்று. கோட்டை முனியப்பர் என்ற பெயர் கேட்டாலே எல்லோ ரும் பயபக்தியுடன் மண்டியிட்டு வணங்குவர். பணம்படைத்த செவ்வந்தர் முதல் பாமரர்வரையும் நீதிபதிமார், அரச உத்தியோகத்தர் அனைவரும் தலைவணங்கி அருள்வேண்டி மன்றாடும் தலமாக விளங்குகிறது.

## யேசுதாஸ்

அக்காலத்தில் நகரப்பகுதியில் திருட்டுக்கள் முறைகேடான செயல்களில் ஈடுபடுவோருக்கு பல உருவங்களில்தோன்றி அவற்றை தடுத்து நிறுத்தி குற்றாவளிகளை திருத்திய பல சம்பவங்கள் நடைபெற்றதாக முன்னோர் வாய்மொழியாக அறியமுடிகிறது.

இவ்வாறு திக்கெட்டும் அறியப்பட்ட முனியப்பர் ஆலயத்தை நாடி தினமும் பக்தர்கள் வந்ததன் பொருட்டு நித்திய பூசைகள் ஆலய கட்டுமானங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது.


1916ஆம் ஆண்டு முதல் கணபதி கந்தையா என்பவரின் பராமரிப்பில் பூஜைகள், திருப்பணிகள் இடம்பெற்றதாக ஆதன உறுதிகளில் இருந்து அறிய முடிகிறது. அரச நிலத்தில் அமைந்திருந்தமையால் அரச நிர்வாகிகளால் இந்த நியமனம் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

1931ஆம் ஆண்டு அந்த இடத்தில் ஆலயத்தை வைத்திருக்கவும் புனருத்தாரணம் செய்யவும் குத்தகை அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது. க.கந்தையாவின் விடாமுயற்சியும் பல செல்வந்தர்கள், அடியார்களின் பேருதவியால் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சி பெறலாயிற்று.

மெய்யடியார்களின் முனீஸ்வரன் மேல் கொண்ட நம்பிக்கையும், அவரது அற்புதங்கள் பிணக்குகளைத் தீர்க்கும் வல்லமையும் இலங்கை முழுவதும் பரவியது. யாழ்ப்பாணம் வருவோர் முனியப்பர் ஆலயத்தை தரிசித்துச் செல்லும் வழமை தோன்றியது. 1979 ஆம் ஆண்டு தத்துவ உறுதிச் சாசனத்தின் வழியாக அரசால் இப்பகுதி கோவிலுக்குச் சொந்தமானது என்று எழுதிக் கொடுக்கப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# இலங்கையரின் சடலம் விரைவில் இந்தியாவுக்கு

சவூதி அரேபியாவில் மரணமான இலங்கையர் ஒருவரின் சடலத்தை பொறுப்பேற்க இலங்கையில் அவருக்கு உறவினர்கள் எவரும் இல்லை என்பதால் சடலம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்தியாவில் உள்ள குறித்த நபரின் மனைவி விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இவ்வாறு சடலம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

தான் தங்கியிருந்த வீட்டில் திடீரென ஏற்பட்ட இதய நோயால் இலங்கை நபரான பசுபதிப்பிள்ளை சிவானந்தன் அண்மையில் மரணமானார்.

இவருடைய சடலத்தை இலங்கைக்கு அனுப்பி வைக்க ஜெத்தாவிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாக சவூதித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 20 வருடங்களாக சவூதியில் தொழில் புரிந்த பசுபதிப்பிள்ளையின் சடலத்தைப் பொறுப் பேற்க இலங்கையில் அவருக்கு உறவினர்கள் இல்லை என்று ஜெத்தாவிலுள்ள இந்தியத் தூதரக நலன்புரிப் பிரிவு அதிகாரி எஸ்.டி. மூர்த்தி தெரிவித்துள்ளார்.

சென்னையிலுள்ள பசுபதிப்பிள்ளை சிவானந்தனின் மனைவியான ருக்மணிதேவி விடுத் துள்ள கோரிக்கைக்கு அமைய அவருடைய சடலத்தை சென்னைக்கு அனுப்பி வைக்க உதவுமாறு இலங்கைத் தூதரக அதிகாரி காரிகளிடம் இந்தியத் தூதரக அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிவானந்தனின் சடலத்தை பொறுப்பேற்க இலங்கையில் அவருக்கு எந்த உறவினர்களும் இல்லை என்று ஜெத்தாவிலுள்ள இலங்கைத் தூதர் ஆதம்பாவா உதுமா லப்பை குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் மரணமான நபரின் சம்பளம் இலங்கை தூதரகம் ஊடாக இந்தியாவிலுள்ள அவரது உறவினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதோடு சடலமும் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.



காரைநகர் அபிவிருத்திச் சபையால் மறுபதிப்புச் செய்யப்பட்ட 'காரைமான்மியம்' நூலின் வெளியீட்டு விழா அண்மையில் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெற்றது. வைத்திய கலாநிதி ந.ஜெயக்குமார் நூலை வெளியிட்டு வைக்க நூலின் முதற் பிரதியை ஈழத்துச் சிதம்பர ஆதீன கர்த்தா மு. சுந்தரலிங்கம் பெற்றுக்கொள்கிறார். (வ-250)

## ஆலயத்துக்கு நிதி உதவி

கொழும்புத்துறை, ஜன.16

கொழும்புத்துறை கிழக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்துக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஒரு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார். இந்த நிதி உதவியைக் கொண்டு ஆலய பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (வ-135)

## வாகனங்கள் நிறுத்தம் போக்குவரத்து சிரமம்

கொழும்புத்துறை, ஜன.16

யாழ். பொலிஸ் நிலையப் பகுதியில் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்கள், கொள்கலன்களால் போக்குவரத்து இடையூறுகளும் விபத்துக்களும் ஏற்படும் நிலை காணப்படுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

குற்றச் செயல்கள், விபத்துக்களில் ஈடுபட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகனங்களே இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் யாழ்.மத்திய கல்லூரி மைதான மூலையில் வைக்கப்பட்டிருக்கும் இரு கொள்கலன்கள் சுற்று வட்டத்தில் வரும் வாகனங்களை மறைப்பதால் திடீரென வாகனங்கள் மோதும் நிலை ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.

இதேவேளை மணிக்கூட்டுக் கோபுரச் சுற்று வட்டப்பகுதி வீதிகள் நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாது உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-135)

## குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி, ஜன.16

வீதியில் காணப்பட்ட பள்ளத்தால் வீதியின் மறு கரைக்குச்சென்ற வாகனம் அந்த வழியே சைக்கிளில் வந்த குடும்பஸ்தரை மோதிக் காயப்படுத்தியது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது. நுணாவில் மேற்கைச் சேர்ந்த யோகராசா யோகரமணன் (வயது32) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத் திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேல திக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-207)

## உயர்தரப் பெறுபேறு

**அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி**

அனற் றொய்சி அன்ரனி அருள்தாஸ்- ஏ2பி, றாசிகா சிவஞானம்- ஏ2பி, அருள்பிரியா அமிர்தநாதன்- ஏபிசி, சாதுரி பவானந்தன்- ஏபிசி, கஜிதா உதயகுமார்- 3பி, மேரி மியூரியல் செல்வராஜா-2பிசி, மேரி ஜான்சிகா லோறன்ஸ்- 2பிசி, அஜிர்தா தவக்குகன்- பி2சி, ஆன் நிசாரா கெமில்டன் 3சி, யுஸ்ரினா ஜான்சி அருட்பிரகாசம் ஏ2சி, கார்த்திகா மகேஸ்வர தாசன் 2பிசி, சர்மிளா சிவகுரு பி2சி, வினோஜினி ஜெகதீஸ்வரன் பி2சி.

**கிளிநொச்சி இந்துக் கல்லூரி**

**விஞ்ஞானப் பிரிவு**

அருள்தாஸ் ரேணுகா 2பிசி, சிவஞானசுந்தரம் வாகீசன்- 2சிஎஸ், கேதீஸ்வரன் கீர்த்தனா- 3எஸ்.

**வர்த்தகப் பிரிவு**

பாலையா துஷாந்தினி- 2ஏபி, மைக்கல் டொறின் உம்சலா- ஏபிசி, பரமேஸ்வரன் மதீஸ்வரன் 2பிசி, வஞ்சீஸ்வரன் கரிகரன்- ஏ 2சி, கணேசர் பிரதீபன்- பி 2சி, பாலசிங்கம் றம்ஜா- பி2சி.

**கலைப்பிரிவு**

வைத்தியநாதன் திவ்வியா- ஏபிசி, விஜயகுமாரன் விஜய கௌரி- 2பிசி, செல்வரத்தினம் டயாழினி 2பி சி, தியாகராசா குகாஜினி- 2பிசி, ரவிக்குமார் பிரதீபன்- 3சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## M.D. யேசுதாசன்

M.D.யேசுதாசன் (Senior Engineer and Power Consultant, புனித பத்திரிசியார் கல்லூரி கொழும்புக் கிளை முன்னாள் தலைவர்) 12.01.2012 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை (16.01.2012) இல.63 மருதடி வீதி நல்லூர், யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் இருந்து பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி P.F.சின்னத்துரை (சகோதரி)
இளைப்பாறிய அதிபர்.

இல.63 மருதடி வீதி,
நல்லூர். (39-13106)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 17.12.2011 அன்று
இறைபதம் எய்திய எமது
குடும்பத் தலைவர்
அமரர் **சுப்பையா தம்பையா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.01.2012) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறைபதச் செய்தி கேட்டு எமக்கு எல்லா வழிகளிலும் ஆறுதல் தெரிவித்து உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

ஆசிரியர் வீதி,
பெரிய அரசடி,சாவகச்சேரி

குடும்பத்தினர்.

# முதலாம்ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1954
05
05



மறைவு
2011
01
16

## அமரர் அந்தோனி வேதநாயகம்

அன்பின் அருமை அப்பாவே!
உடலாய் எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு காற்றாய் கழிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மறையாது.

3ம் கட்டை,
ஆனைக்கோட்டை.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள், மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள்.

# 8ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

மலர்வு
28.10.1924



உதிர்வு
16.01.2004

அமரர் திருமதி

## லில்லி கிறேஸ் தேவசகாயம்

அம்மா நீங்கள் நடந்த
பாதச் சுவடுகளைத் தொடர்ந்து
எமது வாழ்க்கைப் பயணங்கள் தொடர
உங்கள் ஆசிகள் என்றும் எங்களோடு இருக்கும்

இல 28, றக்காலேன்,
சுண்டுக்குளி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்.

# அபராதம் ரூ.1,000

யாழ்ப்பாணம், ஜன.16

ஆசனப்பட்டி அணியாது லொறியைச் செலுத்திச் சென்ற குற்றத்துக்காக அதன் சாரதிக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொக்குவிலைச் சேர்ந்த நபருக்கு எதிராகவே யாழ். போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர். விசாரணையின்போது சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-4)

## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் மார்ட்டீன் வீதியில் சகல வசதியுடன் கூடிய மாடி வீடு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு அல்லது ஹோட்டலுக்கு வாடகைக்கு விடப்படும்
தொடர்பு 0750406546, 0750699430

## வாகனம் விற்பனைக்கு

மாதம் 1 லட்சம் வருமானத்துடன் PB-6000- NISSAN Vente 2002 Model Dual A/C / 62-3000 TOYOTA HIACE, 4/DOOR, D/AC FULL SEAT வேன்கள் உடனடி விற்பனைக்கு.
தொடர்பு 0727427774

## கடை காணி விற்பனை

நெல்லியடிச் சந்திக்கருகில்
432 சதுர அடி
விஸ்தீரணமுள்ள கடை
உடனடி விற்பனைக்குண்டு.
தொடர்பு
0773159214




www.titusstores.com
ரைற்றஸ் ஸ்ரோர்ஸ்
புறக்கோட்டை 2439422 லிபர்ட்டி பிளாஸா


## வீடு விற்பனைக்கு

யாழ். நகரில் பலாலி வீதி 1/13, 2ஆம் ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:- 0778767947

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, கச்சாய் வீதியில்
2ஆம் கட்டையடியில் 12 பரப்புக்
காணி விற்பனைக்குண்டு
தொடர்பு
0773569709, 0773146053

## கடை வாடகைக்கு விடப்படும்

இல. 615, பரந்தன் வீதி, தருமபுரம், (தருமபுரம் மகா வித்தியாலயத்திற்கு அருகில்) 16x32 அடியில் 2 கடைகளும் 11x32 அடியில் ஒரு கடையும் கொண்ட கடைத்தொகுதி வாடகைக்கு விடப்படும். அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு முன்னுரிமை.
தொடர்புக்கு:- 0770579536

## பதவி வெற்றிடங்கள்

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட
வைத்தியசாலைக்கு பின்வரும்
வெற்றிடங்களுக்கு
தகுதியானவர்கள்
விண்ணப்பிக்கவும்.

1.வரவேற்பாளர் - பெண்
2.தாதியர் - தகுதிச் சான்றிதழ் உள்ளவர்கள்
3.அலுவலக உத்தியோகத்தர் (ஆண்/ பெண்)

A/L சித்தியடைந்தவர் பயிற்சியின் பின் இணைக்கப்படுவர்.

தொடர்பு
0773522199

# மரண அறிவித்தல்



## அந்தோனிப்பிள்ளை சத்தியசீலன்

(மக்கள் வங்கி-ஓய்வுபெற்ற ஊழியர்)

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை சத்தியசீலன் நேற்று (15.01.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை-புவனேஸ்வரி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை-திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மரியமலரின் (தங்கறோஸ்) அன்புக் கணவரும், றுக்சி(லண்டன்), விஜிதன், திலிபன், புவனேஸ், தனுசாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சிறிசெல்வன் மற்றும் கிறேஸ், ருக்குமணி, சந்திரா, ரெத்தினகுமார், இந்திரா ஆகியோரின் சகோதரனும் பொன்றோஸ், யோகம், செல்லக்குமார், அன்ரனி, மகேந்திரன் (இத்தாலி), றூபி (கனடா), மைனா(கனடா) ஆகியோரின் மைத்துனரும் டிக்சனின்(லண்டன்) பாசமிகு மாமனும் டீனின்(லண்டன்) அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2012) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கத்துக்காக நாவாந்துறை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

79,நாவலர் வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம். (39-13100)

தகவல்
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03.05.1928



மறைவு
27.01.2011

## செல்வி கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)

திதி:- அபரபக்க அட்டமி

*பண்பின் உறைவிடமே*
*பாசத்தின் இருப்பிடமே*
*முன்னவளாய் வந்துதித்து*
*சகோதரர்கள் பெறாமக்கள்*
*அனைவரையும் வழிநடத்தி நின்ற*
*கலங்கரையே கண்மணியே*
*நீங்கள் மறைந்து ஒராண்டு ஆனாலும்*
*என்றென்றும் மாறாது உங்கள் நினைவுகள்*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல*
*இறைவனைப் பிரார்த்திப்போமாக*

6ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

உங்கள் பிரிவால் துயருறும்
சகோதரி, பெறாமக்கள்.

# Do you have what it takes to be part of our team?

If you are motivated, committed, birght, hardworking, willing to explore
new possibilities, creative and resourceful, you have what it takes.

**Available job**
**web developer**

PHP (Experience in any framework is advantage)
HTML, XML,Javascript, CSS, AJAX, MySQL

tasks:-
Good knowledge in php and able to handle any situation with minimum resource.
Familiarity with MySQL database and ability to develop SQL queries is required.
General knowledge of HTML programming, web-based application, AJAX technology is required.
General knowledge of software engineering methodologies and practices are required.

**contacts details:-**
**Address:-**No.66, Palaly Rd,Jaffna.
**T.P:-** 0777034989,0777885101

(13086)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு கூடைப்பந்தாட்டம் கால்டன் வி.க.வெற்றி




யாழ்ப்பாணம், ஜன.16

இலங்கையின் முன்னணி கூடைப் பந்தாட்ட கழகமான கால்டன் விளையாட்டுக்கழக அணிக்கும் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான கூடைப்பந்தாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்றது.

இதில் கால்டன் விளையாட்டுக் கழக அணி 44:41 என்ற புள்ளி அடிப்படையில், யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியை வெற்றி கொண்டது. (ம-23)


## கூடைப்பந்தாட்ட வீரருக்குப் பயிற்சி



யாழ்ப்பாணம், ஜன.16

யாழ். மாவட்டத்தில் கூடைப்பந்தாட்டத்தை அபிருத்தி செய்யும் நோக்குடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் 13 வயதுப் பிரிவு கூடைப்பந் தாட்ட வீர, வீராங்கனை களுக்கான பயிற்சி முகாம் நேற்று முன்தினம் யாழ் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்றது. இதில் வீர, வீரங்கனைகள் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். (ம-23)

## கரப்பந்தாட்டம்



வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான எல்லே, கரபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளன. (ம-23)

## கபடி வெற்றியாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன.16

வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான ஆண், பெண் இருபாலாருக்குமான கபடி போட்டி கடந்த வாரம் இடம் பெற்றது. இதில் வெற்றியீட் டிய அணிகளின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

ஆண்கள் பிரிவு- உதய தாரகை விளையாட்டுக்கழகம் முதலிடம், கண்ணகி விளையாட்டுக்கழகம்- இரண்டாமிடம்.

பெண்கள் பிரிவு- மலர் மகள் விளையாட்டுக்கழ கம்- முதலாமிடம், யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம்- இரண்டாமிடம். (ம-23)

## திருமலையில் குழுநிலைப் போட்டிகள்

திருகோணமலை மாவட்ட பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் எதிர்வரும் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் குழு நிலைப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. இதில் திருகோணமலை பிரதேச செயலகம், கிண்ணியா பிரதேச செயலகம், மூதூர் பிரதேச செயலகம், கந்தளாய் பிரதேச செயலகம், தம்பலகாமம் பிரதேச செயலகம், குச்சவெளி பிரதேச செயலகம், ஈச்சிலம்பற்று பிரதேச செயலகம், முரவாவ பிரதேச செயலகம், கோமங்றல் கடவல பிரதேச செயலகம், சேருவல பிரதேச செயலகம், பதவி சிறிபுர பிரதேச செயலகம், வெற ஹெலவ பிரதேச செயலகம் ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட வி.கழகங்களுக்கு இடையிலான குழு நிலைப் போட்டி இடம்பெறும்.(ம-23)

## மின்னொளியில் உதைபந்து



யாழ்ப்பாணம், ஜன.16

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 11 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன.

இதில் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஆட்டம் சம நிலையில் முடிவடைந்துள்ளது.

சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் அம்மன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யுனிபைட் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேரத்தில் தலா ஒரு கோல்களைப் பெற்றதால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈஸ்வரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஈஸ்வரன் விளையார்ட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (ம-23)


# மரண அறிவித்தல்

## மரியதாசன் பார்பரா (நிர்மலா)



யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும், 517/6, ஸ்ரான்லி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியதாசன் பார்பரா (நிர்மலா) 13.01.2012 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவர் காலஞ்சென்ற செபஸ்ரியான் மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் மரியதாசனின் (செல்வம்) அன்பு மனைவியும் சாந்தாவின் அன்புச் சகோதரியும் ரமேஷ், ரகு, ரஜினி, வதனி, ராகுலன் ஆகியோரின் அன்புத் தாயும் சஜி, ரூபி, சங்கர், மனோ, யூரி ஆகியோரின் அன்பு மாமியும் நிக்கி, பொப்பி, றொசான், றொசேல், நெகேம், எப்சிபா, ஜெஷ்ரன், யெஷீரிகா, கிறிஸ்ரினா, கிறிஸ்ரினன், ஜெய்டன் யூட் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (17.01.2012) செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ராஜ வீதியில் உள்ள கானான் ஜெப ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

517/6, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள்.



# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சிவபாதம் சிவறஞ்சன்

(சிறைச்சாலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)

எமது வித்தியாலயத்தில் கடமையாற்றிய திருமதி பிரவீணா சிவறஞ்சன் அவர்களின் அன்புக் கணவர் 13.01.2012 வெள்ளிக் கிழமை காலமானார். அவரின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மசாந்திக்கு இறைவைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை.

(13107)



# கண்ணீர் பூக்கள்

## அமரர் வேலாயுதர் கோபாலகிருஷ்ணன்



எமது வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியை கமலாதேவியின் அன்புக் கணவர் வேலாயுதர் கோபாலகிருஷ்ணன் 14.01. 2012 அன்று இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு மிக்க துயர் அடைந்தோம். அன்னாரின் ஆத்ம சாந்திக் காவும் அவரின் உறவினரின் மன அமைதிக் காகவும் இறைவனை வேண்டுகின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/ நாவற்குழி மகா வித்தியாலயம், கைதடி.

(13105)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## திருமதி செபமணி புவனேஸ்வரி



தோற்றம்
23.01.1942

மறைவு:
17.12.2011

குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து
அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும்
எம்மையெல்லாம் வழி நடத்தி இவ்வையகத்தில்
வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வமாகிவிட்ட எங்கள் குடும்ப விளக்கின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


அன்னாரின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (16.01.2012) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

கல்வளை,
சண்டிலிப்பாய்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(13098)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“நாங்கள் தொடர்ச்சியாக இரண்டு தொடர்களை அந்நிய மண்ணில் இழந்துவிட்டோம். என்ன நடக்கிறதென்பதே புரியவில்லை. நாங்கள் புதிய சூழ்நிலைக்கு ஏற்றவாறு விரைவாக மாறவில்லை. இப்போதைய நிலையில் எங்களது குறிக்கோள் இறுதி டெஸ்ட் ஆட்டத்திலாவது வெற்றி பெற வேண்டும் என்பதே.”

*இந்திய அணித்தலைவர் டோனி.*



பரவாயில்லை..மூன்று நாள் விளையாடியதே பெரிய விஷயம்....
*வெளியேறும் ஹோக்லி*


# 3 ஆவது டெஸ்ட் ஆட்டம் 3 ஆவது நாளில் முடிந்தது



வெற்றியைச் சுவைப்பது இப்படியே.: ஆஸி. அணியினர்

இரண்டாவது இன்னிங்ஸிலும் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் சொதப்ப மூன்றாவது நாளுடன் ஆஸ்திரேலியாவுடனான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் முடிவுக்கு வந்தது. ஆஸ்திரேலிய அணியுடனான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்திலும் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதன் மூலம் 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி 3 - 0 என்ற கணக்கில் இழந்துள்ளது. நேற்றைய ஆட்டத்திலும் தோல்வியடைந்ததன் மூலம் வெளிநாட்டு மண்ணில் இந்திய அணி தொடர்ச்சியாக 7 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் தோல்வியடைந்தது.

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது இந்திய அணி. நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கெடுத்து வரும் இந்திய அணி முதலிரு டெஸ்ட் ஆட்டத்திலும் படுதோல்வியடைந்திருந்தது. இந்த நிலையில் தொடரை சமப்படுத்த வேண்டுமாயின் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் இந்திய அணி களம் புகுந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணித் தலைவர் கிளார்க் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.



பார்ரா..பார்ரா... பந்தை எங்க போடுறாங்கெண்டு....
*தடுத்து (?) விளையாடுகிறார் வினய்குமார்*

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 161 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் ஹோக்லி 44, லக்ஸ்மன், கம்பீர் தலா 31 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். ஆஸ்திரேலிய அணி சார்பில் பந்து வீச்சில் ஹில்பென்ஹாஸ் 4, சிடில் 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை தொடங்கிய ஆஸ்திரேலிய அணி சகல இலக்குகளையும் இழந்து 369 ஓட்டங்களைப் பெற்றது. ஆஸ்திரேலியாவின் சார்பில் டேவிட் வோர்னர் 159 பந்துகளில் 180, எட்கோவன் 74, சிடில் 30 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் உமேஸ் யாதவ் 5 இலக்குகளை கைப்பற்றினார்.

208 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் வழமை போன்று சொதப்ப நேற்று முன்தினம் இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவில் 4 இலக்குகளை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் டிராவிட் 32, ஹோக்லி 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு இன்னும் மேலதிகமாக 120 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலையில் இந்திய அணி நேற்றைய நாளை [illegible] நின்றிருந்த டிராவிட், ஹோக்லி இருவரும் நேற்றைய நாளின் ஆரம்பத்தில் நிதானமாக ஓட்டங்களைச் சேர்க்கத் தொடங்கினர். இவர்களின் இணைப்பின் மூலம் இந்திய அணி 100 ஓட்டங்களைத் தொட்டது. டிராவிட் தடுத்தாடி ஓட்டச் சேகரிப்பில் ஈடுபட ஹோக்லி மூன்றாவது அரைச்சதத்தை கடந்தார். ஐந்தாவது இலக்குக்கான இணைப்பாட்டமாக 84 ஓட்டங்களை எட்டிய நிலையில் டிராவிட் 47 ஓட்டங்களுடன் ‘கீளீன் போல்ட்’டானார்.



ஆமா..! ஏதோ பந்து... பந்து.. என்கிறாங்க கடைசி மட்டும் அது தெரியவே இல்லையே..
*என்ன நடக்கிறது என்று புரியாமல் டோனி.*

இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டவுடன் இந்திய அணி தடுமாறத் தொடங்கியது. ஹோக்லி ஒரு முனையில் போராடினாலும் மறுமுனையில் எந்தவொரு வீரரும் நிலைக்கவில்லை. அணித்தலைவர் டோனி [illegible] போன்று [illegible] குமார் 6, சகீர்கான், இஷாந் சர்மா இருவரும் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர். பத்தாவது இலக்காக சிறப்பாக ஆடிய ஹோக்லி 75 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதியில் இந்திய அணி 63.2 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 171 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

இந்திய அணி இறுதி 4 இலக்குகளையும் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் இழந்தது. பந்து வீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பில் ஹில்பென்ஹாஸ் 4, சிடில் 3 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஆஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர் தெரிவானார். (15)


## ஆரம்பிச்சிட்டாங்கையா.. ஆரம்பிச்சிட்டாங்க...!

டோனியை டெஸ்ட் அணித் தலைவர் பதவியில் இருந்து நீக்க வேண்டும். மூத்த வீரர்கள் லக்ஸ்மன், டிராவிட் இருவரும் ஓய்வு பெற வேண்டும், என்று கங்குலி உள்ளிட்ட இந்திய அணியின் முன்னாள் வீரர்கள் ஆவேசமாக தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியா தொடரை இழந்தது குறித்து இந்திய அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் மதன்லால் கூறுகையில், டெஸ்ட் அணித் தலைவர் பொறுப்பில் இருந்து டோனியை நீக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. புது சிந்தனையுடன் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்து செல்லும் மற்றொரு வீரரை கொண்டு வருவதற்கான சரியான நேரம் இதுதான் என்று நினைக்கிறேன், என்றார்.

முன்னாள் அணித் தலைவர் கங்குலி கூறியது:

ஈடன் கார்டனில் டிராவிட், லக்ஸ்மன் இருவரும் சாதித்தது போல, மீண்டும் வேண்டும் என்று, நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் இவர்கள் இப்போது 40 வயதை நெருங்குகின்றனர். சொந்த மண்ணில் திறமை வெளிப்படுத்தினாலும், அடுத்து 2013 இல் இந்திய அணி அன்னிய மண்ணில் டெஸ்ட் தொடரில் பங்கேற்கும். இதற்கு முன்னர், தானாக ஓய்வு பெறுவது குறித்து, இந்த வீரர்கள் முடிவெடுக்க வேண்டும்.



அதுக்குள்ள பந்து அங்க போயிடுச்சா....?
*இசாந் சர்மாவின் ஆட்டமிழப்பு.*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறலை சுட்டிக்காட்டத் தவறிய நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை

**கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆராய்ந்து வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையின் சாராம்சத்தை இங்கு தருகிறோம்.**

1. யுத்தத்தினால் கடுமையான பாதிப்பிற்குள்ளான மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது, பாதிக்கப்பட்ட மக்களுடைய உண்மை, நீதி மற்றும் இழப்பீடு என்பவற்றிற்கான உரிமைகளை உத்தரவாதம் செய்வதான ஒரு நம்பிக்கையான கணக்கொப்புவித்தல் முறையினை மையமாகக் கொண்ட நேர்மையான நல்லிணக்கத்தை எப்போதுமே வலியுறுத்தி வந்துள்ளது. 2010 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதியன்று ஜனாதிபதி கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கக் ஆணைக்குழுவை அமைத்து அக்குழுவானது கணக்கொப்புவித்தல் தொடர்பான விடயங்களை ஆராயுமென உலகிற்குக் கூறினார்.

2. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினது படிமுறைகளும் நடைமுறைகளும் தமிழ் மக்களின் நம்பிக்கையை வெல்லத் தவறியது. அதுமட்டுமன்றி, இவ் ஆணைக்குழுவானது கணக்கொப்புவித்தல் நடைமுறைகள் தொடர்பான சர்வதேச நியமங்களை முழுமையாகப் பின்பற்றி அமையவில்லை.

3. அங்கத்துவத்தில் காணப்படும் இன மற்றும் பாலியல் ரீதியிலான சமமின்மை, அங்கத்தவர்களிடையே காணப்படும் நலன்ரீதியிலான முரண்பாடும் காப்புரிமையற்ற சுதந்திரம், சர்வதேச மனிதநேய மற்றும் மனித உரிமைகள் சட்டங்களில் அங்கத்தவர்களுக்குப் பொதுவாகக் காணப்படும் பாண்டித்தியமின்மை மற்றும் ஆணைக்குழுவின் பணிப்பாணை, படிமுறை, நடைமுறை ஆகியவை தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகளுடனோ அல்லது பரந்துபட்ட தமிழ் சமூகத்துடனோ எந்தவிதமான கலந்தாலோசனையிலும் ஈடுபடாமை ஆகியவை இவ்வாணைக்குழுவின் சுதந்திரத் தன்மை மற்றும் நிபுணத்துவம்சார் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

4. மேலும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினது முறைமையானது ஒப்பீட்டளவில் பாதிக்கப்பட்டவர்களின் கருத்துக்களுக்கு குறைந்தளவு முக்கியத்துவத்தையே வழங்கியது. இவ்வாணைக்குழுவானது போரின் கடைசிக் கட்டங்களில் நிகழ்ந்த வன்முறைகளுக்கான உண்மையான கணக்கொப்புவித்தலைத் தொடர்ந்து செய்வதற்கான வளங்களையும் அலுவலகர்களையும் குறைவாகவே கொண்டிருந்தது. உதாரணமாக, இவ் ஆணைக்குழுவானது வடக்கு, கிழக்கில் சாட்சியங்களை திரட்டுவதற்கு செலவழித்த நேரமானது கொழும்பிலே செலவழித்த நேரத்துடன் ஒப்பிடுகையில் மிக மிகக் குறுகியதாகும். கொழும்பில் இடம்பெற்ற விசாரணைகளுக்காக 56 நாள்களை செலவிட்ட ஆணைக்குழு வடக்கிலும் கிழக்கிலும் மொத்தமாக 22 நாள்களை மாத்திரமே செலவிட்டது. அதுமட்டுமன்றி, நேரம் பற்றாக்குறையினைக் காரணம் காட்டி ஆணைக்குழு சாட்சியங்களிற்கு குறைவான கால அவகாசமே வழங்கப்பட்டது. பலசந்தர்ப்பங்களிலே எதிர்காலத்தில் உருவாகக் கூடிய சாட்சிகளுக்கு சாட்சியமளிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படாததோடு அவர்கள் தமது பிரச்சினையினை எழுத்து வடிவில் ஆணைக்குழுவிற்கு அனுப்புவதற்கு மட்டுமே வேண்டப்பட்டனர்.

5. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது சாட்சிகளின் பாதுகாப்பு தொடர்பில் எந்தவொரு சரியான நிகழ்ச்சித்திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை. விடயங்களை மேலும் பாரதூரமாக்கும் வகையில், ஆணைக்குழுவின் செயற்பாடுகள் நிறைவுற்ற பின்னரான காலப்பகுதியில் சாட்சிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட பயமுறுத்தல்கள் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் மூடிய பாதுகாப்பான இரகசிய அறையில் வழங்கப்பட்ட சாட்சியங்களின் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்துவதில் தோல்வி ஆகியவற்றினூடாக பிரதிபலித்த அங்கத்தவர்களின் மனப்பாங்கானது சாட்சிகளின் பாதுகாப்பிற்கு உறுதியான வழிகளில் மேலும் தீங்கை விளைவித்தது. உதாரணமாக, சித்திரவதை மற்றும் பாலியல் துன்புறுத்தல் பற்றி முறைப்பாடு செய்த கல்முனையைச் சேர்ந்த சாட்சியொருவர் பின்னர் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் நாலாம் மாடிக்கு அழைக்கப்பட்டார். இது அரசு கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் ஆணைக்குழுவின் செயல்முறைகளில் கண்காணித்ததையும் சாட்சிகளின் விவரங்கள் வெளியிடப்படுதல் தொடர்பில் ஏற்பட்ட மிக எளிதான இணக்கப்பாட்டையும் உறுதிசெய்கின்றது. அரசுக்கெதிராக போர்க்குற்றச்சாட்டுகளை எழுப்புபவர்களுக்கெதிராக இலங்கையில் காணப்படுகின்ற எதிர்ப்புத்தன்மையானது, குற்றங்களில் தொடர்புடைய மூத்த அரச தரப்பு அலுவலகர்களைச் சிக்கவைக்கும் தன்மைகொண்ட சாட்சியங்களை முன்வைக்கும் சாட்சிகளுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் எதிரான பழிவாங்கல்கள் காணப்படமாட்டா என்பது உறுதிசெய்யப்படும் வரை அரசுக்கெதிராக உள்ள போர்க் குற்றங்களை அணுகும் எந்தவொரு கணக்கொப்புவித்தல் முறையும் பிரயோசனமற்றதாகவே அமையும். மேலும் தற்போது வெளிநாடுகளில் வசிக்கும் சாட்சிகளின் வீடியோ சாட்சியங்களைப் பதிவு செய்யாமையானது, பழிவாங்கப்படுவோம் என்ற பயமற்ற சாட்சிகளின் சாட்சியங்களை இவ்வாணைக்குழு இழக்கச் செய்துள்ளது.

6. இவ்வாணைக்குழுவினால் ஒரு வருடத்திற்கு முன்னர் வெளியிடப்பட்ட இடைக்காலப் பரிந்துரைகள் பயனுள்ள வகையில் அமுலாக்கப்படவில்லை. அமுலாக்கத்தின் பொருட்டு உருவாக்கப்பட்ட முகமையகங்களிடையேயான ஆலோசனைக் குழுவின் அமுலாக்க நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றிய அறிக்கையானது உண்மையான முன்னேற்றமின்மையை மட்டுமே எடுத்துக்காட்டியுள்ளது. உறுதிப்படுத்தாவிடினும், எளிமையான இவ்விடைக்காலப் பரிந்துரைகளை அமுலாக்குவதில் அரசாங்கத்தின் தோல்வியானது ஆணைக்குழுவின் இறுதிப் பரிந்துரைகளை அமுலாக்குவதில் அரசின் பொறுப்பின்மையை சமிக்கை செய்கின்றது.

7. 2011 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 16ம் திகதியன்று நாடாளுமன்றத்திற்கூடாக வெளியிடப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினது இறுதி அறிக்கையானது மனிதாபிமான சட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவேண்டியதாக காணப்படுகிறது. எனினும் இவ்வாணைக்குழுவானது அரசாங்கத்திற்கெதிரான போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் என்பவற்றை உள்ளடக்கியதான சர்வதேச மனிதநேயச் சட்டமீறல்கள் தொடர்பான நம்பகமான குற்றச்சாட்டுக்களை புறக்கணிக்கின்றது. இக்குற்றச்சாட்டானது, உணவு மற்றும் மருந்து போன்றவற்றை இழக்கச்செய்வதற்காக வேண்டு மென்றே வன்னியிலிருந்த மக்களின் எண்ணிக்கையை குறைத்து காட்டியமை, யுத்த சூனிய பிரதேசங்களிலே வேண்டுமென்றே மனிதாபிமானமற்றமுறையிலும் கவனமற்ற முறையிலும் தாக்குதல் நடத்தியமை, வைத்தியசாலைகள் உட்பட பொது மக்கள் நிலைகளின் மீது தாக்குதல் நடத்தியமை, சரணடைந்தவர்களைக் காணாமற் போகச் செய்தமையும் அவர்கள் காணாமற்போவதற்கு காரணமாக இருந்தமையும் போன்றவற்றை உள்ளடக்கும்.

8. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினது அணுகு முறையும் படிமுறையும் பின்வரும் இரு விடயங்கள் காரணமாக குறைபாடுடையதாக அமைந்தன: (1) தெரிந்தெடுக்கப்பட்ட சாட்சிப் பத்திரங்கள் (2) வழங்கப்பட்ட தகவல்களுக்கேற்ற சட்டங்களைப் பிரயோகிக்கத் தவறியமை.

9. இக் குழுவானது, வடக்கு கிழக்கில் பணியாற்றிய வைத்தியர்களின் சாட்சியங்களை முக்கியத்துவப் படுத்தியிருந்த போதும் அவர்கள் சாட்சியங்களை வழங்கியபோது என்ன பின்னணியிலிருந்தார்கள் என்பதை குறிப்பிடத்தவறிவிட்டது. அதாவது அவர்கள் கைது செய்யப்பட்டதும் போரின் இறுதிக் கட்டத்திலே அவர்கள் விடுத்திருந்த அறிக்கையை பின்னர் பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்கமாக வாபஸ் பெற்றமை என்பவற்றைக் குறிப்பிடலாம். ஆகவே, இவ்வைத்தியர்களால் இவ்வாறாக ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட சாட்சியங்களின் நம்பகத்தன்மை பெரிதும் சமரசம் செய்யப்பட்டன. குறிப்பாக, ஒவ்வொரு தாக்குதலும் வீடியோப்படம் பிடிக்கப்பட்டு மேலதிகாரிகளின் முறையான ஒப்புதலுடனேயே நிகழ்த்தப்பட்டன என இராணுவ சாட்சியங்கள் ஒப்புக்கொண்டபோது, கீழே தன்னியங்கி வானூர்தி வீடியோப் படங்கள், வான் வழித் தாக்குதல்களின் வீடியோப்படங்கள் மற்றும் இராணுவ ஆவணக்காப்பகம் போன்ற மிக முக்கியமான சர்ட்சியங்களைப் பெறுவதற்கு ஆணைக்குழு தவறிவிட்டது. மேலும் இந்த ஆணைக்குழுவானது முல்லைத்தீவின் அரச அதிபராக கடமையாற்றிய இமெல்டா சுகுமார் வழங்கியிருந்த சனத்தொகை மதிப்பீட்டு அறிக்கையையோ அல்லது வன்னியிலிருந்த அரச அதிபர்களுக்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் சர்வதேச நிறுவனங்களிடம் உணவு வேண்டி விண்ணப்பிக்க வேண்டாமென அனுப்பிய கடிதத்தையோ கருத்தில் கொள்ளவும் முக்கியத்துவம் கொடுக்கவும் தவறியுள்ளது. பிரதானமாக, வன்னி சனத்தொகையைக் குறைத்து மதிப்பிட்டு 2009 ஆம் ஆண்டு மாசி மாத நடுப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையையும் கவனத்திற்கொள்ளவில்லை. இத்தகைய முக்கிய சாட்சியங்கள் உணவின்றித் தவித்த வன்னி மக்களை உணவு சென்றடைவதைத் தடுப்பதற்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட திட்ட மிட்ட முயற்சியினைச் சுட்டிக்காட்டுவதாக அமைவதுடன் அவை இவ்வாணைக்குழுவினால் நுணுக்கமாக பரிசீலிக்கப்படவேண்டியவையாகவும் உள்ளன.

10. அத்துடன், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது வழங்கப்பட்ட உண்மையான தகவல்களுக்கு ஏற்ப [illegible] இழைக்கப்பட்டதாக நம்பப்படும் குற்றங்கள் தொடர்பிலான சர்வதேச மனிதநேய சட்டமீறல்கள் மற்றும் உள்நாட்டு சட்டமீறல்கள் போன்றவற்றை ஆராய்வதை இக்குழு புறக்கணித்துள்ளது.

11. சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் பொதுமக்கள் மற்றும் பொதுமக்கள் சனத்தொகை என்பவற்றிற்குத் தெளிவற்ற வரைவிலக்கணங்களே காணப்படுவதாக இவ்வாணைக்குழு தவறாக முடிவுறுத்துகின்றது. முதலில், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது பொதுமக்கள் என்ற பதத்தின் வரைவிலக் கணத்தைத் தீர்மானிப்பதற்கு, சர்வதேச மனிதநேயச் சட்டத்திற்கமைய போரில் நேரடியான அல்லது தொடர்ச்சியாகப் பங்குபற்றுதல் மற்றும் வேறுபடுத்தல் கோட்பாட்டில் அவற்றின் விளைவுகள் போன்றவற்றை இன்னும் விரிவாக விவரித்திருக்க வேண்டும். ஏனெனில் போரில் நேரடியாகப் பங்குபற்றாத அனைவரும் பொது மக்கள் எனவும் அவர்களை இலக்கு வைக்கமுடியாது எனவும் சட்டம் தெளிவாக கூறுகிறது. சட்டத்தினைக் கவனத்தில் கொள்ளாது இக்குழுவானது முன்னர் எப்போது நிகழாத இலங்கையின் அனுபவத்தின் பக்கம் கவனத்தைத் திசை திருப்புவதற்கு முயற்சிக்கின்றது. ஆயினும், போரில் நேரடியாகப் பங்குபற்றுதல் என்பதனை தீர்மானிக்கின்ற விடயங்கள் ஏன் இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்களில் பிரயோகிக்கப்படக் கூடாது என்பதற்குச் சரியான காரணங்கள் எவற்றையும் ஆணைக்குழு வழங்கவில்லை. மேலும், பொது மக்கள் மீதான தாக்குதலுக்கெதிரான முழுமையான தடையானது ஒரு சனத்தொகையில் பெரும்பாலானவர்கள் பொதுமக்களாக இருக்கும் சந்தர்ப்பங்களைக்கும் ஏற்புடையதாக இருப்பதுடன் அச்சனத்தொகையானது பொதுமக்கள் என்ற வரைவிலக்கணத்திற்குள் வராத தனிநபர்களைக் கொண்ட ஒரு குழுவினைக் (போராளிகளைக்) கொண்டிருப்பினும் அது இச்சனத்தொகையின் பொதுமக்கள் சனத்தொகை என்ற இயல்பினை நீக்காது என்ற தீர்மானத்தை ஏற்படுத்திய முன்னாள் யுகோஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் சட்டவியலைப் பின்பற்றுவதற்கான எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

12. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது இராணுவத்தினர் யுத்த சூனிய பிதேசங்களிலே வேண்டுமென்று தாக்குதல் நடத்தவில்லையெனவும் கூறுகின்றது. ஆனால் யுத்த சூனிய பிரதேசங்களிலேயிருந்து மக்களிடையே விடுதலைப்புலி உறுப்பினர்களும் காணப்பட்டார்கள் என்பதும் அவர்கள் வெளியேறிச் செல்ல விரும்பிய மக்களை அனுமதிக்கவில்லை என்பதற்கும் நம்பத்தகுந்த ஆதாரங்கள் இருந்தபோதும், யுத்த சூனிய பிதேசங்களிலே இருந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் அங்கிருந்து நடத்திய தாக்குதல்களுக்கு பதில் தாக்குதலை நடத்துவதைத் தவிர படையினருக்கு வேறெந்த வழியும் இருக்கவில்லை என்ற உரைவடிவத்தை மட்டுமே ஆணைக்குழு ஏற்றுக்கொள்கின்றது. பல்வேறு காரணங்களினால் இப்பகுப்பாய்வானது பிழையானதாகும்.

13. முதலாவதாக, இது நியாயமான இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றபோது நியாயமற்ற முறையில் பொது மக்கள் குறிவைக்கப்பட்டால் அத்தாக்குதலானது நியாயமற்றது எனக் கூறும் சர்வதேச மனிதநேயச் சட்டத்தை புறக்கணிக்கின்றது.

14. இரண்டாவதாக, விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு பதில் தாக்குதலை நடத்தியதாகக் கூறுகின்ற, இவ்வாணைக்குழுவினால் தெரிவு செய்யப்பட்ட கதைவடிவமானது போரினால் பாதிக்கப்பட்ட பலரது குறிப்புக்கள், குறிப்பாக முதலாவது யுத்த சூனிய பிதேசத்தினுள்ளே சுதந்திரபுரம் சந்தியிலமைந்த ஐக்கிய நாடுகள் சபையின் மையத்தின் மீதான தாக்குதல் ஆகிய வடிவங்களுக்கு ஏற்றவாறு அமையாத நியாயமற்ற பொதுப்படுத்தலாகும்.

15. அத்துடன், மூன்றாவதாக இவ்வாணைக்குழுவானது பாதுகாப்பு படைகளின் நடவடிக்கைகள் விகிதாசாரக் கோட்பாட்டிற்கிணங்கவே காணப்படுகின்றது என்ற முடிவிற்கு வந்துள்ளது. எதிர்பார்க்கின்ற இராணுவ ரீதியிலான அனுகூலத்திற்கும் மக்கள் இழப்பிற்குமிடையிலான சமநிலையினைப் பரீட்சிக்காது, தாக்குதல்கள் விகிதாசாரமானவை என்ற முடிவினை ஆணைக்குழு அடைகின்றது. ஒவ்வொரு தாக்குதலின் போதும் ஏற்பட்ட மக்கள் இழப்புக்களின் சரியான எண்ணிக்கை இல்லாமல் இந்தச் சோதனையை போதுமான அளவிற்கு செய்திருக்கமுடியாது. மேலும் குறிப்பாக இரண்டாவது மற்றும் மூன்றாவது யுத்த சூனிய பிரதேசங்களிலே பொதுமக்களின் இழப்புகளைக் குறைக்கும் பொருட்டு இராணுவம் கனரக ஆயுதங்களுக்கு பதிலாக வேறு ஆயுதங்களைப் பயன்படுத்தியிருக்க முடியுமா என்பது பற்றி விவரமான எந்தவொரு விசாரணையையும் ஆணைக்குழு நடத்தவில்லை. ஆயுதப் போராட்டம் நிகழ்ந்த பகுதிகளில் எல்லாவிதமான நிபந்தனைகளின் மீள்கட்டுமானமும் சாத்தியமற்றது என்று முதலீட்டு பிணக்குகளை தீர்ப்பதற்கான சர்வதேச நிலையத்தினால் 1990ஆம் ஆண்டு முன்மொழியப்பட்ட தெளிவற்ற, பொருத்தமற்ற மாதிரியை இக்குழு மேற்கோள் காட்டியுள்ளது. ஆனால் ஒரு இலக்கை நோக்கி தாக்குதல் நடத்துகின்ற போது எதிர்பார்த்த நிச்சயமானதும் நேரடியானதுமான இராணுவ அனுகூலத்தைக் காட்டிலும் மிக அதிகளவில் பொதுமக்களிற்கு உயிரிழப்பீடோ அல்லது காயங்களோ ஏற்படுமென்றோ அல்லது அவர்களின் உடைமைகளுக்கு சேதம் ஏற்படுமென்றோ அல்லது இவ்விருவிதமான பாதிப்புக்களும் ஏற்படுமென அறிந்தால் கட்டளை தளபதிகள் அவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும் என்ற முன்னாள் யுகோஸ்லாவியாவிற்கான சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் சட்டவியலை மேற்கோள் காட்டுவதற்கு இவ்வாணைக்குழு தவறியுள்ளது. முன்னாள் யுகோஸ்லாவியாவிற்கான சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் சட்டவியலின்படி, இவ்வாறான இழப்புக்கள் பொதுமக்களுக்கு ஏற்படுமாக இருந்தால் அத்தாக்குதல் தொடரப்படக்கூடாது.

16. மேலும் இரண்டாவது மூன்றாவது யுத்த சூனிய பிரதேசங்கள் தொடர்பிலான ஒரு தலைப்பட்சமான பிரகடனத்தின் விளைவுகளை ஆராய்வதற்கு இந்த குழு தவறியுள்ளது. முதலாவது யுத்த சூனிய பிரதேசத்தில் அரசின் அனுபவம் மற்றும் மக்களிடையே கலந்து காணப்பட்ட விடுதலைப் புலிகளின் தந்திரோபாயம் என்பவற்றின் பின்னணியில் பொது மக்களுக்கு ஆபத்து உண்டென்பதை மிகநன்றாக அறிந்திருந்தபோதும் அரசு இரண்டாம் மற்றும் மூன்றாம் யுத்த சூனிய பிரதேசங்களையும் அறிவித்திருந்தது. தொடர்ச்சியாக புதிய யுத்த சூனியப் பிரதேசங்களைப் பிரகடனப்படுத்தும் அரசின் இந்நடவடிக்கையானது, இப்பிரதேசங்கள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் மக்களிடையே கலந்து இருப்பார்கள் என்ற காரணத்திற்காகத் தாக்கப்படும் என்ற அறிவினை அரசு கொண்டிருந்தபோதும் வேண்டுமென்றே பொது மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நோக்கில் தொடர்ந்து யுத்த

(22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக் கூறலை சுட்டிக்காட்டத் தவறிய நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூனியப் பிரதேசங்களை அறிவித்தது என்ற குற்றச்சாட்டினை வலுப்படுத்துவதாக அமைகின்றது.

17. அரசிற்கெதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆணைக்குழுவினது பகுப்பாய்வானது பாரிய முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது. ஒருபுறம் இராணுவத்தினர் நவீன கருவிகளின் உதவியுடன் யுத்த சூனிய பகுதியிலிருந்த பொதுமக்களை மிகக் கவனமாக இனங்கண்டு ஒவ்வொரு தாக்குதலையும் கவனமாகத் திட்டமிட்டு நடத்தியதாகக் கூறும் பாதுகாப்புப் படையினரின் அறிக்கையினை இவ்வாணைக்குழு எந்தவித வினாவுமின்றி ஏற்றுக்கொண்ட அதேவேளை ஒவ்வொரு தாக்குதலுக்கு முன்னரும் கடுமையான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன என்ற அரசின் நிலைப்பாட்டையும் இவ்வாணைக் குழு ஏற்றுக்கொண்டுள்ளது. அதனால், ஒவ்வொரு இலக்கினது தன்மை மற்றும் சரியான அமைவிடம் என்பவற்றை இராணுவத்தலைமைத்துவம் மிகநன்றாக அறிந்திருந்தது. இதே வேளை, நிகழ்ந்த மக்கள் இழப்புக்கள், எந்தவிதமான நோக்கத்தின் பின்னணியிலும் இடம்பெறவில்லையெனவும் வேறு எந்த வழியும் சாத்தியமற்ற நிலையில் முன்னரெப்போதும் ஏற்படாத ஒரு நிலைமையின் விளைவாகவே ஏற்பட்டதாக இவ்வாணைக்குழு முடிவுறுத்தது. விடுதலைப் புலிகளின் ஆட்லறித் தாக்குதல்களுக்குப் பதில்த்தாக்குதல் நடத்துதல் என்ற தீர்மானமானது களநிலவரங்களிற்கேற்ப களத்திலிருந்த கட்டளைத்தளபதிகளால் மேற்கொள்ளப்பட்டதெனவும் அதில் மீளயோசிப்பதற்கு எதுவும் இருக்கவில்லை எனவும் கூறியிருக்கின் றது. களநிலவரங்களுக்கேற்ப களத்திலிருந்த கட்டளைத் தளபதிகளின் தீர்மானத்தினடிப்படையிலேயே தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்ற விவரிப்பானது பொதுமக்கள் நிலையங்கள் பற்றிய சரியான தகவல்களுடனும் கவனமான திட்டமிடலுடனுமே தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று இவ்வாணைக்குழு முன்னர் குறிப்பிட்ட விவரிப்பிற்கு முரணாக அமைகின்றது. கனரக ஆயுதங்களின் பாவனை அவசியமில்லை என்று யுத்த இறுதிக்கட்டத்தின்போது சர்வதேச ரீதியில் வெளியிடப்பட்ட அரசின் நிலைப்பாட்டிற்கான சாத்தியத்தைக் கொண்டுள்ளது. பொதுமக்கள் அமைவிடங்களை அவர்கள் அறிந்திருந்தார்களேயாயின் அம்மக்களின் இழப்புக்கள் வேண்டுமென்று நிகழ்த்தப்படவில்லை எனக்கூறி எந்தவிதமாகவும் நிராகரிக்க முடியாது. ஆகவே இவ்வாணைக் குழுவின் பகுப்பாய்வானது சுயமுரண்பாடு டையதாக இருப்பதுடன் அரசுக்கெதிரான குற்றச்சாட்டுக்களை உண்மையாக விசாரணை செய்வதில் தயக்கத்தையும் வெளிக்காட்டுகின்றது.

18. படையினர் வைத்தியசாலைகள் மீது வேண்டுமென்றே தாக்குதல் நடாத்தினர் என்ற குற்றச்சாட்டு பற்றிய ஆணைக்குழுவின் பகுப்பாய்வு தொடர்பில் இதேபோன்றதொரு விமர்சனம் காணப்படுகின்றது. வைத்திய சாலைகள் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகின என்பதை ஏற்றுக்கொண்டுள்ள ஆணைக் குழுவானது முதன்மை ஆதாரங்களற்ற நிலையில் எந்தசாராருடைய ஷெல் இவற்றைத் தாக்கியுள்ளது என்பதனை அறுதியாகக் தெரிவிக்க முடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இராணுவத்தினர் பொதுமக்கள் இழப்பீடுகளை தவிர்க்கும் முகமாக முன்னெச்சரிக்கையாக செயற்பட்டனர் என்கின்ற அடிப்படையில் பார்க்கின்றபோது ஆணைக் குழுவின் இந்நிலைப்பாடானது தொடர்ந்து செயலாற்றுவதற் குக் கடினமான ஒன்றாகக் காணப்படுகின்றது. மக்கள் இழப்பைக் குறைக்கக் கூடியவகையில் படையினர் தம் வசம் போர் இடம்பெற்ற பகுதிகளைக் கண்காணிப்பதற்கான கருவிகள் இருந்ததாக ஆணைக்குழுவின் முன் சாட்சியம் வழங்கியிருந்தபோதும் ஆணைக் குழுவானது அவ்வீடியோ காட்சிகளை சாட்சியமாக கருத்தில் கொள்ளவோ அல்லது வைத்தியசாலைகள் மீது தாக்குதல் நடத்தியது யாரென்பதைக் கண்டறிவதற்கான மேலதிக விசாரணைக்கோ பரிந்துரை செய்யத் தவறியுள்ளது.

19. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பாதுகாப்பு தரப்பினரிடம் சரணடைந்த பின்னர் அல்லது கைது செய்யப்பட்டபின்னர் காணாமல் போனோர் தொடர்பிலான ஆயிரக்கணக்கான குற்றச்சாட்டுக்களை ஆமோதிக்கிறது. அத்துடன் காணாமல் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கென ஒரு விசேட ஆணையாளர் நியமிக்கப்படவேண்டும் எனவும் குற்றவியல் சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு சட்டமா அதிபரிடம் விவரங்கள் வழங்கப்படவேண்டும் எனவும் பரிந்துரை செய்கின்றது. அதுமட்டுமன்றி, காணாமல் போதல் சம்பவங்களை தனிமைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளாக கருதுவதாகவும் அவை ஒரு சில தனிநபர்களால் இழைக்கப்பட்ட குற்றங்களாக அது கருதுவதாகவும் தெரிவிக்கிறது. குறிப்பாக, மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்குத் தான் திறனற்றது என்பதை ஆணைக் குழு ஒத்துக்கொள்ளாமல் இம்முடிவுக்கு வருகின்றது. புத்தளத்தில் இடம்பெற்ற பகிரங்க விசாரணைகளின் போது விசாரணை செயற்பாடுகளை செய்யக்கூடியதன்மையினை ஆணைக்குழு கொண்டுள்ளதை ஆணைக்குழுவின் தலைவர் ஆணைக் குழுவின் பணியாணையினை விளக்க முறுத்தும்போது மறுத்துள்ளார். ஆணைக்குழுவானது தனது விசாரணை அதிகாரங்களை ஏற்றுக்கொள்ளாத போதும், 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 17 ஆம் திகதிக்கும் 20 ஆம் திகதிக்குமிடையில் இடம்பெற்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட காணாமல் போதல் சம்பவங்களை திட்டமிட்ட முறையில் நடத்தப்பட்டவை எனக் கூறாது, தனிமைப்படுத்தப்பட்ட நிகழ்வுகள் எனவும் அவை ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவை எனவும் முடிவாகத் தீர்மானித்திருந்தது. இத்தகைய தவறான பண்புறு வர்ணனையானது எந்தவொரு எதிர்கால விசாரணைக்கும் கேடுவிளைவிப்பதாக அமைவதுடன் குறிப்பாக காணாமற் போதல் மற்றும் சரணடைந்தவர்களைக் கொலை செய்தல் போன்ற திட்டமிட்ட நடைமுறைகளுடன் தொடர்புடைய போர்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் என்ற குற்றச்சாட்டுக்களை எதிர்ப்பதனை நோக்காகக் கொண்டுள்ளது.

20. இவ்வாணைக்குழுவானது யுத்த இறுதிக்கட்டத்தின்போது ஏற்பட்ட மக்கள் இழப்பீட்டினை அளவிடுதல் என்ற விடயமானது தமது பணிப்பாணைக்கு முக்கியமானதாகவும் தமக்கு சவாலாக அமைகின்ற ஒரு கேள்வியாகவும் ஏற்றுக்கொண்டுள்ள போதும் அதுபற்றி போதுமான அளவிற்கு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஆணைக்குழுவானது அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட சூனிய வலயங்களில் அகப்பட்டிருந்த மக்களது எண்ணிக்கை தொடர்பில் குறிப்பாக இரண்டு பிரதான ஆதாரங்களான மன்னார் ஆயர் அருட்தந்தை கலாநிதி இராயப்பு ஜோசப் மற்றும் முல்லைத்தீவிற்கான அப்போதைய அரசஅதிபரான திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரி மிருந்தே சாட்சியங்களைப் பெற்றுக் கொண்டது. முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சிக் கச்சேரிகளிலிருந்து பெறப்பட்ட முறையான தரவுகளின் படி 2008 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத் தொடக்கப்பகுதியில் 429,059 பேர் வன்னிப்பகுதியில் வசித்தார்கள் என அருட்தந்தை இராயப்பு ஜோசப் அவர்களும் 2009 ஆம் ஆண்டு தை மாதப்பகுதியில் புதுமாத்தளன் பகுதியில் காணப்பட்ட பிரகடனப் படுத்தப்பட்ட சூனிய வலயத்தில் ஏறத்தாழ 360,000 பொதுமக்கள் மீதமாகக் காணப்பட்டனர் எனவும் குறிப்பிட்டனர். 282, 380 மக்கள் மட்டுமே வன்னிப்பகுதியிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வந்தவர்களாவர். ஆகவே, இத்தரவுகளை வைத்துப் பார்க்கும் போது மீதமிருக்கும் 75,000 இலிருந்து 146, 679 பேர் பற்றிய விவரங்கள் எதுவுமில்லை. ஆணைக் குழுவின் முன்னால் இத்தகைய வலுவான சாட்சியங்கள் காணப்பட்ட போதும், மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் கணக்கில் வரவில்லை என்பதையோ அல்லது இவர்களில் பெரும்பாலானோர் இறுதிக்கட்டப் போரின்போது இறந்திருக்கக்கூடும் என்பதையோ ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளவில்லை.

21. காணாமல் போனோர், காணாமற்போதல், ஆட்கடத்தல்; கைதிகளை நடத்தும் முறை; சட்ட விரோத ஆயுதக் குழுக்கள்; சிறுவர் கட்டாய ஆள்சேர்ப்பு; இலகுவில் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மற்றும் உள்ளூரிலே இடம்பெயர்ந்தோர்; வடக்கு, கிழக்கிலுள்ள முஸ்லிம் சமுகம்; பேச்சுச் சுதந்திரமும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையும்; தத்தமது சமயநெறியைக் கடைப்பிடிப்பதற்கான உரிமை, குழுமச்சுதந்திரம் மற்றும் நடமாடும் சுதந்திரம் ஆகிய குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கியதான பல மனித உரிமை விடயங்களில் இவ்வாணைக்குழு ஈடுபடுகின்றது. ஆயினும், இது பல சிக்கலான விடயங்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளத் தவறியுள்ளது. அதனாலேயே தேர்ந்தெடுத்த விடயங்களில் மட்டுமே தான் செயற்படுகின்றது என்ற அணுகுமுறையினை வெளிப்படுத்தியுள்ளது. உதாரணமாக, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டினைக் கொண்டுள்ள இனிய பாரதி என்ற ஒருவர் பற்றி ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள மனித உரிமைகள் பற்றிய பாகத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கிழக்கில் இடம்பெற்ற பல காணாமல் போதல் சம்பவங்களுடன் தொடர்புடைய இந்நபரினுடைய ஈடுபாடு பற்றி குறிப்பிடுவதை விட்டுவிட்டு, ஆணைக்குழு தனது அறிக்கையிலுள்ள நல்லிணக்கம் பற்றிய அத்தியாயத்தில் இவர் பற்றி பொதுப்படையாகக் கூறியுள்ளது. இக்குறிப்பிட்ட நபரிற்கெதிராக வழங்கப்பட்ட சாட்சியங்களை விவரமாக விசாரணை செய்வதற்கான எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. அதுமட்டுமன்றி, இந்நபர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை சுதந்திரக் கட்சி ஆகியவற்றுடன் கொண்டிருந்ததாகக் குற்றம் சாட்டப்படும் அவரது தொடர்புகள் பற்றி எதையும் கோடிட்டுக் காட்டவில்லை.

22. இத்தகைய சூழ்நிலைகளில், இவ்வாணைக்குழுவானது தனது நடுவுநிலைமையையும் நம்பகத் தன்மையையும் இழந்துள்ளதுடன் குற்றமிழைத்தவர்கள் தண்டனைகளிலிருந்து தப்பிப்பதனையும் மீள்வலியுறுத்தியுள்ளது.

23. காணாமற் போதல், தடுப்புக் காவல், காணி அபகரிப்புக்கள், வன்முறை, துன்புறுத்தல்கள், அச்சுறுத்திப் பணம் பறித்தல் மற்றும் கொலை ஆகிய தனிநபர் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தாம் ஏதோ ஒருவகையில தலையிடுவதாகவும் அதனூடாக இக்குற்றச்சாட்டுகள் பற்றிய தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் இவ்வாணைக்குழு எண்ணற்ற சந்தர்ப்பங்களில் உறுதியளித்துள்ளது. ஆயினும், ஆணைக்குழு அறிக்கையானது மேலே குறிப்பிடப்பட்ட தொடரப்படுகின்ற வேலைப்பாடு தொடர்பில் மிகக்குறுகிய ஒரு தரவுப் பகுப்பாய்வை மட்டுமே கொண்டுள்ளது. இது சாட்சிகளுக்கு எந்தவிதமான பயனையும் வழங்கப் போவதில்லை. எவ்வாறு குறிப்பிட்ட முடிவு பற்றி குறிப்பிட்ட ஒரு சாட்சிக்கு அறிவிப்பது என்பது பற்றி ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது என்பது பற்றி அறிக்கையில் தெளிவின்மையுள்ளது. இச்சாட்சிகளை அணுகக்கூடியதாக ஆணைக்குழு இருக்கும் என்று கருதினால் கூட பொது அமர்வுகளின்போது வழங்கப்பட்ட உறுதிகளுக்கு எந்தவிதமான பதிலும் அறிக்கையில் வழங்கப்படவில்லை என்பது வெளிப்படையாகும்.

24. அத்தோடு பால் நிலைசார் பிரச்சனைகளை கையாள்வதில் கொண்டிருந்த குறைபாடுகளை மீளாய்வு செய்யவும் ஆணைக்குழு தவறியிருக்கின்றது. ஆணைக்குழுவின் கட்டமைப்பு மற்றும் அணுகுமுறை என்பவை பெண்கள் உண்மையைக் கூறுவதற்கு எதிராகப் பலமான முட்டுக்கட்டைகளை உருவாக்கின. அதுமட்டுமன்றி, பெண் சாட்சியங்களைச் சுருக்கமாக விசாரணை செய்ததுடன் அவர்களுடன் இவ்வாணைக்குழு நுனிப்புல் மேயும் தன்மையையும் நிராகரிப்புத்தன்மையையும் கொண்டிருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, பெண்கள் அழுவது தொடர்பில் கடுமையான ஒழுக்கப்போக்கினை வலியுறுத்துவதாக அமைந்ததுடன் வாய்மொழி சாட்சியங்களுக்குப் பதிலாக அவர்களிடம் எழுத்துமொழி சாட்சியங்களை சமர்ப்பிக்குமாறும் கோரியது. பொதுவாக் பெண்கள் தமது அனுபவங்களை ஆணைக்குழுவின் முன் விபரிக்கின்றபோது தெளிவான ஒரு அனுதாபமின்மையை அவர்களால் ஆணைக்குழுவிடமிருந்து உணரமுடிந்தது.

25. ஆணைக்குழுவின் மனித உரிமை மீறல்கள் குறித்த பல பரிந்துரைகள், நீதித்துறை, சட்டமா அதிபர் திணைக்களம், தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் பொதுச் சேவைகள் ஆணைக்குழு ஆகிய முக்கிய நிறுவனங்களின் சுயாதீனத்தன்மை தொடர்பில் அனுமானங்களை மேற்கொள்வதாகவுள்ளது. ஆகவே, 18 ஆம் திருத்தச்சட்டத்தின் தொடரும் பயன்பாடானது சுருக்கமாக அமைவதுடன் இவ்வாணைக்குழுவின் இறுதிப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் பெரும்பாலாக சவால்களையும் தோற்றுவிக்கின்றன.

26. கணக்கொப்புவித்தலுடன் நேரடியாகத் தொடர்புபடாத சில விடயங்கள் தொடர்பிலும் ஆணைக் குழு பரிந்துரைகளை வழங்கியுள்ளது. இப்பரிந்துரைகள் சில சாதகமான விடயங்களைக் கொண்டுள்ளன. ஆகவே, அவை அமுலாக்கப்படுமாயின், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவற்றை வரவேற்பதுடன் அவற்றிற்கு ஆதரவும் வழங்கும். இப்பரிந்துரைகளின் அமுலாக்கத்தினை கூர்ந்து கண்காணிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எண்ணியிருக்கின்றது. ஆயினும் இப்பரிந்துரைகள் கணக்கொப்புவிப்புடன் தொடர்புடைய விடயங் கள் எனக் குழப்பமடையக் கூடாது.

27. கணக்கொப்புவித்தலுடன் தொடர்பற்ற பரிந்துரைகள் நல்லிணக்கம் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் சார்ந்த பரிந்துரைகளாகும். இனப்பிரச்சினை மற்றும் ஜனநாயக நிறுவனங்களுக்கு அச்சுறுத்தலாக அமைகின்ற ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுகின்றதும் அதிகாரப்பரவலாக்கத்தை அடிப்படையாகக் கொண்டதுமான அரசியல் தீர்வொன்றினைக் காணவேண்டும் என ஆணைக்குழு வலியுறுத்துகின்றது. மக்களின் அடிமட்ட பங்குபற்றுதலை உறுதிசெய்யும் முகமாக உள்மட்ட அரச நிறுவனங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதனையும் பரிந்துரைக்கின்றது. அதுமட்டுமன்றி, மாகாணசபை முறைமையின் செயற்பாடுகளில் காணப்படும் குறைபாடுகளை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. மாகாண மட்டத்திலுள்ள அரசியல் தலைமைத்துவங்கள் மற்றும் மக்களிடையே நம்பிக்கைத்தன் மையினை ஏற்படுத்துவதங்காக மாகாணமட்டப் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக நாடாளுமன்றத்தில் இரண்டாவது சபையொன்றினை உருவாக்குதல் போன்ற ஒரு யதார்த்தமான மாதிரியே இவ் வாணைக் குழுவினால் முன்வைக்கப்பட்ட ஒரேயொரு ஆணித்தரமான ஆலோச்னையாகும். அதிகாரப் பரவலாக்கம் பற்றிய இவ்வாறான உணர்ச்சிகரமான கருத்துக்கள் பெரும்பாலாக சொற்கவர்ச்சியுடையவை மட்டுமே. அவை 2006 ஆம் ஆண்டில் ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் பெரும்பான்மை அறிக்கை உள்ளடங்கலான முன்னைய பரிந்துரைகளுடைய அளவிற்குக்கூட அமையாதவை. 13 ஆம் திருத்தச்சட்டத்தின் அமுலாக்கம் தொடர்பில் ஜனாதிபதி அவர்களின் சமீபத்தைய கருத்துக்களைப் பார்க்கும்போது, கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் ஆணைக்குழுவின் பணிவான பரிந்துரைகள் அமுலாக்கப்படுவதும் சந்தேகமே. இவ்வாறான கருத்துக்கள், அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கம் ஒன்றினை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வொன்றினை வழங்குவதற்கு தற்போதைய அரசு உண்மையில் தயாரில்லை என்ற தமிழ் மக்களிடையே காணப்படும் வலுவான அச்சத்தினை உறுதிசெய்கின்றன.

28. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் பல சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்ட, வடக்கில் இராணுவத்தினரின் தலையீடு என்ற விடயத்தையும் ஆணைக்குழு ஒருவாறாக ஏற்றுக் கொண்டுள்ளது. அதனால், அனைத்து சிவில் நிர்வாக நடவடிக்கைகளிலிருந்தும் இராணுவத்தினர் தம்மை விலக்கிக் கொள்ளவேண்டியதன் தேவையை அங்கீகரிக்கின்றது. இப்பரிந்துரையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்பதுடன் அடுத்து வரும் மாதங்களில் இப்பரிந்துரை எவ்வாறு அமுலாக்கப்படுகின்றது என்பதனை நுணுக்கமாகக் கண்காணிக்கவும் அவற்றில் ஏற்படும் முன்னேற்றங்களை வெளியிடவும் எண்ணியுள்ளது.

29. இவ்வாறான சாதகமான பரிந்துரைகளைக் காட்டிலும், உண்மை, நீதி மற்றும் இழப்பீடு போன்ற பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை வழங்குகின்ற சர்வதேச தரங்களுக்கு இயைவான கணக்கொப்புவிப்பு செய்முறையானது, தேவையானது மிக முக்கியமானதும் உடனடியானதுமான தேவையாகும். இத்தகைய தரமுடைய ஒரு செய்முறையினை அரசு நிறுவுவதற்குத் தவறுகின்ற பட்சத்தில் ஐ.நா செயலரினால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவின் அறிக்கையில் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கேற்ப, கணக்கொப்புவிப்பு விடயங்களை மேம்படுத்தக்கூடியவையும் இலங்கையில் நல்லிணக்கத்தினை ஊக்குவிக்கக் கூடியவையுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுக்கின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ.சைக்கிளில் சந்தைக்குச் சென்ற குடும்பஸ்தர் கரணவாயில் சாவு

1 »

கொண்டுவந்த வேளையிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் மிளகாய் மூடையுடன் வந்த போது அது சரிந்து 'ஹாண்டில்' திரும்பியதால் இந்த விபத்து நிகழ்ந்திருக்கலாம் என்றும் இந்தத் தடுமாற்றத்தின்போது வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோ.சைக்கிள் வீடொன்றின் மதிலில் மோதியதில் கேதீஸ்வரன் தூக்கி வீசப்பட்டு தலையில் படுகாயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு அவரை உடனடியாக எடுத்துச் சென்ற போது இடை வழியிலேயே அவர் மரணமானார் என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி வ.பாஸ்கரன் மரண விசாரணைகளை நடத்தினார். சடலம் பிரேத பரிசோதனையின் பின் நேற்று மாலை 5 மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. (ஒ-319-313-236)

## அமைதியான பொங்கல்

1 »

இந்து ஆலயங்கள், சமய நிறுவனங்கள், அமைப்புகள், பொது நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் எங்கும் அலங்கரித்துப் பெங்கலிட்டதனைக் காண முடிந்தது.

இதேவேளை ஞாயிற்றுக்கிழமையாக இருந்த போதும் பல கந்தோலிக்க ஆலயங்களிலும் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றுத் திருப்பலி நிறைவேற்றி இயற்கைக்கும், தொழிலுக்கும் நன்றி செலுத்தி வழிபாடுகள் இடம் பெற்றன. (ஒ-135)

## பறக்குது பார் பட்டம்...!

1 »

ஏற்றினர்.

24 அடி நீளமும் 23 அடி அகலமும் கொண்ட பெரும் பட்டமாக அது இருந்தது. லொறி ஒன்றில் இரும்பு 'பைப்' களின் உதவியுடனேயே இந்த இராட்சதப் பட்டம் நிறுத்தப்பட்டது. பல டசின் கணக்கான இளைஞர்களால் இழுத்துச் செல்லப்பட்டு ஏற்றப்பட்டது. பட்டத்தைக் கட்டுவதற்கு 75,000 ரூபா வரையில் செலவிடப்பட்டதாக அதனைக் கட்டியவர்களில் ஒருவரான விஜயரட்ணம் டக்சண்ணா என்ற இளைஞர் தெரிவித்தார்.

## மஹிந்தவுக்கு 'விடுதலை'?

1 »

சகர் ஹரோல்ட் ஹோ இந்த போர்க்குற்ற வழக்கில் இருந்து விலக்குப் பெறுவதற்கு இலங்கை ஜனாதிபதிக்கு இராஜதந்திர சிறப்புரிமை உள்ளதாக கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்துக்குப் பரிந்துரைத்துள்ளார்.

முன்னதாக இந்த வழக்கை விசாரித்து வந்த கொலம்பியா மாவட்ட நீதிபதி கொலீன் கொல்லர் கொட்டேலி, இந்த விவகாரத்தில் வெளிவிவகார அமைச்சின் பரிந்துரைகளை ஜனவரி 13ஆம் திகதிக்குள் தெரியப்படுத்துமாறு கேட்டிருந்தார்.

இந்நிலையில், கடந்த வெள்ளியன்று அமெரிக்க நீதித் திணைக்களத்தின் உதவி சட்டமா அதிபர் ரொனி வெஸ்ட் மற்றும் பிரதிக் கிளைப் பணிப்பாளர் வின்ஸ் எம்.காலர்வே ஆகியோர் இலங்கை ஜனாதிபதிக்குள்ள இராஜதந்திர சிறப்புரிமை குறித்த பரிந்துரைகளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

இதையடுத்து நீதிபதி கொட்டேலி, இந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு இலங்கை ஜனாதிபதிக்கு எதிரான வழக்கைத் தள்ளுபடி செய்யலாம் என்று நீதிமன்ற வட்டாரங்கள் கூறியுள்ளன. (ஒ-சி)

## இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் கடற்படை அதிகாரி 'சண்டித்தனம்'

1 »

வாகனத்தில் திடீரென வந்திறங்கிய அந்த அதிகாரி பொலிஸ் நிலையத்துக்குள் அனுமதி ஏதும் பெறாமல் உள்ளே சென்று பொலிஸாரைப் பார்த்து "நீங்கள் என்ன 'ரி.என்.ஏ'க்கு ஆதரவா?" என்று சிங்களத்தில் கடும் தொனியில் கூறித் திட்டியவாறு மற்றைய அதிகாரியை வந்த வாகனத்தில் ஏற்றிச் சென்றார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார். தமது கண்முன்னே இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்றும் சிறீதரன் உறுதிப்படுத்தினார்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக அந்தப் பகுதி கடற்படை அதிகாரி ஒருவரின் அனுமதியுடன் பற்றைகள் மற்றும் குப்பைகளை எரியூட்டிய சமயம் கடமையில் நின்ற கடற்படையினர் சிலர் "யார் இங்கே எரியூட்டியது; உடனே அணைத்துவிட வேண்டும்" என்று கட்டளையிட்டவாறு தாக்கினர். அவ்வாறு தீயை அணைத்த பின்னரும் தாக்கப்பட்டனர். நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

சம்பவத்தைக் கேள்வியுற்று அங்கு விரைந்து வந்த வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவரும் உறுப்பினரும் கூடத் தாக்குதலுக்கு இலக்காகி இருந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து இளவாலைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதை அடுத்தே இந்த விவகாரம் நீதித்துறை மட்டத்துக்குச் செல்லாமல் தடுக்கும் நோக்குடன் இரு தரப்பினரையும் 'சமாதானம்' செய்வதற்குப் பொலிஸார் முயன்றுள்ளனர் என்று அறிய வந்தது.

இவ்வாறான நிலையிலேயே கடற்படை அதிகாரி இந்த 'பலாத்கார' நடவடிக்கையில் ஈடுபட்டார் என்று தெரியவந்தது.

இதுகுறித்து இளவாலைப் பொலிஸாருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது 'உதயன்' என்றதும் அதனைத் துண்டித்து விட்டனர். மீண்டும் தொடர்பை ஏற்படுத்திய போது 'அப்படியான சம்பவம் ஏதும் நடக்கவில்லை' எனக் கூறிவிட்டு உடனடியாகவே தொடர்பு 'கட்' ஆகிவிட்டது. (ஒ-14)

## யாழ்.நகரில் நேற்று தீ விபத்து 'அழகு மாடம்' எரிந்து நாசம்

1 »

யப்படவில்லை. எனினும், சுவாமிப் படத்தட்டில் இருந்த விளக்குத் தீப்பற்றி இருக்கலாம் எனவும், தைப்பொங்கல் தினமாக நேற்று இருந்தமையால் யாராவது வெடி கொளுத்தி எறியும் போது கடையின் கூரை அல்லது ஏதாவது ஒரு பகுதியினூடாக அது உட்சென்று தீப்பிடித்திருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக யாழ். பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த விற்பனை நிலையத்தில் விளக்கேற்றிவிட்டுப் பின்னர் அதனை அணைத்துவிட்டு நிலையத்தைப் பூட்டி விட்டு அதன் உரிமையாளர் சென்றுவிட்டார் அதன் பின்னர் கடையின் உட்புறத்தில் தீப்பிடித்து புகை மண்டலம் எழுந்த போதே வெளியில் இருந்தவர்களுக்கு விபரீதம் தெரிய வந்தது.

இதுபற்றி அதன் உரிமையாளருக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டது. யாழ்.மாநகர சபை தீயணைக்கும் பிரிவுக்கும் இதுபற்றி அறிவிக்கப்பட்டது. விரைந்து வந்த தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

அதைத் தொடர்ந்து விற்பனை நிலையத்திலிருந்த எஞ்சிய பொருள்கள் மீட்டெடுக்கப்பட்டன. பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகிவிட்டன என்று அதன் உரிமையாளர் தெரிவித்தார். பொலிஸார் விசாரணைகளை நடத்துகின்றனர். (ஒ-4)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### அமரர் நவரட்ணம் தங்கராஜா

மலர்வு 09 - 12 - 1955



உதிர்வு 16 - 12 - 2011

கடந்த 16.12.2011 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது தந்தை நவரட்ணம் தங்கராஜாவின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (17.01.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த.சுரேன் (மகன்)
மிலன் மோட்டோர்ஸ்
மானிப்பாய்

பிரான்பற்று,
பண்டத்தரிப்பு

(13115)

## மரண அறிவித்தல்

### திருமதி
### மனோன்மணிதேவி பவானந்தன்



பருத்தித்துறை விநாயக முதலியார் தெருவைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணிதேவி - பவானந்தன் 14.01.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் சிவசம்பு - கமலாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் பவானந்தனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரவணானந்தன், சண்முகானந்தன் மற்றும் சிவறமணன் ஆகியோரின் அன்புத் தாயும் மதிவதனாவின் அன்பு மாமியும் வசீகரன், கலைவாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இராசதுரை, திலகவதி, ஜெகதேவி, காலஞ்சென்ற கௌரி மற்றும் சியாமிளாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சரவணபவானந்தன், யோகேஸ்வரி, கருணானந்தன் மற்றும் குகேந்திரன், ஆனந்தசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2012) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்த மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(சி-7818)

தகவல்:
சி.பவானந்தன்
(கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கினார் கே.பி.

விடுதலைப் புலிகளின் முன்னாள் ஆயுத முகவரும் தற்போது அரசின் காவலில் இருப்பவருமான கே.பி என்கிற குமரன் பத்மநாதன் நேற்று யாழ்ப்பாணத்தில் பொங்கல் விழாவை கொண்டாடினார். பருத்தித்துறை, இன்பருட்டியில் உள்ள 'நேர்டோ' அமைப்பின் அலுவலகத்தில் நடைபெற்ற பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டு பொங்கி உண்ட கே.பி, பிற்பகல் ஒரு மணியளவில் மீனவர்களுக்கு படகு வழங்கும் நிகழ்விலும் கலந்து கொண்டார். அங்கு 25 மீனவர்களுக்குப் படகுகள் வழங்கப்பட்டன.

## ஆலயம் அருகில் மதுபானம் விற்றவர் கைதானார்

யாழ்ப்பாணம், ஜன. 16

சட்டவிரோதமாக வீட்டில் வைத்து மதுபானம் விற்பனை செய்துவந்த பாசையூர் அந்தோனியார் ஆலயத்துக்கு அருகில் வசிக்கும் றொசான் என்பவரை யாழ். பொலிஸார் கைது செய்தனர்.

அவரைக் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நீதிமன்றில் முன்னிலையாகும் வகையில் பொலிஸார் வழகுத் தாக்கல் செய்திருந்தனர். எனினும் அன்றைய தினம் நீதிமன்றுக்கு சமூகம் தரவில்லை. இதனால் இந்த வழக்கு அடுத்த மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வழிபாட்டிடம் ஒன்றின் அருகில்வைத்து இவ்வாறு மது விற்பனையில் ஈடுபட்டு பக்தர்களுக்கும் பிரதேச மக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் சந்தேக நபர் செயற்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-4)

## வீதியில் அடாவடி சிக்கினார் இளைஞர்

யாழ்ப்பாணம், ஜன.16

மதுபோதையில், வீதியில் சென்றவரைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் மருதனார்மடம் சந்தியில் வைத்து சுன்னாகம் பொலிஸாரால் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டார்.

விஜீபன் என்று பெயர் குறிப்பிடப்படும் உடுவிலைச் சேர்ந்த பிரஸ்தாப இளைஞர் இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இளைஞரும் மற்றும் சிலரும் அவ் வழியே போக்குவரத்துச் செய்யும் யுவதிகள் உட்பட அனைவருடனும் பிரச்சினைகளை உண்டுபண்ணி வருகின்றனர் என ஏற்கனவே முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும்-

நேற்றையதினம் இந்தக் குழுவினர் அங்கு அநாகரிகமாக நடந்து கொண்டனர் என்று முறைப்பாடுகள் வந்தன என்றும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

# இந்தியப் பிரதமராக ஜெயலலிதா வரலாம்

### சோதிடர்கள் ஆருடம்

சென்னை, ஜன.16

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை எதிர்காலத்தில் இந்தியப் பிரதமர் பதவியில் அமர்த்துவதற்கான காய் நகர்த்தல்களை அவருக்கு நெருக்கமானவர்கள் இப்போதே மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

செல்வி ஜெயலலிதா பிரதமர் பதவியை அலங்கரிப்பாரென அவரின் ஆஸ்தான சோதிடர்கள் கடந்த வாரம் ஆரூடம் கூறியிருக்கும் நிலையில், இந்த ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

'துக்ளக்' சஞ்சிகையின் ஆசிரியரும், ஜெயலலிதாவின் தீவிர ஆதரவாளருமான சோ இராமசாமியும் இந்த விடயத்தை சூசகமாகத் தெரிவித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்ச்சியொன்றில் பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் துணைப் பிரதமருமான அத்வானி, குஜராத் முதல்வர் நரேந்திரமோடி, தமிழக பா.ஜ. தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன், முன்னாள் தலைவர் இல.கணேசன், இந்து முன்னணி ராம.கோபாலன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய சோ, "எதிர்வரும் லோக்சபா தேர்தலுக்குப் பின்னர் புதிய மத்திய அரசை அமைப்பதில், அ.தி.மு.கவின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருக்கும்.

ஒருவேளை, அக்கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் போய், மதச்சார்பற்ற கட்சிகள் என்ற பெயரில் தடை கிளம்புமானால், ஜெயலலிதாவை பிரதமராக்க பா.ஜ.க. ஒத்துழைக்கவேண்டும் - என்றார்.

சோவின் இந்தப் பேச்சு முதல்வர் ஜெயலலிதாவின் எதிர்காலத் திட்டத்தை கோடி காட்டியிருப்பதாக தமிழக அரசியல் ஆய்வாளர்கள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (ஒ-சி)


இரசாயனவியல்
Group மற்றும் Personal வகுப்புக்கள்
சி.அனோஜன் (B.Sc)
தொடர்பு இல. 0770781451

O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கான
SCCஇன் விசேட கணினிப் பயிற்சி நெறிகள்
Special Offer 4000/-
கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 4000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
இக்கல்வி ஆண்டில் மிக நவீன கணினித் தொழில்நுட்ப அறிமுகங்களுடன் ஆரம்பமாகும் பயிற்சிநெறிகள்
DIPLOMA IN MICROSOFT OFFICE
DIPLOMA IN HARDWARE ENGINEERING
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
DIPLOMA IN COMPUTER SCIENCE
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN VISUAL BASIC
DIPLOMA IN WEB DESINING
New Batches Start On
Batch I :-18.01.2012,
Batch II :-21.01.2012
குறிப்பிட்டளவு மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதால் ஆர்வமுள்ளவர்கள் உடன் பதிவுசெய்து கொள்ளுங்கள்
Softview Computer College
43, Arasady Rd, Thaddatheru Junction, Jaffna.



## கண்ணீர்க் காணிக்கை



நேற்றுமுன்தினம் (13.01.2012)
வெள்ளிக்கிழமையன்று காலமான யாழ். சிறைச்சாலை உத்தியோகத்தராகக் கடமையாற்றிய
**சிவபாதம் சிவரஞ்சன்**
அவர்களின் திடீர் மறைவையிட்டு சிறைச்சாலை சமூகம் அதிர்ச்சியடைவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
சிறைச்சாலை அத்தியட்சகரும், உத்தியோகத்தரும்.



இலண்டன் விசா
O/L சித்தியடைந்திருந்தால் மட்டும் போதுமானது. விசாக்குரிய இலவச ஆங்கில வகுப்புகள். (நிபந்தனைகளுக்குட்பட்டது) ஆலோசனைகள்
திசைகாட்டி பிறைவேட் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
0212219016
(13016)

துரித மீட்டல்
வினா- விடை வகுப்பு
A/L-2012- LOGIC
எஸ்.எஸ்.மனோகரன்
ஒவ்வொரு வாரமும் M.C.Q வினாக்கள் குறும் வினாவிடைகள் வழங்கப்படும்.
புதன், வெள்ளி 3.30 மணி.
BEACON யாழ். நகர். (வெலிங்டன் சந்தியடி)

முக்கிய மருத்துவச் சான்றிதழ் தவறிவிட்டது
ஆனைக்கோட்டையில் இருந்து காரைநகர் வீதியூடாக மற்றும் காக்கைதீவு வீதியூடாக யாழ்ப்பாணம் செல்லும் வழியில் இ.அருள்வேல் என்பவரின் NAVALOKA Hospital முக்கிய மருத்துவ சான்றிதழ்கள்(xtra, MRI Scan) தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு- 0772991810

விற்பனைக்கு
49 cc மோட்டார் சைக்கிள் 500Km ஓடியது விற்பனைக்குண்டு.
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (யாழ். நகரில் இருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் உதயன் பணிமனை, யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலதுபுறமாக வரும் ஒழுங்கை)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
புதிய பிரிவு ஆரம்பம் - 18.01.2012 (புதன் கிழமை)
அறிமுக இலவச வகுப்பு 17.01.2012 (செவ்வாய்)

| 182 ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் | இலங்கை வங்கி மாடி சங்கானை |
|---|---|
| காலை 9.00 - 10.00 O/L, A/L எழுதிய மாணவர், இளைஞர், யுவதிகள் | மாலை 4.00 - 5.00 O/L, A/L எழுதிய மாணவர், இளைஞர், யுவதிகள் |
| காலை 11.00 - 12.00 பல்கலைகழகம் தெரிவுபெற்றோர் | மாலை 5.00 - 6.00 அரச, தனியார் அலுவலர்கள் |

அனுமதி, புத்தகம் மற்றும் சான்றிதழ் இலவசம்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9503

Diploma Courses
upto 90%Discount.
Ms Office - Rs.~~4000~~
Multimedia - Rs.~~6000~~
Accounting - Rs.~~6000~~
AutoCAD-2&3D - Rs.~~10000~~
Web Development - Rs.~~10000~~
Free5 Course fee* Diploma Courses.. *MsOffice, AutoCAD, *Web Designing *Hardware *Accounting *DTP *English
MCS Supported By UNDP/AFRP
SMS your name & course to 772 395 895 & Get Scholorship

மணல் விற்பனைக்குண்டு
நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற மண்கும்பான் மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.
4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு. (கல்லு 1 -38/-)
தொடர்புகளுக்கு கண்ணா 0776766499


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.